# எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI

குரல் 07 அதிர்வு 83 வைகாசி 2024 editor@ethiroli.com தொ.பே:1800 960 162




# ஊழிக்கால கஞ்சி



படம்: மகிந்தன் - கிளிநொச்சி







ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்


ROYAL INTERNATIONAL MONEY TRANSFERS
EASY • FAST • SAFETY
நாணயமிக்க பணப்பரிமாற்றம்
'டன்டிநொங்' இல்
புதியதோர் சேவை
BOC
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
සම්පත් බැංකුව
சம்பத் வங்கி
Sampath Bank
UNION BANK
Amãna Bank
It's Your Bank
Same day bank transfer
No One Beat Our Rate
THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175
(03) 87649143
0406409403
royalinfomoney@gmail.com


KUMARAN'S
Cafe
Enjoy the
South Indian
Favourites
IDLI | DOSA | VADA | BAJJI
A Complete Vegetarian Restaurant
Call Us For Orders
0413 306 575
RIVERDALE VILLAGE PLUS SHOPPING CENTRE
200, HUMMINGBIRD BOULEVARD, TARNEIT, VIC - 3029.


SAME DAY DELIVERY SERVICE க்கு
தங்களின் அமோக வரவேற்புக்கு
எங்களின் அன்பு நன்றிகள்
SRI KUMARAN
our local store
Whatsapp us 0421 255 557
We have now expanded our services to
CBD | POINT COOK | MANOR LAKES | WERRIBEE | TARNEIT
உங்களின் ஆதரவு! எங்களின் உத்வேகம்!!
OUR STORES
SHEPPARTON | TARNEIT | CLYDE NORTH | NARRE WARREN | CARRUM DOWNS
info@srikumaran.com.au
www.srikumaran.com.au

# சிட்னியில் இரு கத்திக்குத்து தாக்குதல்கள்: பயங்கரவாத அறிவிப்பில் இன–மத பாகுபாடு?

**ஆறு பேரைக் கொன்ற பொன்டி ஜங்சன் தாக்குதல் – விரைவாக பயங்கரவாதம் இல்லை என அறிவிக்கப்பட்ட நிலையில், வேக்லி தேவாலய சம்பவத்தை ஏன் காவல்துறை பயங்கரவாதத் தாக்குதலாகக் கருதுகிறது என்பதில் இன–மத பாகுபாடு காட்டப்பட்டதாக சந்தேகங்கள் எழுந்துள்ளன)**

● ஐங்கரன் விக்கினேஸ்வரா

சிட்னி நகரத்தில் தொடரான இரண்டு கத்திக்குத்து தாக்குதல்களின் பின்னர், முழு நாடும் துயர்விலும், கொந்தளிப்பிலும் தத்தளித்தது. ஏனெனில் இவற்றில் ஒரு தாக்குதலை மட்டுமே பயங்கரவாதச் சம்பவமாக அரசின் காவல்துறை அறிவித்தமை இன-மத பாகுபாட்டின் அடையாளமாகத் தெரிந்தது.

அவுஸ்திரேலியாவில் பொதுவாக வன்முறையோ, கத்தி குத்து தாக்குதல்களோ அரிதாகவே நிகழ்கின்றன. ஆனால் சிட்னியில் அடுத்தடுத்து நிகழ்ந்த இரண்டு தாக்குதல்களும் பலரையும் பயமுறுத்தியுள்ளன.

புரிந்து கொள்ளக் கூடிய வகையில், இரண்டிற்கும் இடையே யான வன்முறை வடிவை ஒப்பீடுகளுக்கு வழிவகுத்தன.

ஆறு பேர் கொல்லப்பட்ட பொன்டி ஜங்சன் வெஸ்ட்பீல்ட் வணிக வளாக ( Bondi Junction Westfield) தாக்குதல் ஏன் பயங்கரவாதமாகக் கருதப்படவில்லை என்பது பலருக்கும் உள்ள கேள்வியாகும். ஆனால் இந்த அதிர்ச்சியூட்டும், மரணத் தாக்குதல் பற்றி நிறைய விவாதங்கள் உள்ளன.

பொன்டி ஜங்சன் வெஸ்ட்பீல்ட் வணிகவளாக மற்றும் வேக்லி தேவாலயத்தில் நடந்த சம்பவங்கள் பற்றி காவல் துறையினரிடமிருந்து மிகவும் மாறுபட்ட தகவல்களை ஊடகங்கள் கண்டன. மூன்று நாட்களில் நடந்த இரண்டு கத்திக்குத்துத் தாக்குதல்கள் சிட்னியிலும் நாடு முழுவதிலும் உள்ள பலரை அதிர்ச்சியிலும் கவலையிலும் ஆழ்த்தின.

ஆறு பேரைக் கொன்ற பொண்டி ஜங்சன் தாக்குதல் - விரைவாக பயங்கரவாதம் இல்லை என நிராகரிக்கப்பட்ட நிலையில், வேக்லி தேவாலய சம்பவத்தை ஏன் காவல்துறை பயங்கரவாதத் தாக்குதலாகக் கருதுகிறது என்பதில் இன-மத பாகுபாடு காட்டப்பட்டதாக சந்தேகங்கள் உள்ளன.

### தேவாலயத் தாக்குதல் மட்டுமா பயங்கரவாதம் ?

நியூ சவுத் வேல்ஸ் மாநில காவல்துறை கடந்த 16/4/24 அன்று அசிரியன் கிறிஸ்ட் தி குட் ஷெப்பர்ட் தேவாலயத்தில் பிஷப் மாரி இம்மானுவேல் மற்றும் பல வழிபாட்டாளர்கள் கத்தியால் குத்தப்பட்டதை உடனடியாக பயங்கரவாதச் சம்பவம் என்று அறிவித்தது.

ஆனால் பொன்டி ஜங்ஷனின் வெஸ்ட்ஃபீல்டில் இரு தினங்களுக்கு முன்பாக சனிக்கிழமை நடந்த கத்திக்குத்து ஒரு பயங்கரவாதச் சம்பவம் இல்லை என்று நிராகரிக்கப்பட்டது. மத்தியபொலிஸ் கமிஷனர், ரீஸ்கெர்ஷா, அரசே அந்த மதிப்பீட்டைச் செய்ததாக கூறினார்.

மத்திய சட்டத் திணைக்களம் ஒரு பயங்கரவாதச் செயலை "ஒரு அரசியல், மத அல்லது கருத்தியல் காரணத்தை முன்னெடுப்பதற்காக மிரட்டுவதன் மூலம் பொதுமக்களை அல்லது எந்தவொரு அரசாங்கத்தையும் வற்புறுத்துவது அல்லது செல்வாக்கு செலுத்துவது பயங்கரவாதம்" என வரையறுக்கிறது.

### பயங்கரவாதம் என்பதன் வரைமுறை:

இரண்டு சிட்னி கத்திக்குத்தும் சமூகத்தில் பயத்தையும், பாரிய விளைவுகளையும் ஏற்படுத்தியிருக்கலாம் என்றாலும், காவல்துறையின் ஆரம்பத் தகவல்கள் வெவ்வேறு இலக்குகளை பரிந்துரைக்கின்றன என்று ஒரு பயங்கரவாத நிபுணரான பேராசிரியர் கிரெக்பார்டன் கூறியுள்ளார்.



பொன்டி ஜங்சன் வெஸ்ட்பீல்ட் வணிக வளாகத்தில் (Bondi Junction Westfield) , தாக்குதல் நடத்திய விடயம் பெரும் பரபரப்பை உருவாக்கியுள்ள நிலையில், தாக்குதலாளி பெண்களை குறிவைத்து தாக்கியதற்கான காரணம் தற்போது வெளிவந்துள்ளது.

ஒன்பது மாதக் குழந்தை முதல் பலரைக் கத்தியால் குத்திக் கொண்டே சென்ற தாக்குதலாளியான ஜோயல் (Joel Cauchi, 40) என்னும் நபரைக் கண்ட பெண் பொலிஸாரான ஏமி (Amy Scott), "கத்தியை கீழே போடு" என சத்தமிட, ஜோயல் அந்தப் பெண் பொலிஸாரை நோக்கிப் பாய, ஏமி அவரை துப்பாக்கியால் சுட, சம்பவ இடத்திலேயே பலியானார் ஜோயல்.

### பெண்களைக் குறிவைத்த தாக்குதல்தாரி:

ஜோயலால் தாக்கப்பட்டவர்கள் மற்றும் உயிரிழந்தவர்களில் பெரும்பான்மையானோர் பெண்கள் என்னும் விடயம் பின்னர் கவனத்திற்கு வந்தது. 17 பேர் ஜோயலால் தாக்கப்பட்ட நிலையில், அவர்களில் 14 பேர் பெண்கள், மூன்று பேர் ஆண்கள். கொல்லப்பட்டவர்களில் ஒரேயொரு ஆணான Faraz Tahir (வயது-30), அந்த வளாகத்தில் பாதுகாவலராக பணியாற்றியவர். அவர் ஜோயலைத் தடுக்க முயன்ற போது கொல்லப்பட்டுள்ளார்.

இந்நிலையில், ஜோயல் பெண்களைக் குறிவைத்து தாக்குதல் நடத்தியது உண்மைதான் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. ஜோயலுடைய தந்தையான ஆண்ட்ரூ தனது மகன் குறித்து கூறும்போது, அவர் நீண்டகாலமாக மனநலம் பாதிக்கப்பட்டிருந்ததாகவும், அதற்காக மருந்து சாப்பிடுவதை சமீபத்தில் நிறுத்தி விட்டதாகவும், அதற்குப்பிறகே இந்த மோசமான தாக்குதல் நிகழ்ந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அவர் ஏன் பெண்களைக் குறிவைத்துத் தாக்கினார் என ஆண்ட்ரூவிடம் கேட்ட போது, தனக்கு ஒரு காதலி வேண்டுமென அவன் விரும்பினான். ஆனால், அவனுக்கு வெளியாட்களிடம் பழகும் திறன் இல்லை, கத்திகள் மீது ஆர்வம் கொண்ட அவன் தனக்கொரு காதலி கிடைக்காத கோபத்தை பெண்கள் மீது வெளிப்படுத்தியுள்ளான் என்று கூறியுள்ளார் ஆண்ட்ரூ.

### பாதிரியார் மீது தாக்குதல்:

இதேவேளை சிட்னி தேவாலயத்தில் நடந்த கத்திக் குத்து தாக்குதல் தொடர்பில் 16 வயதுச் சிறுவன் கைது செய்யப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலியா பொலிஸார் அறிவித்துள்ளனர்.

அவுஸ்திரேலியாவின் அசிரியன் கிறிஸ்ட் தி குட் ஷெப்பர்ட் ( Assyrian Christ The Good Shepherd) தேவாலயத்தில் ஏப்ரல் 16 ஆம் திகதி ஆராதனைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளை திடீரென முன்னோக்கி சென்ற 16 வயதுச் சிறுவன் மதகுருவை பலதடவை கத்தியால் குத்தியுள்ளான்.

இந்த கத்திக்குத்து தாக்குதல் சம்பவம் நேரலையாக ஒளிபரப்பாகியுள்ளது. இது குறித்து பொலிஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

அங்கு பாதிரியார் பிரார்த்தனை செய்து கொண்டு இருந்த போது திடீரென சந்தேகத்திற்குரிய நபர் ஒருவர்அவரை நோக்கி வந்தார். அப்போது அவர் பாதிரியாரின் நெஞ்சில் கத்தியால் குத்தினார்.

இதனால் அவர் சம்பவ இடத்திலே சரிந்து விழுந்து விட்டார். இதனை பார்த்து ஆலயத்தில் இருந்தவர்கள் அதிர்ச்சி அடைந்தனர். அந்த ஆலயத்தின் அவையில் உள்ள பெண்கள், முதியவர்கள் என எல்லோரும் பயந்து அலறினர். அங்குள்ள ஒரு சிலர் தாக்குதலை தடுத்து நிறுத்தவும் முயன்றனர்.

இந்தத் தகவலறிந்த பொலிஸார் அங்கு விரைந்து வந்தனர். அதற்குள் மக்கள் அந்நபரை பிடித்து வைத்திருந்தனர். அந்தநபரை பொலிஸார் விசாரித்தபோது , 16 வயது சிறுவன் இந்த தாக்குதலில் ஈடுபட்டு உள்ளான் என தெரியவந்துள்ளது.

### கைதான எழு சிறுவர்கள்

இதன்போது, நான்கு பேர் காயமடைந்துள்ளதுடன் தாக்குதல் நடத்தியவரும் காயமடைந்துள்ளாரெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த தாக்குதலானது மதரீதியிலான தீவிரவாதத்தினை தூண்டுவதற்காக மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.


அதேவேளை சிட்னி தேவாலயத்துக்குள் நடைபெற்ற பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள ஏழு சிறார்களில் ஐவர்மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவர்களுக்குப் பிணையும் தற்போது மறுக்கப்பட்டுள்ளது.

### முஸ்லிம் சமூகம் மேல் துவேசம்:

NSW மாநில இஸ்லாமிய கவுன்சில் இதனைப்பற்றி தெரிவிக்கையில் ' பொன்டி ஜங்சனில் நடந்த தாக்குதல் மனநலப் பிரச்சினையாக கருதப்பட்டது, ஆனால் தேவாலயத்தில் கத்தியால் குத்தப்பட்டது ஒரு சில மணிநேரங்களில் ஒரு பயங்கரவாதச்செயலாக அறிக்கப்பட்டது.

அவுஸ்திரேலிய சமூகத்திற்கு இது அனுப்பும் சமிக்ஞை என்னவென்றால், பயங்கரவாதம் முஸ்லிம்களுக்கு மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது போன்றும், சமூக ஒற்றுமை மீதான தாக்கங்கள் குறித்து முஸ்லிம் சமூகத்தில் எழுப்பப்பட்ட கவலைகளை தாம் புரிந்து கொள்வதாகவும்' இவ் அமைப்பு தெரிவித்துள்ளது.

'மேற்குலகில் பயங்கரவாதப் பிரகடமானது இஸ்லாமிய சித்தாந்தத்தால் தூண்டப்பட்டால், ஊடகங்களில் அதை ஒரு பயங்கரவாத தாக்குதலாக கருதுகிறார்கள். இதற்கு நேர்மாறாக, தீவிர வலதுசாரி நபர்களின் தாக்குதல்களுக்கு அவ்வளவு விரைவாக பயங்கரவாத முத்திரை குத்தப்படுவதில்லை' என NSW மாநில இஸ்லாமிய கவுன்சில் தெரிவித்துள்ளது.



# அவுஸ்திரேலியா – இந்திய உறவில் முறுகல்?

# இந்திய உளவாளிகள் நாடுகடத்தல்!

அவுஸ்திரேலியாவின் பாதுகாப்புத் திட்டங்கள் மற்றும் விமான நிலையப் பாதுகாப்பு தொடர்பான முக்கியமான தகவல்களைத் திருட முயன்ற இந்திய உளவாளிகள் அவுஸ்திரேலியாவில் இருந்து வெளியேற்றப்பட்டதாக ஏபிசி நிறுவனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியா எப்போதும் அமெரிக்கா, ஜப்பான் மற்றும் அவுஸ்திரேலியாவுடன் நல்லுறவு - பாதுகாப்பை பேணி வருகிறது. இந்தோ-பசுபிக் பகுதியில் சீனாவின் இராணுவக் கட்டமைப்பின் வளர்ச்சி அதிகரித்து வரும் முக்கிய பாதுகாப்பு பங்காளியாக இந்தியா கருதப்படுகிறது.


### "ஒற்றர்களின் கூடு" வலையமைப்பு:

அவுஸ்திரேலியாவின் உளவு அமைப்பான ASIO டைரக்டர் ஜெனரல் மைக் பர்கெஸ், 2021 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட தனது வருடாந்த மதிப்பீட்டில் இந்த உளவு வலயத்தை முதன் முதலில் குறிப்பிட்டார். ஆனால், எந்த நாடு நடவடிக்கைக்குப் பின்னால் இருந்தது என்பதை அவர் வெளியிடவில்லை.

இந்திய உளவுகாரர்கள் தற்போதைய மற்றும் முன்னாள் அரசியல்வாதிகள், வெளிநாட்டு தூதரகம் மற்றும் மாநில பொலிஸ் சேவை ஆகியவற்றுடன் நல்ல உறவுகளை வளர்த்துக் கொண்டனர், என ASIO டைரக்டர் ஜெனரல் மைக் பர்கெஸ் கான்பெராவில் கூறினார்.

அத்துடன் அவர்கள் தங்கள் நாட்டின் புலம்பெயர் சமூகத்தை இங்கே கண்காணித்தனர். அத்துடன் அவுஸ்திரேலியாவின் வர்த்தக உறவுகள் பற்றிய இரகசியத் தகவல்களைப் பெற முயன்றனர். பாதுகாப்பு தொழில் நுட்பத்தின் முக்கிய விவரங்களை அணுகக்கூடிய அவுஸ்திரேலிய அரசாங்க பாதுகாப்பு அனுமதி வைத்திருப்பவரை "ஒற்றர்களின் கூடு" எவ்வாறு வெற்றிகரமாக பணியமர்த்தியது என்பதையும் பர்கெஸ் விவரித்தார்.

"ஒற்றர்களின் கூட்டிற்கு" இந்தியாவின் வெளிநாட்டு உளவுத்துறை பொறுப்பு என்பதை தேசிய பாதுகாப்பு மற்றும் அரசாங்க புள்ளிவிவரங்கள் ஏபிசிக்கு உறுதிப்படுத்தியுள்ளன. ASIOவின் எதிர்-உளவுத்துறை நடவடிக்கையைத் தொடர்ந்து 2020 ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியாவில் இருந்து "ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு பிரிவு" (RAW) எனப்படும் இந்திய உளவுத்துறை அமைப்பின் இரண்டு உறுப்பினர்கள் வெளியேற்றப்பட்டனர்.





### மழுப்பும் மனப்பான்மை ?

ஆயினும் இந்தத்திடுக்கிடும் தகவல் வந்த போதும் மழுப்பும் மனப்பான்மையில் அவுஸ்திரேலியா அரசின் உயர் அமைச்சர் கருத்து தெரிவித்துள்ளார். நாங்கள் இந்தியாவுடனும், பிராந்தியத்தில் உள்ள பிற நாடுகளுடனும் நல்ல உறவை பேணுகிறோம். முக்கியமாக பொருளாதார உறவை மேலும் வலுப்படுத்துகிறோம் என்று மத்திய அரசின் பொருளாளர் ஜிம் சால்மர்ஸ் ஏபிசி டிவிக்கு தெரிவித்தார்.

இந்திய உளவுத்துறையின் வெளிப்பாடுகள் இரு நாட்டு உறவுகளை மீறி இருந்த போதிலும், அவுஸ்திரேலியா-இந்தியா உறவுகள் தொடர்ந்து பாதுகாக்கப்படும் என கன்பரா உயர் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

2023 இல் கனடா, இந்திய அரசாங்கத்திற்கும், இந்தியாவில் தனி மாநிலத்தை ஆதரித்த கனேடிய சீக்கிய சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதற்கும் இடை-யிலான தொடர்புகள் குறித்து பகிரங்கமாக கண்டனங்கள் எழுந்தன.



ஐங்கரன் விக்கினேஸ்வரா

கனடாவில் சீக்கியத் தலைவரை இந்திய உளவு அமைப்பு கொன்றதாக இருநாட்டு உறவுகளில் பெரும் முறுகல் நிலைமை ஏற்பட்டது. இதனைப் போல இந்திய -அவுஸ்திரேலியா உறவுகளில் முரண்பாடுகள் ஏற்படாமல் இருக்க இரு நாடுகளும் தீவிரமாக முயல்கின்றன.

### புது டெல்லியுடன் நல்ல உறவு

இந்திய உளவு நடவடிக்கையின் அறிக்கைகள் வெளிவந்த பின்னரும் கான்பெராவில் அவுஸ்திரேலியா அரசு புது டெல்லியுடன் "நல்ல உறவை" வெளிப்படுத்தியுள்ளது. இந்திய உளவாளிகளின் கூடு (Nest of Spies) என கூறப்படும் இந்த விவகாரத்தால் இரு அரசினதும் புலனாய்வு அமைப்புகளின் பரஸ்பர உறவை சீர்குலைக்கப்பட்டது என்பது உண்மையே.

இதனைப் பல்வேறு தகவல்கள் வெளிப்படுத்திய போதிலும், தற்போதைய மற்றும் முன்னாள் அமைச்சர்கள் இந்தியாவுடனான அவுஸ்திரேலியாவின் உறவுகளை மேம்படுத்த உடனடியாக ஆதரித்துள்ளனர்.

ஆனாலும் முன்னைய அரசில், அந்த நேரத்தில் உள்துறை அமைச்சராக இருந்த எதிர்க்கட்சித் தலைவர் பீட்டர் டட்டன், உளவுத்துறை அறிக்கைகள் குறித்து கருத்து தெரிவிக்கவில்லை. ஆனால் "வெளிநாட்டு தலையீட்டால் நாங்கள் மிகவும் குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலை எதிர்கொள்கிறோம்" என்பது தெளிவாக உள்ளது என்று குறிப்பிட்டார். ஏனெனில் இந்த உளவுப் பிரச்சினை அவர்களின் ஆட்சியிலேயே ஆரம்பமானதாக தகவல்களும் உண்டு.

அவுஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் அமெரிக்காவை உள்ளடக்கிய குவாட் அமைப்பில் இந்தியா ஒரு முக்கிய அங்கமாக உள்ளது. இப்பிராந்தியத்தில் முக்கியமான பங்காளியாக உள்ளனர். ஏனெனில் அவுஸ்திரேலியாவில் உள்ள அதே ஜனநாயக விழுமியங்களை இந்தியாவும் பகிர்ந்து கொள்கிறது என்று எதிர்கட்சித் தலைவர் கூறினார்.

இவர்கள் அனைவரும் நாங்கள் மிக நெருக்கமாக பணியாற்றுவதற்கு முக்கியமான கூட்டாளிகள், மேலும் உறவில் சிக்கல்கள் இருந்தால், அவர்கள் சரியான முறையில் சமாளிக்க வேண்டும். புலனாய்வு விவகாரங்கள் குறித்து தற்போதைய வெளியுறவு அமைச்சர் பென்னி வோங் கருத்து ஏதும் தெரிவிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்தியா பொதுவான கொள்கைகளின் அடிப்படையில், அவுஸ்திரேலியாவின் நலன்களுக்கும், அனைத்து ஈடுபாடுகளிலும் நமது மதிப்புகளுக்கும் நிலையானதாக உள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்திய 'உளவாளிகளின் கூடு' 2020 இல் ASIOit குறிவைத்து செயல்பட்டது. அத்துடன் உள்ளூர் அரசியல்வாதிகள், வெளிநாட்டு தூதரகம் மற்றும் மாநில காவல் துறை சேவையுடன் உறவுகளை குறிவைக்க முயன்றது.

அத்துடன் பாதுகாப்பு தொழில்நுட்பத்தின் ரகசிய விவரங்களை அணுகக்கூடிய அவுஸ்திரேலிய அரசாங்க பாதுகாப்பு அனுமதி வைத்திருப்பவரை வெற்றிகரமாக இந்தியா ஆட்சேர்ப்பு செய்தது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் அவுஸ்திரேலியாவில் உள்ள ஒரு பெரிய விமான நிலையத்தில் பாதுகாப்பு நெறிமுறைகள் பற்றிய தகவலை ஒரு பொது ஊழியரிடம் இந்திய உளவு அமைப்பு கேட்டறிந்தது.

### மோடிதான் 'பாஸ்' மாறுமா ?

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கடந்த 2023 ஆம் ஆண்டு மே மாதம் அவுஸ்திரேலியாவிற்கு விஜயம் செய்து, புலம்பெயர்ந்த இந்தியர்களுடன் சிட்னியில் பல பெரிய நிகழ்வுகளை நடத்தினார்.

சிட்னியில் பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அவுஸ்திரேலியாவின் பல பகுதிகளில் இருந்தும் 'மோடி ஏர்வேஸ்', 'மோடி எக்ஸ்பிரஸ்' என்று பெயர் சூட்டப்பட்ட சிறப்பு விமானங்கள், ரயில்களில் இந்திய வம்சாவளியினர் சிட்னி நகருக்கு வந்து கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

அவுஸ்திரேலிய பிரதமர் அன்ரனி அல்பானிஸ் அப்போது, "சிட்னியில் இந்திய பிரதமர் மோடிக்கு வரலாறு காணாத வரவேற்பு கிடைத்திருக்கிறது. உண்மையில் மோடிதான் 'பாஸ்' (Boss). அவுஸ்திரேலியாவின் வளர்ச்சியில் இந்திய வம்சாவளியினரின் பங்களிப்பு அதிகரித்து வருகிறது" என்றும் அவர் குறிப்பிட்டமை பலருக்கும் நினைவிருக்கும்.

ஆயினும் தற்போது எழுந்துள்ள முரண்பாடு எதுவரை நீடிக்கும் என எவருக்கும் புலப்படவில்லை.

### அவுஸ்திரேலிய -இந்தியப் பொருளாதாரம்:

அவுஸ்திரேலியாவில் இருந்து இந்தியாவின் இறக்குமதி 17 பில்லியன் அமெரிக்க டொலராக உள்ள நிலையில் ஏற்றுமதி 10.5 பில்லியன் அமெரிக்க டொலராக உள்ளது. இருப்பினும், அவுஸ்திரேலியாவில் இருந்து இந்தியா செய்யும் இறக்குமதியில் பெரும்பான்மையானவை (96%) மூலப் பொருட்கள் மற்றும் இடைநிலை பொருட்கள் ஆகும்.

அதிலும் குறிப்பாக நிலக்கரி அதிக அளவில் (அவுஸ்திரேலியாவின் இந்தியாவுக்கான ஏற்றுமதியில் 74%) இறக்குமதி செய்யப்படுகிறது. இதில் 71.4% கோக்கிங் நிலக்கரி ஆகும். மறுபுறம், அவுஸ்திரேலியாவுக்கான இந்தியாவின் ஏற்றுமதியில் முழுமையாக உற்பத்தி செய்யப்பட்ட தயாரிப்புகளான நுகர்வோர் பொருட்கள் ஆதிக்கம் செலுத்துகின்றன.

அவுஸ்திரேலியாவில் பயிலும் மாணவர்களின் கல்விக்காக ஒவ்வொரு ஆண்டும் சுமார் 4 பில்லியன் டொலரை இந்தியாவும் செலவழிக்கிறது.

எதிரொலி
ஆஸ்திரேலியா ETHIROLI
குரல்:07 அதிர்வு: 81 சித்திரை 2024 தொ.பே:1800 960 162

## தோல்வியை மட்டுமே தந்த பதினைந்தாண்டுகள்

இலங்கையில் போர் முடிவுக்கு வந்து 15 ஆண்டுகள் கடந்துவிட்டன. வரலாற்றில் தமிழினத்திற்கெதிராக நிகழ்த்தப்பட்ட மிகப் பாரிய இனப்படுகொலை நிகழ்த்தப்பட்டு 15 ஆண்டுகள் கடந்துவிட்டன. இப்பதினைந்தாண்டுகளுக்குள் இங்கு இடம்பெற்றது இனப்படுகொலைதான் என்பதை உலகம் ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழர்களுக்கெதிரான அநீதிகளுக்கு நீதி கிடைக்கவில்லை. மீளநிகழாமைக்கு பொறுப்புக்கூறப்படவில்லை. இறுதிப் போரின்போது இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்த்து என்பதும் சொல்லப்படவில்லை. இதனைத்தாண்டி இனப்பிரச்சினை தீர்வு விடயத்திலும் எந்தவித முன்னேற்றமும் இல்லாமல் இந்தப் பதினைந்தாண்டுகள் கடந்திருக்கின்றன.

தமிழர்கள் இந்தப் பதனைந்தாண்டுகளை நிதானமாகவும், சாதுர்யமாகவும் கையாண்டிருப்பின் மேற்குறித்த ஏதாவது ஒன்றிலாவது வெற்றிபெற்றிருக்க முடியும். தமிழீழ விடுதலைப்புலிகள் தம் ஆயுதங்களை மௌனிக்கும்போது தமிழ் இனத்தின் விடுதலைக்கான பொறுப்பை தமிழ் தேசிய கூட்டமைப்பிடமும், புலம்பெயர் – தமிழக மக்களிடமும் கையளித்துச் சென்றனர். இனப்படுகொலைக்குள்ளான தமிழர்கள் கூடவே இருந்து, தமிழர்களின் மொத்த அபிலாஷைகளையும் நிறைவேற்ற வேண்டிய தமிழ் தேசியக் கூட்டமைப்பு தனக்கிருந்த கூட்டுப்பொறுப்பிலிருந்து விலகி நடக்கத் தொடங்கியது. தமிழ் தேசியத்தை முன்னிறுத்தி எஜமானிய அரசியலொன்றை முன்னெடுக்கத் தொடங்கியது. இந்தப் போக்கானது தமிழ் தேசியக் கூட்டமைப்பை சிதைத்த்து. உள்ளாகவும் புறமாகவும் கரைத்து, ஈற்றில் அழித்தேவிட்டது. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பின்னர் ஆங்காங்கே பல கட்சிகள் உதிரிகளாகத் தலையெடுத்தன. இந்த உதிரிகளால் அரசியல் ரீதியிலும், மக்களைத் தலைமை தாங்கும் தளத்திலும் ஆழமாகத் தடம்பதிக்க முடியவில்லை. எல்லோரும் ஒற்றுமையை வலியுறுத்திக்கொண்டே தமக்கிடையிலான எல்லைக்கோடுகளை வலுப்படுத்தினார்கள். தம்மைத்தாமே சிதைத்துக்கொண்டார்கள் இரண்டு பாராளுமன்ற ஆசனங்களைப் பெற்றதும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி இவ்வாறானதொரு நிலையை சந்தித்தது. அதன் முடிவுரையை தமிழரசுக் கட்சி வலிந்து எழுதிக்கொண்டது. கட்சித் தலைமை விடயத்தில் தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்ட பிளவுகள் அக்கட்சியை மீளமுடியாத பாதாளத்தில் வீழ்த்தியிருக்கிறது. இத்தோடு தேர்தல் அரசியல் வெளியில் தமிழர்களுக்கு இருந்த ஒரேயொரு நம்பிக்கையும் தன்னைத் தற்கொலை செய்துகொண்டது.

இதற்கடுத்து தாயகத் தமிழர்களைக்கு இருந்த ஒரே நம்பிக்கை புலம்பெயர் தமிழர்கள்தான். இனப்படுகொலை, சர்வதேச நீதிப்பொறிமுறை, இனப்பிரச்சினை தீர்வுக்கான சர்வதேச அழுத்தம், முற்றாக அழிக்கப்பட்ட – சூறையாடப்பட்ட தாயகத்தின் பொருளாதாரக் கட்டுமானம் எனப் பல பொறுப்புக்கள் புலம்பெயர் தளத்தின் தலைமீதிருந்தன. தனக்கிருக்கும் இந்தப் பொறுப்பை உணராத புலம்பெயர் தளம் விரைவாகவே தன்னை சிதைத்துக்கொண்டது. இலங்கை அரசின் சதிகள், இந்தியா உள்ளிட்ட உலக நாடுகளின் சதிகள் ஆகியவற்றில் சிக்கிச் சீரழிந்தன. விடுதலைப் புலிகள் தூர நோக்கோடு உருவாக்கி வைத்திருந்த புலம்பெயர் கட்டமைப்புகள், அமைப்புகள் அனைத்துமே புலிகளற்ற இரண்டு ஆண்டுகளுக்குள் உடைந்து நொருங்கின. பிரிந்து சென்ற அமைப்புக்களும், அதற்குள் இருந்த சில தாயக அபிமானிகளும் காட்டிய அக்கறையால் தாயகத்திற்கு சில நன்மைகள் கிடைத்தன. வாழ்வாதாரம் என்கிற பெயரில் வழங்கப்பட்ட உதவிகள் மக்களின் பசியாற்றின. ஆனால் தாயகத்தில் நிரந்தரமான பொருளாதார விருத்தியை ஏற்படுத்த தவறிவிட்டன. வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்ட வீடுகள் பலவற்றில் கோழிக்கூடுகளும், ஆட்டுப்பட்டிகளும் மட்டுமே எஞ்சிக்கிடக்கின்றன. உதவித்திட்டங்கள் சரியான முயற்சியாளர்களுக்கு சென்று சேராமையும், வாழ்வாதாரமளிப்பின் பின்னர் உரிய வகையில் மதிப்பீடுகள் நடத்தப்படாமையும் இத்தோல்விக்குப் பிரதான காரணங்கள்.

இதனைத்தாண்டி தாயக மக்கள் இலங்கை அரச படைகளின் நில ஆக்கிரமிப்புக்கு எதிராக, காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கான நீதிக்காக, பௌத்தமயமாக்கலுக்கு எதிராக, சிங்களமயமாக்கலுக்கு எதிராக நடத்திய போராட்டங்களை குத்தகைக்கு எடுத்துக்கொள்ள புலம்பெயர் தமிழ் அமைப்புகளும் தனி நபர்களும் நடத்திவருகின்ற போட்டி இந்நிலையை ஏற்படுத்தியுள்ளன. இந்த அமைப்புக்களும் தனிநபர்களும் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் போராட்டங்களின்மீதும், காணாமலாக்கப்பட்டோர் சங்கங்களின் மீதும் நடத்தும் போட்டி அந்தப் போராட்டங்களை சிதைத்திருக்கிறது. அத்தகைய சிதைவினால் வெறுப்புற்றுள்ள பாதிக்கப்பட்டவர்கள் தம் புள்ளிகளைத் தேடுவதிலிருந்தே ஒதுங்கிக்கொண்டார்கள். இலங்கை அரசு செய்யவேண்டிய வேலையை இவர்கள் கனகச்சிதமாக செய்துமுடித்திருக்கிறார்கள்.

இப்படித்தான் கடந்த பதினைந்தாண்டுகள் நிறைவடைந்திருக்கின்றன. தமிழர்களின் இன விடுதலை அரசியல் மிக வீரியமாக முன்பாய்ந்திருக்க வேண்டிய இந்தப் பதினைந்தாண்டுகள், வீணாக்கப்பட்டிருக்கின்றது. எவ்விதப்பயனுமற்றதாக்கப்பட்டிருக்கின்றது.

# ஈழம் - காசா
# மனிதாபிமானத்திற்கும் பாராபட்சம் உண்டு





● ஆர்.சுகந்தன்

ஈழம் - பாஸ்தீனம், இரண்டுக்குமே பெரியளவில் வித்தியாசமிருப்பதில்லை. ஈழ நிலத்தில் பௌத்த சிங்களப் பேரினவாத அரசு உலகத்தின் ஆதரவோடு தமிழ் மக்களை இனப்படுகொலை செய்தது. பாலஸ்தீன நிலத்தில் யூதப் பெரும்பான்மைவாத இஸ்ரேலிய அரசு உலகத்தின் ஆதரவோடு பாலஸ்தீனியர்களைப் படுகொலை செய்துவருகின்றது. இரண்டு நிலத்தின் இனப்படுகொலைகளுக்கும் ஆதரவாக அமெரிக்கா நிற்கிறது என்பது பொதுவிதி. இந்த ஆதரவினைப் பயன்படுத்திக்கொண்ட இரு அரசுகளுமே தன் படைகளைக் கொண்டு கண்மூடித்தனமான - மானுடகுலமே வெட்கித் தலைகுனியுமளவிற்கான கொடூரங்களை நிகழ்த்தின. நிகழ்த்திக்கொண்டிருக்கின்றன.

ஈழம், பாலஸ்தீனம் ஆகிய தனித் தேசம் கோரிப் போராடுகின்ற இரு தேசங்களிலும் இடம்பெறும் இனப்படுகொலை ஒரேதன்மையானதாகினும், இரு தேசங்களையும் சில நாடுகள் கையாளும் விதம் வித்தியாசமானது. மனிதவுரிமைகளைக் காப்பாற்றுகின்றதாகச் சொல்லிக்கொள்கின்ற சர்வதேச நிறுவனங்கள்கூட இந்த விடயத்தில் இரட்டைவேடமே போடுகின்றன. 2009 ஆம் ஆண்டு ஈழத்தில் இடம்பெற்ற இனப்படுகொலையைத் தடுத்து நிறுத்தத் தவறியமை குறித்து, வருத்தமளிக்கிறது என்கிற வார்த்தையோடு மட்டும் கடந்துவிட்ட ஐ.நா. உள்ளிட்ட சர்வதே அமைப்புகள் பாலஸ்தீன விடயத்தில் பாலஸ்தீனத்தைத் தனியே பிரித்துவிடக்கூடியளவிற்கு “அலுவல்” பார்க்கின்றன.

ஈழத்தில், இறுதிப் போரில் மாத்திரம் (மூன்று மாதங்களுக்குள்) **146,679** தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர் எனச் சொல்லப்படுகின்றது. இந்தப் படுகொலைகளுக்கு படைகளை வழிநடத்திய, கட்டளைகளை வழங்கியவர்கள் இலங்கைத் தீவிற்குள்ளேயும், வெளியேயும் அதியுயர் பதவிகளை வகிக்கின்றனர். அத்தரப்பினரை இலங்கையின் ஜனாதிபதியாக்கி வேடிக்கை பார்த்தது உலகம். இந்த மனிதகுல விரோதிகளுக்கு எதிராக சர்வதேச ஊடகங்களும், உள்ளூர் ஊடகங்களும் ஆதாரங்களை வெளிப்படுத்திய போதும் சர்வதேச அமைப்புகள் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. ஆனால் பாலஸ்தீன இனப்படுகொலைக்குக் கட்டளைகளை வழங்கிக்கொண்டிருக்கும் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவைக் கைதுசெய்ய பிடியாணை பிறப்பிக்குமளவுக்கு சர்வதேச நீதிசார் அமைப்புக்கள் “இறங்கி வேலைசெய்கின்றன”.

கடந்த **06** மாதங்களுக்குள் மாத்திரம் காஸா மீது இஸ்ரேலிய படையினர் நடத்திய தாக்குதல்களில் **26,000** இற்கு மேற்பட்ட பாலஸ்தீனிய சிறார்கள்கொலை செய்யப்பட்டும், காயமடைந்துமிருப்பதாகவும் சிறுவர் பாதுகாப்பு நிதியம் அறிக்கையிட்டுள்ளது. **1948** ஆம் ஆண்டிலிருந்து இலங்கைத் தீவில் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இனப்படுகொலை நடவடிக்கையின்போது கொல்லப்பட்ட, காயமடைந்த எத்தனை சிறார்கள் பற்றிய தகவல்கள் இந்த அமைப்பிடம் உண்டு? இலங்கையில் சிறார்கள் இராணுவம் நடத்திய எறிகணை வீச்சுக்களின் கொல்லப்பட்டனர். விமானத் தாக்குதலில் கொல்லப்பட்டனர். அரசு விதித்த மருந்துத் தடைகளால் கொல்லப்பட்டனர். இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் கொல்லப்பட்டனர். இறுதியில் இராணுவத்திடம் சரணடைந்த சிறார்கள் பலருக்கு என்ன ஆனதென்றே தெரியாத நிலை இற்றைவரை நீடிக்கிறது.

(07ஆம் பக்கம் பார்க்க)

### வாசகர் களம்

எரொலியில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்கள் குறித்து வாசகர்களின் கருத்துகள் எதிர்பார்க்கப்படுகின்றன. காத்திரமான கருத்துக்கள் பிரசுரிக்கப்படும். அதுமட்டுமின்றி எதிரொலி பேசாத சமூக கருத்துகளையும் எழுதி அனுப்புங்கள்.

நன்றி
ஆசிரியர்பீடம், எதிரொலி

editor@ethiroli.com
PO Box 6313, Dandenong
Victoria 3175



# ஈழம் - காசா மனிதாபிமானத்திற்கும் பாராபட்சம் உண்டு

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

உலகளவில் சிறுவர்களுக்கு எதிரான அநீதிகளுக்கு எதிராகப் பணியாற்றும் நிறுவனங்களிடம் ஏதாவது தகவல்கள் உள்ளனவா?


அண்மையில் சர்வதேச ஊடகங்களில் ஒரு ஒளிப்படம் பிரபலமாகியிருந்தது. அதாவது பட்டினிச் சாவினை எதிர்நோக்கும் பாலஸ்தீன சிறார்களைக் காப்பாற்றுவதற்காக இஸ்ரேல் உள்ளிட்ட நாடுகள், தொண்டு நிறுவனங்கள் பரசூட் மூலமாக உணவுப் பொதிகளை காசா மீது வீசியமையைக் காட்டும் ஒளிப்படமே அது. பாதி உணவு நிலம் முழுவதும் சிந்திச் சிதறிக் கிடக்க அவற்றைக்கூட சிறார்கள் தம் கைகளால் பொறுக்கி எடுத்து உண்டதையும் படம்பிடித்திருந்தார்கள். இதே நிலைமைகள் 2009 ஆம் ஆண்டில் முள்ளிவாய்க்காலிலும் ஏற்பட்டன. பல சிறார்கள் உணவின்றி இறந்துபோனார்கள். உமியைப் பிடைத்து அதிலிருந்து கிடைக்கும் அரிசியைக் கொண்டு உப்பில்லாக் கஞ்சி காய்ச்சி சிறார்களின் பசியாற்றிய சம்பவங்கள் நடந்துகொண்டிருந்தன. இந்த வேளைகளிலெல்லாம் சர்வதேச மனிதாபிமானம் ஈழத்தின் மீது எட்டியும் பார்க்கவில்லை. 'எதைச் செய்தாவது புலிகளை அழித்துவிடு' என இலங்கை அரசுக்கு உத்தரவு வழங்கிவிட்டு சர்வதேச நாடுகளும், சர்வதேச அமைப்புக்களும் அமைதிகாத்தன.

பாலஸ்தீன விடயத்தில் இலங்கை அரசு காட்டிவரும் அக்கறையும் மிகுந்த ஆச்சரியமானது. இலங்கை தீவில் தமிழர்களின் சுயநிர்ணயக் கோரிக்கைக்கான போராட்டத்தைப் பயங்கரவாதம் எனப் பச்சைகுத்தி அழித்த மகிந்த ராஜபக்ச, பாலஸ்தீன் விடுதலை பெறவேண்டும் என அரும்பாடுபட்டார். உலகம் முழுவதும் கடன்வாங்கி நாட்டுக்கு சேவை செய்துகொண்டிருக்கும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பாலஸ்தீனத்துக்கு உதவியாகப் பெருந்தொகை நிதியை நன்கொடையாக அளித்துள்ளார். அதேபோல இலங்கையில் இப்போதும் ஒட்டுமொத்த தமிழர்களையும் பயங்கரவாதிகளாகக் கருதும் சிங்கள மக்கள் தன்னெழுச்சியாகப் பாலஸ்தீனியர்கள் விடுதலை பெறவேண்டும் என வேண்டிக்கொள்கின்றனர். இனப்படுகொலையில் ஈடுபடும் இஸ்ரேலியர்களுக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். நிதிசேகரித்து உதவுகின்றனர். தம் சொந்த நாட்டில் வாழும் இனத்தைத் தாமே இனப்படுகொலை செய்துகொண்டு, பிற நாடொன்றில் இனப்படுகொலைக்குள்ளாகும் இனத்துக்கு உதவுதும், அவர்களுக்கு ஆதரவாகச் செயற்படுவதும் எவ்வாறான மனநிலை என்பதை விளங்கிக்கொள்ள முடியிவில்லை.

ஈழத்தமிழர்களைப் போலவேதான் பாலஸ்தீனியர்களுக்கு எதிரான இனப்படுகொலையும் நீண்டதொரு வரலாற்றைக்கொண்டது. ஈழத்தமிழர்களுக்கு முடிவிடமான முள்ளிவாய்க்கால் போல பாலஸ்தீனியர்களின் முடிவிடமாக காசா மாறியிருக்கிறது. இந்நிலையில் காசாவில் இடம்பெறும் மனிதவுரிமை மீறல்களையும், இனப்படுகொலையும் கண்டித்து அமெரிக்க உள்ளிட்ட பல்வேறு நாடுகளிலும் வெகுசனப் போராட்டங்கள் இடம்பெற்றுவருகின்றன. ஆனால் 2009 ஆம் ஆண்டில் ஈழத்தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை நிகழ்த்தப்பட்டபோது இந்த வெகுசனத் திரட்சியைக் காட்டமுடியாமல்போனதை ஏன்? இன்று சமூக ஊடகங்கள் பெருகிவிட்டாலும், பேஸ்புக் போன்ற ஊடகங்கள் அப்போதும் இருந்தன. ஆனால் ஈழத்தமிழரின் இனப்படுகொலைப் படங்களைப் பதிவேற்றக்கூட இந்த ஊடகங்களில் அனுமதிக்கப்படுவில்லை. ஏன் இந்த பாராபட்சம்?

உண்மையில் ஈழத்தமிழர்களுக்கு எதிரான இலங்கை அரசின் இனப்படுகொலைக்கும், பாலஸ்தீன மக்களுக்கு எதிரான இஸ்ரேலிய அரசு மேற்கொள்ளும் இனப்படுகொலைக்கும் பெரியளவு வித்தியாசங்கள் இல்லை. இனப்படுகொலை விடயத்தில் இலங்கை, இஸ்ரேல் ஆகிய இரு அரசுகளுமே ஒரே வழித்தடத்திலேயே பயணிக்கின்றன. கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையை எப்படி நிகழ்த்துவது? தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டத்தை எப்படி பயங்கரவாதமாக சித்திரிப்பது உள்ளிட்ட விடயங்களில் தம் அறிவைத் தமக்கிடையில் பகிர்ந்துகொள்கின்றன. இலங்கை அரசு அம்பாறையில் ஆரம்பித்த இனப்படுகொலையின் ஒரு கூறாகிய தமிழர்களின் நிலங்களை அபகரித்து சிங்களவர்களைக் குடியேற்றும் வேலைத்திட்டத்தைத்தான் பாலஸ்தீனம் முழுவதும் இஸ்ரேல் மேற்கொண்டு வருகின்றது. தமிழர்களின் எல்லா இடங்களையும் அபகரித்துக்கொண்டு, எப்படி முள்ளிவாக்காலில் பாரிய இனப்படுகொலையை இலங்கை அரசு தமிழர்கள் மீது நடத்தியதோ, அதே போன்றதொரு நிகழ்ச்சிநிரலைத்தான் இன்று காசாவில் இஸ்ரேல் செய்துகொண்டிருக்கின்றது. எனவே இனப்படுகொலை விடயத்தில் இலங்கை, இஸ்ரேல் ஆகிய இரண்டு பலம்பொருந்திய - சர்வதேச ஆசிபெற்ற நாடுகளும் ஒரே தராசில் வைத்துப் பார்க்கப்படவேண்டியவை. அதே போல இந்த இரண்டு அரசுகளாலும் இனப்படுகொலைக்குள்ளாகிக்கொண்டிருக்கும் ஈழத்தமிழர்கள், பாலஸ்தீனர்கள் ஆகிய இரண்டு தேசிய இனங்களும் விரைவாக இனப்படுகொலைக்குள்ளாகும் இனங்களின் தராசில் சம அளவில் வைக்கப்படவேண்டியவை. சம நீதி வழங்கப்படவேண்டியவை.




Sai Shree Foods
Pty. Ltd.
AUSTRALIA - CANADA - INDIA
REMARKABLE QUALITY
AND RELISHING TASTE.
ROSE & ALMOND LASSI
PUNJABI LASSI
MANGO LASSI
Sai Shree Foods
IDLI & DOSA MIX
PANEER
Natural Indian Style Yoghurt 1 kg
Natural Indian Style Yoghurt 2 kg
If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.
We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)
HEAD OFFICE: Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175
DISTRIBUTORS: Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin



# பொதுவேட்பாளரால் பிரிவினை வரவே வராது!

**வடக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் நீதியரசருமான க.வி. விக்னேஸ்வரன் தற்போது தாயகத்தின் அரசியல் சூழமைவு குறித்து எதிரொலிக்காக வழங்கிய பிரத்தியேக நேர்காணல் இது.**

**நேர்கண்டவர் : ஜெரா**

**கேள்வி :- தமிழ் ஜனாதிபதி வேட்பாளர் விடயத்தில் தற்போதைய நிலைவரம் என்ன?**

**பதில் :-** பல கட்சித் தலைவர்களும் சிவில் சமூகத்தவரும் பொதுத் தமிழ் ஜனாதிபதி வேட்பாளரை நியமிக்க வேண்டும் என்று முடிவெடுத்துள்ளார்கள். அதன் காரணத்தைப் புரியாமல் வேறு சிலர் பொது வேட்பாளரை நியமிப்பதை எதிர்க்கின்றார்கள். வேறு சிலர் தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்று கூறுகின்றார்கள். இது தான் இப்போதைய நிலை. பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதே சாலச் சிறந்தது என்பது எனது அபிப்பிராயம்.

**கேள்வி :- தற்போது தமிழ் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை களமிறக்க வேண்டிய தேவை என்ன?**

பதில் :- இதுவரை தமிழ் மக்களைச் சிங்களத் தலைவர்கள் ஆசைகாட்டி மோசம் பண்ணியுள்ளார்கள். மற்றவராவது சற்று எம்மேல் அனுதாபம் காட்டுவார் என்று நினைத்து நாமும் ஒவ்வொரு முறையும் வாக்களித்து ஏமாற்றப்பட்டுள்ளோம். இம்முறை சகல சிங்கள தேசியக் கட்சிகளும் சிங்களவர் சார்பில் ஒன்றிணைவதாகக் கூறப்படுகின்றது. ஆகவே தமிழரின் ஒற்றுமை முன்னரிலும் பார்க்க தற்போது மிக அவசியமாகின்றது.

அப்படி நாம் ஒன்று சேர்ந்தால் தமிழ் மக்கள் சிங்களப் பேரினவாத அடக்குமுறைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிவரும் என்று ஒரு சாரார் பயப்படுகின்றார்கள். இன்றைய காலகட்டத்தில் நாடு பொருளாதார ரீதியாக அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கும் போது கலவரங்கள் வெடிக்க இடமில்லை. வெடித்தால் நாட்டைத் திரும்பவும் பழைய நிலைக்குக் கொண்டுவர முடியாது போய்விடும் என்பதைச் சிங்களத் தலைவர்கள் அறிவார்கள். என்றாலும் தமிழ் மக்கள் அனைவரதும் தற்கால நலன்களையும் வருங்கால நலன்களையும் கவனத்தில் எடுத்து ஒரு நடவடிக்கையில் இறங்கலாம். முக்கியமாக எல்லாத் தமிழ்க் கட்சித் தலைவர்களுடனும் பேசி “தமிழர்தம் பொது வேட்பாளருக்கு முதல் வாக்கினை அளியுங்கள். இரண்டாவது மூன்றாவது விருப்பு வாக்குகளை உங்களுக்குப் பிடித்த ஒரு வேட்பாளருக்கு அளியுங்கள்” எனலாம். இதனால் தமிழ் மக்களின் ஒருமைத்துவம் பேணப்படும். அதே நேரத்தில் குறித்த சில கட்சிகளுக்கு இருக்கும் அரசியல் கடப்பாடுகளும் பேணப்படும்.

நாம் தமிழராக இணையும் போது ஏன் சிங்கள வேட்பாளரை இதற்குள் கொண்டு வருகின்றீர்கள் என்று யாராவது கேட்கலாம்.

அதற்குப் பதில் எமது பொது வேட்பாளர் தேர்தலில் வெல்வதற்காகப் போட்டியிடவில்லை. எமது தமிழ் மக்களின் ஒருமித்த அரசியல் எதிர்பார்ப்புக்களை உலகிற்கு அறிவிக்கவே நாம் ஒன்றிணைகின்றோம். பழைய கால கொடூரத்தைப் பொறுத்த வரையில் தமிழ்த் தேசியத்தை தழுவி இன்றுள்ள சிலரும் தமிழ்த் தேசியத்தைப் புறக்கணிப்பவர்களும் ஒருவர்க்கொருவர் சளைத்தவர்கள் அல்லர். ஆனால் நாம் யாவரும் தமிழ் பேசும் மக்களாக இனியாவது ஒருமித்து சிந்திக்கப் பழகிக் கொள்ள வேண்டும். இன்றிலிருந்தே எமது எதிர்கால வாரிசுகள் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

பணத்தைச் சுருட்டக் கூடியவர்கள் தங்கள் மக்களை வெளிநாடுகளுக்கு அனுப்பிக் கொண்டிருக்கின்றார்கள். ஏற்கனவே போரின் போது குறைந்து போன எமது சனத்தொகை இன்று மேலும் குறைந்து கொண்டுவருகின்றது. வன்னி நிலங்கள் சூறையாடப்பட்டு வருகின்றன. படையினரின் பங்கு இச் சூறையாடலுக்கு ஒப்புதல் வழங்கி நிற்கின்றது. எம்முள் வேற்றுமைகள், வித்தியாசங்கள், முரண்பாடுகள் தினந்தோறும் கூடிக் கொண்டு வருகின்றன.

ஆகவே ஒரு பொதுத் தமிழ் ஜனாதிபதி வேட்பாளர் எமது நிலையை உலகறியச் செய்யும் அதே நேரம் எமக்குள் ஒற்றுமை சாத்தியமானது என்பதை உலகுக்கு எடுத்தியம்புவார். எமக்கு அரசியல் ரீதியாக என்ன வேண்டும் என்பதை முன்வைத்து இதுவே தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கள் என்பதை வெளிக்காட்டி அதற்காக பெரும்பான்மைத் தமிழ்ப் பேசும் மக்களின் ஒப்புதலைப் பெற்று உலகறியச் செய்யலாம்.

விதவிதமான தமிழ்க் கட்சிகளின் அரசியல் நிலைப்பாடு ஒன்றே என்று கூறலாமா என்று யாராவது கேட்கலாம். வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழுமிடங்கள் என்பதில் இக் கட்சிகளிடையே முரண்பாடுகள் இருக்க முடியுமா? சர்வதேச குடியியல் அரசியல் உரிமைகள் பற்றிய சாசனத்தின் (ICCPR) முதலாவது ஏற்பாட்டின் படி ஒரு மக்கள் குழாமிற்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை இக் கட்சிகள் மறுக்க முடியுமா? மேலும் வடக்கு-கிழக்கு தமிழ் பேசும் மக்கள் ஒரு மக்கள் குழாம் என்பதை மறுக்க முடியுமா? ஆகவே எம்முள் அரசியல் ரீதியாக ஒரு ஒற்றுமை நிலையை எமது வருங்கால தமிழ் சந்ததியினரை மனதில் வைத்து நாம் ஏற்படுத்தலாம் அல்லவா?

**கேள்வி :- தமிழ் ஜனாதிபதி வேட்பாளராக தவத்திரு வேலன் சுவாமிகளை நியமிக்கலாம் என நீங்கள் விரும்புவதாக ஊடகங்களில் பேசப்படுகின்றது. மதம் சார்ந்த ஒருவர் தமிழ் சமூகத்தின் அரசியல் பிரதிநிதியாவதை தமிழர்கள் ஏற்பார்கள் என்று கருதுகின்றீர்களா?**

**பதில் :-** கிறிஸ்தவ பாதிரிமார்கள் தேர்தல்களில் நிற்க அவர்களின் மத நிறுவனங்களால் தடைசெய்யப்பட்டுள்ளார்கள். இராயப்பு ஜோசப் அடிகளார் உயிருடன் இருந்து மேற்படி தடை இல்லாமல் இருந்திருந்தால் அவரே பொருத்த மானவராகக் கருதப்பட்டிருப்பார். வேலன் சுவாமிகளும் முன்னர் சின்மய மிஷனுடன் தொடர்பிருந்த காலத்தில் இவ்வாறு மக்கள் சார்பில் போட்டியிட அனுமதி மறுக்கப் பட்டிருந்தார். ஆனால் தற்போது அவருக்கு அந்தத் தடையில்லை.

**எப்போதும் பிரிந்து வாழவே பழக்கப்பட்டு விட்டோம்**

அவரை ஒரு நல்ல மனிதராகவே கிறிஸ்தவர்கள் பார்க்கின்றார்கள். அவர் படித்தவர், பண்பாளர், தமிழ் மக்கள் மீது மட்டற்ற அன்பு கொண்டவர். மதரீதியாக தமது மதத்தை உயர்த்திக் காட்டவோ மற்றவர்களைத் தமது மதத்திற்கு மதம் மாற்றவோ முற்படாதவர். அவ்வாறு செய்வது பிழையென்று கருதுபவர். அவரை மதரீதியாகப் பார்க்காது தகுந்த வேட்பாளர் என்று பார்த்தால் உங்கள் சந்தேகம் நீங்கும். ஆனால் தற்போது எனக்குத் தரப்படும் தகவல்களின்படி வேலன் சுவாமி அவர்கள் தேர்தலில் நிற்க மறுத்துவிட்டார் என்றே கேள்விப்படுகின்றேன்.

**கேள்வி :- கட்சிகளின் உள்வீட்டுப் பிரச்சனைகளைப் பேசித் தீர்க்க முடியாது நீதிமன்றம் வரை செல்வது ஏற்கத்தக்கதா?**

**பதில் :-** தவிர்க்கப்பட வேண்டும். ஆனால் பேசித் தீர்க்க முடியாது போனால், தோற்றவர்கள் விட்டுக் கொடுக்க முன்வராது போனால் நீதிமன்றத்தை நாடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படக் கூடும். தம்மையும் தமது கொள்கைகளையும் மக்கள் புறக்கணிக்கின்றார்கள் என்பதை சிலர் ஏற்க மறுக்கின்றார்கள். அதன் வழி வரும் பாதிப்புக்கள் நீதிமன்றத்தை நாட வேண்டிய தேவையை ஏற்படுத்துகின்றது. முன்னர் பேசித் தீர்க்க முடியுமாக இருந்திருந்தால் அதற்குக் காரணம் பொதுநலம் கருதி சுயநலத்தைத் தியாகம் செய்ய அப்போது உறுப்பினர்கள் இருந்தார்கள். இன்று சுயநலமிகளே ஏராளம்.

**கேள்வி :- இவ்வாறு தம் கட்சிப் பிரச்சனைகளைத் தீர்க்க முடியாதவர்களை இனியும் மக்கள் எவ்விதத்தில் தம் அரசியல் பிரதிநிதிகளாக ஏற்பார்கள்?**

**பதில் :-** அதற்கு அவர்கள் காரணமில்லை. தமிழ் மக்களே காரணம். நாம் முன்பிருந்தே சேர, சோழ, பாண்டியர் என்று பிரிந்திருந்தோம். இங்கு யாழ்ப்பாணத்தான், மட்டக்களப்பான், கொழும்பான் என்று பிரிந்திருந்தோம். நாம் ஜீ.ஜீ யின் ஆதரவாளர்கள், நாம் தந்தை செல்வாவின் ஆதரவாளர்கள் என்று பிரிந்திருந்தோம். பின்னர் புலிகள் ஆதரவாளர்கள், புலிகளை எதிர்ப்பவர்கள் என்று பிரிந்திருந்தோம். பிரிந்திருப்பதே எமது போக்கு. முஸ்லிம் சகோதரர்களைப் பாருங்கள். தமது இனத்திற்கு ஏதேனும் பங்கம் ஏற்பட்டால் உடனே அவர்கள் ஒன்று சேர்வார்கள். நாங்கள் அப்படி அல்ல. எதற்கும் ஒரு நொட்டை பிடித்து பிரிந்திருக்கவே பார்ப்போம். பிரதிநிதிகள் எம்மைப் பிரதிபலிப்பவர்கள்!

**கேள்வி :- புலம்பெயர் தமிழ் வர்த்தகர்கள் அரசியல் கட்சிகளை கையாள்வதை தவிர்க்குமாறு உங்களின் மாணவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். இது குறித்து உங்கள் கருத்தென்ன?**

**பதில் :-** நாங்கள் புலம்பெயர் வர்த்தகர்களிடம் பிச்சைப் பாத்திரம் ஏந்தும் வரையில் அவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்தே ஆக வேண்டும். புலம்பெயர் தமிழர்கள் ஆணவத்தில் எம்மைக் கையாள நினைக்கின்றார்கள் என்று சுமந்திரன் அவர்கள் நினைப்பது எந்த அளவுக்கு சரி என்று எனக்குத் தெரியாது.

புலம்பெயர் தமிழர்களில் பலர் அடிபட்டு இடிபட்டு கையில் காசில்லாமல் வெளிநாடுகளுக்குப் போய் அங்கு உழைத்து இன்று நல்ல நிலையில் இருப்பவர்கள். அவர்கள் தமது தாய் நாட்டை வெகுவாக நேசிக்கின்றார்கள். சிங்களத் தலைவர்களின் கோப்பையில் இருந்து வீசப்படும் ரொட்டித் துண்டுகளுக்காக ஒரு சில தமிழர்கள் தம் இனத்தையே விற்றுவிடுவார்களோ என்று அவர்கள் பயப்படுகின்றார்கள்.

( 10ஆம் பக்கம் பார்க்க )

# தமிழ்த் தேசிய கட்சிகளுக்குள் சுயநலமிகளே அதிகம்




## புலம்பெயர்ந்தோரின் ஆதரவு தாயக மக்களுக்கு அவசியம்

( 09ஆம் பக்கத் தொடர்ச்சி )

சுமந்திரன் பற்றியோ அவரின் கொள்கைகள் பற்றியோ எமது புலம்பெயர் உறவுகள் ஏதேனும் கூறியிருந்தால் அக்கூற்றுக்களின் உண்மை பொய்மைகளை ஆராயாமல் அவர்களைக் குறைகூறுவது நல்லதல்ல.

**கேள்வி :- அண்மையில் பாடசாலையொன்றில் இடம் பெற்ற மாணவர்களுக்கிடையிலான பட்டிமன்ற மொன்றில் புலம்பெயர் தமிழர்கள் தாயக அரசிய லில் ஈடுபடுகின்றமையை குறித்து கடுமையாக விமர்சிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தாயக - புலம்பெயர் தமிழர்களை பிரித்துப் பேசுவது எதிர்காலத்தில் எவ்வித விளைவுகளை ஏற்படுத்தும் எனக் கருது கின்றீர்கள்?**

**பதில் :-** நான் குறித்த பட்டிமன்ற பேச்சுக்களைக் கேட்கவில்லை. எமது இளைஞர், யுவதிகள் ஒன்றை மனதில் கொள்ள வேண்டும். பிரிப்பது எளிது. சேர்ப்பது மிகமிகக் கடினம். எமது சுயநலக் காரணங்களுக்காக எமது வெளிநாட்டு உறவுகளைப் புறக்கணித்தோமானால் இங்கு எம் சார்பில் "ஏன்" என்று கேட்க எவருமே இல்லாது போய்விடுவர். எப்படியாவது அமைச்சுப் பதவிகளில் நிலைக்க வேண்டும் என்று எண்ணும் எம்மவர் தமது சொந்த நலனுக்காக சிங்களத் தலைவர்கள் கூறும் எதற்கும் எதிர்ப்புக் காட்டமாட்டார்கள். அதனால் காலக் கிரமத்தில் தமிழர் தேசியம் அழிந்து போய்விடும். நாமும் நாட்டின் ஒரு சிறுபான்மையினர் ஆகிவிடுவோம். இன்று நாம் எம் பிரதேசங்களில் பெரும்பான்மையர். இது எவ்வளவு காலத்திற்கு நிலைக்கும்? எமது தனித்துவம் பறிபோய்விடும்



என்ற ஒரு உண்மையான கரிசனையே எமது புலம்பெயர் உறவுகளை எம்மை எச்சரிக்கத் தூண்டுகின்றது என்று நாம் கொள்ளலாம்.

இதை மறந்து உள்ளூர் மக்களை வேறாகக் கருதி புலம் பெயர் உறவுகளுக்கு எதிராக எம்மவர் சிந்திக்கத் தொடங்கினால் வடக்கு- கிழக்குத் தமிழ் மக்களாகிய நாம் நட்டாற்றில் விடப்பட்டு விடுவோம். இளைஞர், யுவதிகள் இதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

அதே நேரத்தில் தாம் நிதி உதவிகளைச் செய்கின்றார்கள் என்ற ஒரேயொரு காரணத்தை முன்வைத்து வடக்கு-கிழக்கு தமிழ் மக்களைப் புலம்பெயர் உறவுகள் தமது சுயநலத்துக்காகப் பாவிக்கப் பார்ப்பதையும் கைவிட வேண்டும். தமிழர்தம் எதிர்காலமே எமது பிரதான கரிசனையாக இருக்க வேண்டும்.

புலம்பெயர்ந்த சிலர் தனி ஈழமே ஒரேயொரு தீர்வு என்ற எண்ணத்தில் காய்களை நகர்த்தி வருகின்றனர். இது பற்றி எம்முடன் அவர்கள் பேசாது அவ்வாறு முடிவு எடுப்பது தவறு. இதனால் தான் எமது கட்சி வடக்கு-கிழக்கில் மக்கள் தீர்ப்பைப் பெற ஐக்கிய நாடுகள்சபை முன்வரவேண்டும் என்று கூறிவருகின்றோம்.

**கேள்வி :- போர் முடிவுற்று பதினைந்து ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டன. இப்போது தாயக நிலைமைகள் எப்படியிருக்கின்றன? அரசும், இராணுவமும், தொல்லியல் உள்ளிட்ட திணைக்களங்களும் தமிழர் தாயகப் பகுதியில் எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன?**

**பதில் :-** வர வர நிலைமைகள் மோசமாகிக் கொண்டு வருகின்றன. மத்தியானது இராணுவத்தினூடும், திணைக்களங்களினூடும், புத்த பிக்குகள் ஊடும் வேறு பல சிங்கள நிறுவனங்களூடும் வடக்கு-கிழக்கு நிலங்கள் பலவற்றை ஆக்கிரமித்துக் கொண்டு வருகின்றது. அவர்கள் தரும் தொல்லைகளால் எமது மக்கள் தமது பிள்ளைகளை இலட்சங்கள் செலவழித்து வெளிநாடுகளுக்கு அனுப்பிக் கொண்டிருக்கின்றார்கள். எமது மக்கட் தொகை வெகுவாகக் குறைந்து வருகின்றது. எமக்கென குரல் கொடுக்க எவருமே இல்லை. எமது தலைவர்கள் பலர் இந்தியாவைப் பகைத்து எமக்குத் துரோகம் இழைத்துக் கொண்டிருக்கின்றனர். இதனால் தான் எமது கட்சி உடனேயே வடகிழக்கு பொதுமக்கள் இடையே அவர்கள் கருத்தைப் பெற சர்வதேச உதவியுடன் ஒரு மக்கள் வாக்கெடுப்பை நடத்தக் கோரி வருகின்றது. எமது மக்களின் தீர்ப்பு கிடைத்தால் இன்று வரை நடக்கும் அரச அபகரிப்பு நடவடிக்கைகள், அரச ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் யாவும் முடிவுக்கு வரலாம். இந்தியா மனம் வைத்தால் இவ்வாறான மக்கள் வாக்கெடுப்பைக் கூடிய விரைவில் நிகழ்த்தலாம்.

**கேள்வி :- தங்களால் வடமாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட இனப்படுகொலை தீர்மானம் ஈழத்தமிழர் வரலாற்றில் மிக முக்கியமானது. அந்த தீர்மானத்தின் பின்னரும் ஈழத்தில் இனப்படுகொலை நீடிக்கின்றதா? எந்தெந்த வழிகளில் இனப்படுகொலை நீடிக்கின்றது?**

**பதில் :-** எமது மக்களை வெளிநாடு நோக்கிச் செல்ல அரசியல் சுற்றாடலை மாசுபடுத்துவதே இனவழிப்பின் ஒரு அங்கமாகும். காணி அபகரிப்பு, சிங்கள உயர் அலுவலர் நியமனம், தொடர்ந்து இராணுவத்தை வடக்கு- கிழக்கில் நிலை நிறுத்தி வைத்திருப்பது போன்ற பலவுமே எமது அரசியல் சூழலைச், சுற்றாடலை மாசுபடுத்துகின்றன. எமது பாதுகாப்பு கேள்விக்குரியதாகின்றது. நாம் நாமாகச் சுதந்திரமாக வாழ முடியாத நிலையே இப்பொழுது இங்கு நிலவுகின்றது. அண்மையில் நாம் வெளியிட்ட நூல் தற்போதுள்ள எமது நிலையையும் ஆராய்ந்துள்ளது.

**கேள்வி :- அண்மையில் உங்கள் கட்சியினால் வெளியிடப்பட்ட** "Structural Genocide – Ethnic Cleansing of Tamils in Sri Lanka" **என்கிற ஆவண-மும் மிக முக்கியமானது. இதனை வெளியிட்டதன் நோக்கம் என்ன? எதிர்காலத்திலும் இது போன்ற ஆவணப்படுத்தல் பணிகளைச் செய்யவுள்ளீர்களா?**

**பதில் :-** எமது தமிழ், சிங்கள மக்களிடையே, மேலும் எமது புலம் பெயர் உறவுகளிடையே, வெளிநாட்டு தூதரகங்கள் இடையே இவ்வாறான ஒரு கைநூல் இருக்க வேண்டும் என்றே எமது கட்சி இந்த நூலை வெளியிட்டுள்ளது. நூலாசிரியரும் நானும் 90 வயதை நோக்கி எமது 80களில் வாழ்கின்றோம். மேலும் ஆவணப்படுத்தல் பணிகளில் ஈடுபடமுடியுமோ நானறியேன். ஆனால் தேவையெனில் நாம் கட்டாயமாக எமது வயதையும் பொருட்படுத்தாமல் எமது கடமைகளை நிறைவேற்ற முன்வருவோம்.

ஆனால் எமது முக்கிய நோக்கம் சகல மக்களினி டையே எம்மைப் பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதே யாகும்.

# கலாநிதி நாகலிங்கம் எதிர்வீரசிங்கம்:

## விளையாட்டு, கல்வி, மனிதாபிமானத்தின் சிகரம்

**கலாநிதி**
**குமாரவேலு கணேசன்**
(STEM-Kalvi)

ஏப்ரல் 18, 2024 அன்று, எதிர் என்று அன்புடன் அழைக்கப்படும் கலாநிதி நாகலிங்கம் எதிர் வீரசிங்கம், கலிபோர்னியாவின் லாஸ் ஏஞ்சல்ஸில் உள்ள அவரது இல்லத்தில், அவரது குடும்பத்தினர் சூழ அமைதியாக காலமானார். 89 வயதில், கலாநிதி எதிர்வீரசிங்கம், விளையாட்டு, கல்வி மற்றும் அர்ப்பணிப்புள்ள மனிதாபிமானப் பணிகள் மூலம் வாழ்க்கையைத் தொட்டு, கண்டங்கள் கடந்தும் ஒரு மரபை விட்டுச் சென்றுள்ளார்.

1934 ஆம் ஆண்டு யாழ். குடாநாட்டில் ஒரு சிறிய கிராமமான பெரியவிளான் என்ற இடத்தில் ஒரு சாதாரண மண் குடிசை வீட்டில் பிறந்த எதிரின் வாழ்க்கைப்பயணம் எதிர்கால சந்ததிக்கு ஒரு வழிகாட்டியாகும். இந்த எளிய தொடக்கத்திலிருந்து, அவர் உலக அரங்கில் முன்னேறி இரண்டு ஒலிம்பிக் போட்டிகளில் உயரம் தாண்டுதல் போட்டியில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தியது மாத்திரமன்றி 1958 ஆம் ஆண்டு டோக்கியோவில் நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் நாட்டின் முதலாவது தங்கப் பதக்கத்தையும் பெற்றார்.

இதற்காக அவர் கடந்து வந்த பாதை மிக நீண்டது. என்ன தான் சிறந்த விளையாட்டு வீரனாக இருந்தாலும் இலங்கையில் நிலவி வந்த இனத்துவேசம் அவரைப் பலமுறை புறக்கணித்தது. அதை அவரது புதல்வர் அர்ஜூனன் பின்வருமாறு எழுதுகின்றார்.

"யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடந்த போட்டி ஒன்றில் அவருக்குப் பரிசாகக் கிடைத்த தடகள மெய்வல்லுநர் புத்தகமொன்றில் இருந்த படங்களைக் கவனமாக ஆராய்ந்து உயரம் பாய்வது எப்படி என்று தமது சிறிய பின்வளவில் எதிர் தானாகவே கற்றுக்கொண்டார். யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு திரையரங்கில் 1948 ஒலிம்பிக் போட்டிகள் குறித்த செய்திப்படம் ஒன்றைப் பார்த்த பின்னர் இப்படியான ஓர் ஒலிம்பிக் போட்டிக்குத் தானும் போவேன் என்று ஓர் உறுதியை எதிர் தனக்குள் எடுத்துக்கொண்டார். நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, 17 வயதான எதிர் ஹெல்சிங்கி - பின்லாந்து 1952 ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்றார். மெல்பேண் - அவுஸ்திரேலியா 1956 ஒலிம்பிக் போட்டிகளினூடாகத் தொடர்ந்த அவரது தடகளப் பயணத்தில், ரோக்கியோ - ஜப்பான் 1958ஆம் ஆண்டு ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் எதிர் கண்ட வெற்றி எந்த விளையாட்டிலும் இலங்கை பெற்ற முதல் தங்கப் பதக்கம் என்ற பெருமையையும் பெற்றது. நான்கு ஆண்டுகளின் பின்னர், ஜகார்த்தா - இந்தோனேசியாவில் 1962ஆம் ஆண்டு நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் எதிர் வெள்ளிப் பதக்கம் பெற்றார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் உயரம் பாய்தல் போட்டிகளில் எதிர் கலந்து கொண்ட ஒவ்வொரு வயதுப் பிரிவிலும் இருந்த சாதனைகளை முறியடித்தார். பழைய பஸ் வண்டி அச்சுகள் மற்றும் பிற பஸ் பாகங்களைப் பயன்படுத்தி வீட்டில் உருவாக்கிய பொருட்களைத் தனது உடலை வலுப்படுத்தும் பயிற்சிகளுக்காக எதிர் பயன்படுத்தினார். கொழும்பில் 1951ஆம் ஆண்டு நடந்த தேசிய மட்டத்திலான போட்டியில் வென்ற பின்னர் அவருக்கு முதற்தடவையாக ஒரு சிறப்பு தடகள பயிற்சியாளரான பி.இ.ராஜேந்திராவின் நெறிப்படுத்தலும் கட்டமைப்பான உடற்பயிற்சி வழிமுறைகளும் கிடைத்தன. பின்னர்,1952 ஒலிம்பிக் போட்டிகளுக்கான அணியில் எதிர் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்லாந்து நாட்டிலுள்ள ஹெல்சிங்கி நகரத்தை அடைய ஒரு மாதத்திற்கும் மேலாகக் கடற்கப்பலிற் பயணம் செய்து எதிர் அதிலே கலந்து கொண்டார். 1954 ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் அவருக்குப் பதக்கம் ஏதும் கிடைக்காவிட்டாலும், தங்கம் - வெள்ளி - வெண்கலம் என்று பதக்கங்கள் வென்ற வீரர்கள் தாண்டிய 1.95 மீற்றர் உயரத்தை அவரும் தாண்டியிருந்ததால் அவருக்கு விதிகளின்படி நான்காவது இடம் கிடைத்ததுடன், வெற்றியாளர்களுடன் புதிய உயரம் பாய்தல் ஆசிய சாதனையை எதிர் மூன்று வீரர்களுடன் பகிர்ந்து கொண்டார்.

உயரம் பாய்தலில் இலங்கைக்கான சாதனையை மட்டுமன்றி ஆசிய மட்டத்திலும் சாதனையைக் கொண்டிருந்த போதிலும், 1958ஆம் ஆண்டு ரோக்கியோ - ஜப்பான் ஆசிய விளையாட்டுப் போட்டிகளுக்கான அணியில் எதிர் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. இருந்தாலும், டெய்லி நியூஸ் பத்திரிகையின் விளையாட்டுப் பிரிவு செய்தியாசிரியர் காள்ரன் செனிவிரத்தின தொடர்ந்து எழுதி வந்த கட்டுரைகளின் அழுத்தம் காரணமாகத் தெரிவுக்குழு இறுதியில் தன்னைத் தளர்த்திக்கொண்டு கொண்டு எதிர் இந்த போட்டிகளிற் கலந்து கொள்ள அனுமதித்தது. இருந்தாலும், பிந்தி அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார் என்ற காரணத்தைக் காட்டிய தெரிவுக்குழு இந்தப் போட்டிகளிற் கலந்து கொள்வதற்காக லொஸ் ஏஞ்சல்ஸ் நகரிலிருந்து ரோக்கியோ சொல்வதற்கான செலவை அவரே பார்த்துக் கொள்ளவேண்டும் என்று அறிவித்தது. அப்போது அவருக்கு ஆதரவாக புரவலர் டொனவன் அந்திரே கொடுத்த ஐயாயிரம் அமெரிக்க டொலரின் உதவியுடன் அந்தப் பயணத்தை எதிர் மேற்கொண்டு, போட்டிக்குச் சில நாட்கள் மட்டுமே இருக்கையில் ரோக்கியோவில் அணியுடன் இணைந்து கொண்டார். இந்தப் போட்டிகளின் போது அவருக்கான





சீருடைகளை இலங்கை வழங்கவில்லை என்பதால், அவரது பல்கலைக்கழகத்தின் விளையாட்டுச் சீருடையில் இலங்கை அணியின் இலச்சினையை குத்திக்கொண்டு எதிர் அந்தப் போட்டிகளிற் கலந்து கொண்டார். இவற்றையெல்லாம் தாண்டி, இலங்கையின் அணியிலிருந்த மற்றைய போட்டியாளர்கள் அவரையே இலங்கை அணியின் தலைவராகத் தீர்மானித்தார்கள்."

எதிரின் கல்வித் தேடல்கள் அவரது தடகள சாதனைகளைப் போலவே சிறப்பாக இருந்தன. லாஸ் ஏஞ்சல்ஸ், கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் (UCLA) உதவித்தொகையில் அவர் அமெரிக்காவிற்குச் சென்று பின்னர் கார்னெல் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றார். அவரது கல்வி மற்றும் தடகள திறமை அவரை விளையாட்டில் மட்டுமல்ல, கல்வி சீர்திருத்தம் மற்றும் சமூக மேம்பாட்டிலும் எல்லோரலும் மதிக்கப்படும் ஒரு மாமனிதனாக மாற்றியது.

இலங்கையில், குறிப்பாக அதன் மிகவும் கொந்தளிப்பான போர் நடந்துகொண்டிருந்த 90களில் தனது மக்கள் பணிகளை மீண்டும் ஆரம்பித்தார். வெளிநாட்டில் புகழ்பெற்ற கல்வித் தொழிலில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர், அவர் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்குத் திரும்பினார். அங்கு, போரினால் பாதிக்கப்பட்ட சமூகங்களை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும் சமாதானத்தை வளர்ப்பதற்கும் இலக்காகக் கொண்ட மனிதாபிமான மற்றும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக அர்ப்பணித்தார்.

2009 இல் ஈழப்போர் முடிவடைந்ததன் பின்பாக உலகளாவிய தமிழ் அமைப்புக்களை ஒருங்கிணைக்கும் நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்ட Global Tamil Forum என்னும் அமைப்பின் தலைவராக எதிர் தெரிவுசெய்யப்பட்டு ஒரு வருடம் கடைமையாற்றினார் என்பது பலருக்குத் தெரியாத ஒரு உண்மை.

எதிரின் முன்முயற்சிகள் பரந்ததாகவும் மாறுபட்டதாகவும் இருந்தன. உள்ளூர் மொழிகளில் கல்விக் (STEM-Education) காணொளிகளை உருவாக்குவதன் மூலம் கல்வியை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை அவர் முன்னெடுத்தார். அக்காணொளிப் பாடங்களே கோவிட்-19 காலத்தில் பல வறிய பின்தங்கிய பிரதேச மாணவர்களுக்கு விரலிகளின் ஊடாகவும் இணையம் ஊடாகவும் கற்றலுக்கு உதவி செய்தது என்றால் மிகையாகாது.

இலங்கை முழுவதிலும் உள்ள இளம் தடகள திறமைகளை கண்டறிந்து வளர்ப்பதை இலக்காகக் கொண்டு பல பாசறைகளை நடத்தினார். 2004 சுனாமி மற்றும் இலங்கை உள்நாட்டுப் போரைத் தொடர்ந்து மீட்புக் காலத்தில் அவரது பணி முக்கியமானதாக இருந்தது, பாதிக்கப்பட்ட மக்களுக்கு மிகவும் தேவையான நிவாரணம் வழங்கப்படுவதை ஒருங்கிணைத்ததில் அவரின் பங்கு முக்கியமானது.

கலாநிதி எதிர்வீரசிங்கத்தின் செல்வாக்கு எண்ணிமக் கல்வி மற்றும் தடகள சாதனைகளுக்கு அப்பாற்பட்டது. அவர் வடமாகாணத்தில் புரையோடிப்போயிருந்த சாதி அமைப்புக்கு எதிராக ஒரு உறுதியான செயற்பாட்டாளராக இருந்து சமூகத்தின் ஒடுக்கட்டப்பட்ட பிரிவினரை உயர்த்த அயராது உழைத்தார்.

வடமாகாணத்தின் கல்வி நிலை கீழ் நோக்கி சென்று கொண்டிருப்பதை உணர்ந்து 2014 ஆம் ஆண்டு அவர் தலைமையிலான குழு தயாரித்த "வடக்கின் கல்வி முறைமை மீளாய்வு" என்னும் 250 பக்க அறிக்கை அப்போதைய கல்வியமைச்சர் முன்னிலையில் வெளியிடப்பட்டது.

01. மாணவர்களுக்கு வழங்கப்படும் உடல் ரீதியான தண்டனைகள் சகல பாடசாலைகளிலும் தாமதமின்றி நிறுத்தப்பட வேண்டும். இதற்குப் பதிலாக ஆசிரியர்கள், அதிபர், மாணவர் தலைவர் உள்ளடக்கிய மாணவர்களுக்கான வகுப்பறை நிர்வாகம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

02. தற்பொழுது முன்னிலைப்படுத்தப்படும் எழுத்து மூலமாக விடையளிக்கும் பரீட்சை முறைக்குப் பதிலாக மாணவர்களின் எண்ணக்கருவை அடிப்படையாகக் கொண்ட செயன்முறையை ஆராய்ந்து அறியும் திறமையை மையமாகக் கொண்ட செயற்றிட்டம் போன்றவற்றை ஆசிரியர்களினால் முன்னிலைப்படுத்தி ஊக்குவிப்பதை மையமாகக் கொண்டு தேசிய பரீட்சைகள் மீளமைக்கப்பட வேண்டும்.

03. பொது நிர்வாகம், நியமனங்கள், இடமாற்றம், பதவியுயர்வு மற்றும் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் சம்பந்தமாக முன்வைக்கபட்ட அனைத்து சிபார்சுகளையும் நடைமுறைப்படுத்த வேண்டும். ஆசிரியர்கள் மற்றும் உத்தியோத்தர்கள் தமது துறைகளில் முதுமாணிப் பட்டங்களைப் பெறவோ அல்லது துறைசார் கல்வியை விருத்தி செய்யவோ அவர்களுக்கு 1-4 வருடங்களுக்கு உயர்கல்வி பெறும் வாய்ப்பை உருவாக்கி கொடுக்கக் கூடியவாறு 10 வருட காலத்திற்கான உத்தியோகத்தர்களின் விருத்தி சார்ந்த திட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும்.

04. பாடசாலை நேரத்தில் ஆசிரியர்களும் மாணவர்களும் தனியார் கல்வி நிலையங்களுக்கு செல்வதை தடுத்து நிறுத்த வேண்டும்.

05. கல்வி சம்பந்தமான சகல தரவுகளையும் சேகரித்து வழங்கக் கூடியதாக கல்வி முகாமைத்துவ தகவல் முறையொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

06. தமிழ்மொழி மூலம் கற்றலுக்கான நிறுவனம் ஸ்தாபிக்கப்பட வேண்டும். இந்நிறுவனம் நாட்டின் சகல தமிழ்மொழியில் கற்பிக்கும் பாடசாலைகளிலும் ஆசிரியர்களுக்கான பயிற்சியை வழங்கல். பாடவிதானம் தயாரித்தல், அதற்கான நூல்கள், கற்பித்தல் முறை. தமிழ்மொழி மூலம் கற்றல் கற்பித்தலில் சம்பந்தமான நூல்களை வழங்குவதற்குப் பொறுப்பாக இருக்கும்.

07. வலய மட்டத்தில் நிர்வகிக்கப்படும் பாடசாலைகளின் நிர்வாகம் மாற்றியமைக்கப்பட வேண்டும். வலய மட்டத்தில் கல்விச் சபையொன்று அமைக்கப்பட வேண்டும். இச்சபை நியமிக்கப்பட்ட அங்கத்தவர்களையும் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களையும் உள்ளடக்கியதாக இருக்கும். வலய மட்டத்தில் இயங்கும் பாடசாலைகளை நிர்வகித்தல் அவை சம்பந்தமான தீர்மானம் எடுத்தல் இச்சபையைச் சார்ந்ததாக இருக்கும்.

08. வலய மட்டத்தில் தற்பொழுது இயங்கும் முறைசாரா கல்விமுறை மாற்றப்பட்டு இதற்குப் பதிலாக தொடர்கல்விப் பாடசாலைகள் அமைக்கப்பட வேண்டும். இப்பாடசாலையில் 16 வயதுக்கு மேற்பட்ட மாணவர்கள் கற்றுப் பயன் பெறும் வகையில் பாடவிதானம் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்படவேண்டும்.

09.தற்போதைய நிதிமுகாமைத்துவ முறை உயர்நிலையில் வினைத்திறனுடன் செயற்படும் வகையில் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

10. தற்பொழுது அமுலில் இருக்கும் தை மாதத்தில் தொடங்கி மார்கழியில் முடிவடையும் வரை கல்வி வருடத்தை செப்டம்பரில் தொடங்கி ஓகஸ்டில் முடிவடையக் கூடியதாக மாற்றியமைத்தல்.

மேலே தரப்பட்டுள்ள அவ்வறிக்கையின் முக்கியமான 10 பரிந்துரைகளில் சிலவற்றை வட மாகாணசபை ஆரம்பித்திருந்தாலும் எவற்றையும் தொடர்ந்து முன்னெடுக்கவில்லை என்பது துரதிர்ஷ்டவசமானது. EMIS தரவுத்தளம் மற்றும் வலயக் கல்வி வாரியம் என்பன அவற்றுள் குறிப்பிடத்தக்க இரண்டாகும்.

வட-மாகாணசபையில் கல்வியமைச்சின் ஆலோசகராக அவர் வகித்த பதவியானது 2017 இல் ஏற்பட்ட மாகாண அமைச்சரவை மாற்றத்தின் பின்பாக வந்த புதிய மாகாண கல்வியமைச்சரினால் துரதிர்ஷ்டவசமாக நீடிக்கப்படவில்லை. அது மட்டுமல்லாமல் பாடசாலைகளுக்கு விஜயம் செய்வதற்கு அவருக்கு வழங்கப்பட்டிருந்த அனுமதியும் நீடிக்கப்படவில்லை. அதன் பின்பு அவர் அமெரிக்கா திரும்பிச்சென்றுவிட்டாலும் பல விளையாட்டு, கல்விசார் தொண்டு நடவடிக்கைகளை இலங்கையில் தொடர்ந்தார்.

எதிரின் சமூகப் பங்களிப்புகளை கௌரவிக்கும் வகையில், கலாநிதி எதிர்வீரசிங்கத்திற்கு இலங்கை அரசாங்கத்தினால் 'தேசபந்து' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. அவரது குணாதிசயத்திற்கு உண்மையாக, அவர் உள்நாட்டு மோதலின் போது தனது மக்கள் அனுபவித்த துன்பங்களைக் காரணம் காட்டி, அவ்விருதை நிராகரித்திருந்தார். அவரது முடிவு சமூக நீதிக்கான அவரது ஆழ்ந்த பச்சாதாபத்தையும் அர்ப்பணிப்பையும் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

எதிரின் தனிப்பட்ட வாழ்க்கை அவரது தொழில் முயற்சிகளைப் போலவே சிறப்பாகவும் நிறைவாகவும் இருந்தது. அவர் சியரா லியோன் நாட்டில் இருந்த காலத்தில், 1965ஆம் ஆண்டு ஜூலியற் ஆன் பவர் (Juliet Ann Power) என்ற அமெரிக்காவில் இருந்து வந்து அங்கு தொண்டுப்பணி செய்துகொண்டிருந்த பெண்ணை காதலித்து திருமணம் செய்து கொண்டார்.

எதிர்- ஜூலியட் தம்பதியருக்கு மூன்று பிள்ளைகளும் அவர்களினூடாக எட்டு பேரக்குழந்தைகளும் உள்ளனர்.

அமெரிக்க குடியுரிமைக்கு தகுதியுடையவராக இருந்தும் கடைசிவரை இலங்கை மண்ணின் மைந்தனாக இலங்கைக் குடியுரிமையுடன் வாழ்ந்து தனது வாழ்க்கையை எதிர் நிறைவு செய்து கொண்டார்.

கலாநிதி நாகலிங்கம் எதிர்வீரசிங்கத்தை நாம் நினைவு கூரும்போது, அவர் படைத்த சாதனைகளைகளையும் அவர் பெற்ற பாராட்டுகளையும் மட்டும் அல்லாது ஒடுக்கப்பட்டோர், ஏழைகள் மீதான அவரின் கருணை, கல்வி பற்றிய அவரின் தொலைநோக்குப் பார்வை, மனித மாண்பு மற்றும் தேசியத்தின் மீதான அவரின் அசைக்க முடியாத நம்பிக்கைகளையும் நாம் நினைவுகூர்வது அவசியமாகின்றது. அவரது வாழ்க்கை வரலாறு நம்பிக்கையின் கலங்கரை விளக்கமாகவும், விடா முயற்சி மற்றும் மனிதநேயத்தின் சக்திக்கு சான்றாகவும் உள்ளது.

மலர் வளையங்களுக்கு பதிலாக, அவரது குடும்பத்தினர் இலங்கைத் தொண்டு நிறுவனங்களுக்கு நன்கொடைகளை வழங்குமாறு கோருகின்றனர். கலாநிதி எதிர்வீரசிங்கம் யாழ்ப்பாணத்தின் ஒரு சிறிய கிராமத்திலிருந்து உலக அரங்கிற்கு அவர் மேற்கொண்ட பயணமும், உலகில் அவர் ஏற்படுத்திய ஆழமான தாக்கமும், அவரை அறியும் அல்லது அவரது செல்வாக்கை உணரும் பாக்கியம் பெற்ற அனைவராலும் நினைவுகூரப்பட்டு போற்றப்படும்.

# உக்ரேனுக்கு ஒரு நீதி, காஸாவுக்கு இன்னொரு நீதி

# நாம் இரட்டை நிலைப்பாடுகளுடன் தான் இருக்கிறோம்

## ஆண்டனி டி’ஆடம்

நாம் அனைவரும் நன்கறிந்த அரசியல்வாதி ஆண்டனி டி ஆடம். அவர் 2019 ஆம் ஆண்டு முதல் நியூ சவுத் வேல்ஸ் சட்ட மேலவை உறுப்பினராக ஆஸ்திரேலியத் தொழிலாளர் கட்சி சார்பாக தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றிவருகிறார். எதிரொலி இதழுக்காக தொலைபேசி வாயிலாக அவர் வழங்கிய நேர் காணல் இது.

**எதிரொலி: ஒரு தொழிற்கட்சி மேலவை உறுப்பினர் என்ற முறையில் NSW மாகாணத்தில் ஓராண்டு லேபர் கட்சியின் ஆட்சியை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்? இதுவரையிலான ஆட்சியின் செயற்பாடு திருப்திகரமாக உள்ளதா?**

டி’ஆடம்: ஆட்சியில் நிலையான படிப்படியான முன்னேற்றங்களை காணமுடிகிறது. முந்தைய ஆட்சியானது பொதுப் பணித்துறையில் புறக்கணிப்பையே தங்கள் கொள்கையாகக் கொண்டிருந்தது, குறிப்பாக மனித உட்கட்டமைப்பு முற்றிலுமாக புறக்கணிக்கப்பட்டு ஒரு கடினமான சூழ்நிலை நிலவியது. நமது பொதுத்துறை ஊழியர்கள் (குறிப்பாக கல்வி மற்றும் சுகாதாரத்துறை ) தொடர்ந்து புறக்கணிக்கப்பட்ட சூழ்நிலை ஊழியர் பற்றாக் குறைக்கு வழிவகுத்தது. இப்போதைய எங்கள் அரசாங்கம் இந்த நிலையினை மாற்ற தொடர்ந்து முயற்சி செய்வது மட்டுமன்றி தீர்வுக்கான நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. குறிப்பாக பொதுத்துறை ஊழியர்களுக்கான சம்பள உயர்வு முடிவானது , நிலைமைகளை சீராக்கவும், பிரச்சினைகளை கட்டுக்குள் தக்கவைக்கவும் உதவியது . இதன் மூலம் மாநிலம் முழுவதும் நமக்குத் தேவையான ஆசிரியர்கள், செவிலியர்கள், துணை மருத்துவப் பணியாளர்கள் மற்றும் காவல்துறை, பொதுப்பணித்துறை ஊழியர்களை ஒருங்கிணைத்து மக்களுக்கான சேவையாற்ற எங்களால் முடிந்திருக்கிறது .

**எதிரொலி: ஆனால் இவற்றையெல்லாம் விட பெரிய பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்பட வில்லையே . அதாவது, NSW குடிமக்களை பாதிக்கும் வாழ்வாந்திரச் செலவு நெருக்கடி மற்றும் அதிகரித்து வரும் பணவீக்கம், எரிசக்தி கட்டண உயர்வு , வாடகை நெருக்கடி போன்றவற்றால் மக்கள் அவதிப்படுகின்றனர். அரசு சார்பில் சில நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும், அவையெல்லாம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப் போதுமானதாக இல்லை. ஆளும் கட்சி உறுப்பினர் என்ற வகையில் இந்த நெருக்கடிகளைப் பற்றி உங்கள் கருத்து என்ன ? இந்தச் சிக்கல்களை நாம் எவ்வாறு எதிர்கொள்வது ?**

டி’ஆடம்: ஆம், மாநில அரசிடம் வாழ்வாந்திரச் செலவு அளவீடுவதற்கான உபகரணங்கள் குறைந்த அளவே இருப்பதாக நான் நினைக்கிறேன். நம்மால் சரி செய்யக்கூடிய சில விடயங்கள் உள்ளன . அதற்கான நடவடிக்கைகளை எங்களால் எடுக்க முடிந்தது, ஆனால் வாழ்வாந்திரச் செலவு நெருக்கடியின் மூலமான பல நுண்ணிய பொருளாதாரக் காரணிகள், முந்தைய கூட்டாட்சி அரசாங்கம் எடுத்த பல தவறான பொருளாதார முடிவுகளின் விளைவாகும். வாடகை உயர்விற்கான மூல காரணம் வீடுகளின் விலைகள் அதிகரித்ததே ஆகும். வீட்டுச் சந்தையில் நுழைய முயற்சிக்கும் பலருக்கும் இந்த விலை உயர்வினால் வீடு வாங்க முடியாத சூழ்நிலையே உள்ளது. வீடு கட்டுவதற்குண்டான நீண்ட கால கட்டமைப்புசிக்கல்கள், வாடகைமற்றும்வாடகையுடன் தொடர்புடைய மற்ற செலவுகள் அனைத்தும் நம்மை இக்கட்டான நிலைக்கு இட்டு செல்கின்றன.

**எதிரொலி: ஆனால் சில வளர்ந்த நாடுகளில் ( குறிப்பாக பின்லாந்து ) காலியாக உள்ள வீடுகளை உள்ளூர் நகராட்சிகள் கீழ் கொண்டு வருவதால் வாடகை உயர்வினைக் கட்டுப்படுத்த முடிகிறது. அதனால் வீட்டுமனை உரிமையாளர்கள் மற்றும் முகவர்கள் வாடகையை தங்கள் இஷ்டம் போல் அதிகரிக்க முடியாது அல்லவா ?. நாம் ஏன் இங்கு அத்தகைய நடவடிக்கைகளை எடுக்க முடியாது? வீட்டு வாடகை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. இதனால் மக்கள் நகரத்தை விட்டு மேலும் ஊரகத்திற்கு நகர்கிறார்கள். இந்த சூழ்நிலை சாமானிய மக்கள் மீது மிகுந்த அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. இந்த நிலைமையை நாம் எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறோம்?**

டி’ஆடம்: நம்மிடம் பணவீக்கம் மற்றும் வாடகை அதிகரிப்பு ஆகியவற்றைக் கட்டுப்படுத்தக்கூடிய நடவடிக்கைகள் குறித்து பரிந்துரைகள் உள்ளன. தொழிலாளர்கட்சியின் முக்கியமான நோக்கமெல்லாம் எந்தக் காரணமும் இல்லாமல் வாடகைதாரர்களை வெளியேற்றுவதை தடுப்பதே ஆகும். மேலும் வாடகைதாரர்களை வெளியேற்றுவதன் மூலம் வீட்டுமனை முகவர்களுடன் சேர்ந்து வாடகையினை உயர்த்தும்இழிசெயலினைதடுப்பது போன்றசெயற்பாடுகள் எங்கள் ஆட்சியில் குறைந்திருக்கின்றன. ஆனால் மக்களுக்கு வாடகைக்கு வீடு கிடைக்காமல் இருப்பதற்கு முக்கியமான காரணம் சந்தையில் குறைந்த வீட்டு மனைகள் இருப்பதே இந்த மாநிலத்தில் வீட்டுவசதி வழங்குவதற்கு முயற்சி செய்து ,இந்தப் பிரச்சினைகளை தீர்க்க நாங்கள் முழு முனைப்புடன் நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம், அதன் விளைவாக காலி மனைகள் அதிகரிக்கும் , அதிகப்படியான வரவினால் வாடகை குறையும். அதன் மூலம் இந்த பிரச்சினைகளை சரி செய்ய முடியுமென்றே நினைக்கிறேன்.

**எதிரொலி: கல்வித்துறையில் தொழிலாளர் கட்சி நிறைய முயற்சிகளை எடுத்திருப்பதாக நீங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள், ஆனால் இன்னும் பல பள்ளிகளில் மாணவர் சேர்க்கை கணிசமாக அதிகரித்துள்ளது . இதனை சமாளிக்க முடியாமல் ஆசிரியர்கள் திணறி வருகின்றனர். அரசுப்பள்ளிகளை விட தனியார் பள்ளிகளுக்கு கணிசமான அரசு நிதி செல்வதாகசெய்திகள்வந்துள்ளன. இந்தப்பிரச்சினைகளைத் தீர்க்க நாம் என்ன செய்யப்போகிறோம். அதாவது அரசுப் பள்ளிகளுக்கு அதிக நிதி கிடைப்பதை எவ்வாறு உறுதிசெய்ய முடியும்? இந்த நிலைமையைச் சரி செய்ய தாங்கள் எடுத்த நடவடிக்கைகள் என்ன?**

டி’ஆடம்: நாங்கள் மத்திய அரசுடன் ஒரு தேசிய கல்வி உடன்படிக்கை தொடர்பான பேச்சுவார்த்தையில் இருக்கிறோம். இந்த உடன்படிக்கை நிறைவேறினால் எல்லா அரசுப் பள்ளிகளுக்கும் தேவையான நிதியினை வழங்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். எனவே கல்விக்கூட தரநிலை என்பது கோன்ஸ்கி அறிக்கை மற்றும் பல முன்மொழிவுகள் மூலம் உருவாக்கப்பட்ட ஒரு நெறிமுறை அல்லவா. அதன் பரிந்துரைகள் நியூ சவுத்வேல்ஸ் மாகாணத்தில் இன்னும் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. தரமான பொதுக் கல்வியை வழங்குவதற்கு கோன்ஸ்கி மூலம் நிர்ணயிக்கப்பட்ட தரத்தினை எட்டுவதற்கு தேவையான நிதி உதவிகள் அரசுப் பள்ளிகளுக்கு இன்னும் அளிக்கப்படவில்லை. மேலும் நியூ சவுத் வேல்ஸ் மாகாண தொழிலாளர் கட்சியானது தேசிய உடன்படிக்கையின் வழி பொதுப் பள்ளிகளுக்கு தேவையான நிதியை உறுதி செய்வதில் தீர்க்கமாக உள்ளது, அந்த உடன்படிக்கைகள் இன்னும் பேச்சுவார்த்தையிலையே உள்ளன. அதே வேளையில் ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு அளிப்பதன் மூலம் ஆசிரியர் பற்றாக்குறையினை பூர்த்தி செய்ய உறுதி பூண்டுள்ளோம். அரசுப்பள்ளி மாணவர்களுக்கு உயர்தரக் கல்வியை வழங்கக்கூடிய சிறந்த ஆசிரியர்களை ஈர்த்து தக்கவைத்துக்கொள்வதன் மூலம், பொதுகல்வி துறையில் ஆசிரியப்பணியாளர்களின் நீண்டகால சரிவைத் தடுக்க இவ்வாறான நடவடிக்கைகள் எங்களுக்கு உதவும் என்றும் நம்புகிறோம்.

**எதிரொலி: தொழிலாளர் கட்சி தேர்ந்தெடுக்கப்பட்டால் போக்கர் ( சூதாட்ட) இயந்திரத்தில் சீர்திருத்தம் செய்வோம், குறிப்பாக பணமில்லா அட்டைகளை அறிமுகப்படுத்துவோம் என்றும் மாண்புமிகு முதல்வர் திரு.மிண்ஸ் தேர்தல் பிரசாரத்தின் போது குறிப்பிட்டிருந்தார். ஆனால் பதவியேற்று ஒரு வருடத்திற்கு மேல் ஆகிவிட்டது. பணமில்லா அட்டைகள் அறிமுகம் குறித்து குறிப்பிடத்தக்க அறிவிப்புகள் எதையும் காண முடியவில்லையே?.**

டி’ஆடம்: அப்படிச் சொல்ல முடியாது. உறுதியளித்த படி நாங்கள் இந்த பணமில்லா அட்டைகளை சில சூதாட்ட விடுதிகளில் பரிசோதனைக்கு உட்படுத்தினோம். ஏனெனில் இந்த விஷயத்தில் தொழிற்கட்சி வெளிப்படையாகவே மிகவும் விவேகமான மற்றும் எச்சரிக்கையான அணுகுமுறையை எடுத்து வருகிறது. இந்த அட்டைகள் சூதாட்ட சிக்கலைத் தீர்க்கும் ஒரு நடவடிக்கையாக முன்வைக்கப்பட்டது. ஆனால் சுற்றுலாத்துறை ஒரு முக்கியமான தொழில். இது நிறைய பேருக்கு வேலை கொடுக்கிறது. ஆதலால் இந்தத் துறையில் நமது தலையீடு எந்த அளவிற்கு பயனுள்ளதாக இருக்கும் என்பதை உறுதிப்படுத்த விரும்பினோம். அதனால்தான் தொழிற்கட்சியானது ஒரேயடியாக செயல்படுத்தாமல் விவேகமான அணுகுமுறையை எடுத்துள்ளது. இந்த பரிசோதனை முயற்சி நியூகேஸில் பகுதியில் நடந்து கொண்டிருக்கிறது என்பதை நான் அறிவேன். அதன் முடிவுகளைப் பற்றிய எனது புரிதல் என்னவென்றால், பணமில்லா சூதாட்ட அட்டைகள் சிக்கலைக் குறைப்பதில் ஒரு முக்கியமான விளைவை கொடுக்கும் என்பது உறுதிப்படுத்தப்பட முடியாதது . ஆகவே இந்த சோதனை முடிவுகளை நாங்கள் தொடர்ந்து ஆராய்ந்து வருகிறோம். நீங்கள் ஆதாரங்களால் வழிநடத்தப்படும் ஒரு அரசாங்கத்தை விரும்புகிறீர்கள் என்று நான் நினைக்கிறேன். மாற்றங்களைச் செயல்படுத்துவதற்கு தேவையான உண்மையான விளைவுகளை ஏற்படுத்தப்போகிறதா அல்லது நாங்கள்எதிர்பார்த்த இலக்குகளை அது அடையுமா என்பது அவசியமில்லை. தொடர்ந்து மாற்றத்திற்கு தேவையான பணிகளை நாங்கள் செய்து வருகிறோம்.

**எதிரொலி: நன்றி. பணமில்லா அட்டைகள் சூதாட்டப் பிரச்சினையைத் தீர்க்கப் போவதில்லை என்றால், இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க நாம் எடுக்க வேண்டிய மற்ற நடவடிக்கைகள் என்ன?**

டி’ஆடம்: இந்த பிரச்சினைகள் குறித்து ஏதாவது விவாதிக்கப்பட்டதா? அல்லது என்னால் இந்தத் துறை குறித்து எதுவும் தெரியாததால் ஏதேனும் திட்டங்கள் இருக்கிறதா என்று எனக்குத் தெரியவில்லை. அதாவது உண்மையில் சொல்லப்போனால் நான் சிறந்த நிபுணத்துவம் பெற்ற துறை அல்ல இது. இந்த சிக்கலான சமூகப் பிரச்சினைகள் எதிலும், நிபுணர்களின் ஆலோசனையால் மட்டுமே நாம் வழிநடத்தப்பட வேண்டும் என்று நான் நினைக்கிறேன். துறையின் அமைச்சர் இந்த பிரச்சினைகள் தீர்ப்பது தொடர்பாக நல்ல ஆலோசனைகளைப் பெற்று வருகிறார் என்று நான் உறுதியாக நம்புகிறேன். சூதாட்டத்தின் சிக்கல்களைத் தீர்க்க உண்மையான நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கம் விரும்புவது குறித்து நமக்கு எந்த மாற்றுக்கருத்தும் கிடையாது . பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

**எதிரொலி: நாடு முழுவதும் குடும்ப வன்முறை அபாயகரமான அளவில் நடந்து வருகிறது. இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க உங்களிடம் ஏதேனும் திட்டங்கள் உள்ளதா?**

டி’ஆடம்: நாம் அனைவரும் சமீபத்திய குடும்ப வன்முறை மற்றும் கொடூரமான சூழ்நிலைகளால் பெண்கள் கொலை செய்யப்பட்டமை தொடர்பான சம்பவங்களால் பெரும் அதிர்ச்சியில் இருக்கிறோம் . நாம் அனைவரும் பெண்கள் எல்லா இடங்களிலும் பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்ய விரும்புகிறோம். மத்திய மேற்குப் பகுதியில் ஏற்பட்டுள்ள நிலைமையைத் தவிர்ப்பதற்கு என்ன முன்நடவடிக்கைகள் செய்ய முடியும் என்பதைப் கண்டறிவதற்கு அரசாங்கம் பிணைச் சட்டங்களை மீளாய்வு செய்வதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இது நிச்சயமாக ஒரு உறுதியான நடவடிக்கை என்று நான் நினைக்கிறேன். இந்தப் பிரச்சினை தொடர்பாக ஒரு தேசிய அமைச்சரவை குழு பரிசீலனை நடந்துள்ளது என்று நான் அறிகிறேன். குடும்ப வன்முறை பிரச்சினைகளை சரி செய்ய இந்தக்குழு சிறந்த நடவடிக்கைகளை பரிந்துரை செய்யும் என்ற நம்பிக்கை இருக்கிறது.





ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

**எதிரொலி: பாலஸ்தீன இனப்படுகொலை குறித்து வலுவான குரல் கொடுப்பவர்களில் நீங்களும் ஒருவர். ஆனால் போர்நிறுத்தம் ஏற்படும் என்ற நம்பிக்கை வெகுவாகக் குறைந்து வருகிறது. மாநில அரசால் எதுவும் செய்ய முடியாதெனினும், மத்திய அரசால் இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஒரு தொழிலாளர் கட்சி உறுப்பினராக நீங்கள் திருப்தியடைகிறீர்களா?**

டி’ஆடம்: ஆம், மத்திய அரசாங்கத்தால் இதைச் செய்ய முடியும் என்று நினைக்கிறேன். அதாவது, சர்வதேச விவகாரங்கள் தொடர்பாக என்ன நடக்கிறது என்பதைப் பாதிக்க மாநில அரசாங்கத்திடம் இருக்கும் உபகரணங்கள் மிகக் குறைவு. ஆனால் என் பார்வையில் நிச்சயமாக மத்திய அரசு இன்னும் அதிகமாக செய்ய முடியும். ஆஸ்திரேலியாவுக்கு சர்வதேச சட்டத்தை கடைபிடிப்பதை உறுதிசெய்யவும், நாங்கள் இனப்படுகொலையை ஆதரிக்கவில்லை என்பதை உறுதிப்படுத்தவுமான கடமை இருக்கிறது. இராணுவ ஒத்துழைப்பு, உளவுத் துறை ஒத்துழைப்பு, ஆயுதங்களை வழங்குதல் அல்லது இஸ்ரேலிய பாதுகாப்புத் துறையில் ஈடுபடுவது போன்ற இஸ்ரேலிய அரசாங்கத்தின் நடவடிக்கைகளை நாங்கள் ஆதரிப்பதில்லை என்பதை உறுதிப்படுத்துவது . இஸ்ரேலுடனான நமது இராஜதந்திர உறவுகள் தொடர்பாக மத்திய அரசிடமிருந்து இன்னும் வலுவான இராஜதந்திரப் பதிவு இருக்க வேண்டும். இந்த வகையான நடவடிக்கைகள் இன்னும் தேவை என்று நினைக்கிறேன். ஆஸ்திரேலிய அரசாங்கம் பாலஸ்தீன அரசை அங்கீகரிப்பதே இப்போதுள்ள சூழ்நிலையில் தேவை என்பதே எனது கருத்து. அது நிச்சயமாக ஒரு கொள்கைரீதியாக தொழிற்கட்சியின் கடமையாகும். ஆனால் அது குறித்தான முன்னேற்பாடுகள் திருப்திகரமாக இல்லை. ஆஸ்திரேலிய அரசாங்கம் பாலஸ்தீன அரசாங்கத்தை உடனடியாக அங்கீகரிக்கும் வகையில் சில உறுதியான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் .

**எதிரொலி: ஆனால் பாலஸ்தீன அகதிகளை திரும்பிச் செல்லுமாறு கோரப்பட்ட சம்பவங்கள் நடக்கின்றன. மனிதாபிமானக் கண்ணோட்டத்தில் பாலஸ்தீனத்திலிருந்து வரும் அகதிகளை ஏற்றுக்கொள்வதற்கு நாம் திறந்த மனதுடன் இருக்க வேண்டும் அல்லவா?**

(14ஆம் பக்கம் பார்க்க)

# We can do Better

## Anthony D'Adam

**Anthony D'Adam is a well-known Australian politician. He has been a member of the New South Wales Legislative Council since 2019, representing the Australian Labour Party. We have interviewed him over the phone for Ethiroli. A summary of that interview follows.**

**Ethiroli: Thanks for allocating time for us to interview. Let's start with the question. As a Labour MP, how would you rate Labour's one-year ruling in NSW? Are you satisfied with the outcome so far?**

D'Adam: I think it's been steady progress. The government has inherited a difficult situation and a lot of neglect in our public sector, particularly around human infrastructure. Our public sector workers, particularly in education and health, were neglected, leading to staff shortages that the government is now putting in place measures to try and address, particularly around improved salaries and conditions for public sector workers so that we can attract and retain the teachers, the nurses, the paramedics, and the police that we need across the state.

**Ethiroli: But we have the major problem, i.e., the cost-of-living crisis impacting NSW citizens. The people are suffering from rising living expenses, an energy bill, and a rental crisis. Though there are some relief measures being implemented by the government, but it is not sufficient to address the issues. As a ruling party MP, what are your views about this crisis and how we can address it?**

D'Adam: Yeah, I think there's limited tools that the state government has in relation to cost of living measures. There are some interventions that we can make and where we've been able to take those measures, but a lot of the drivers of the cost-of-living crisis are a result of macroeconomic factors and decisions that lie with the federal government. To be honest, in terms of trying to address the cost of living, Obviously, one of the biggest sources of the rising cost of living is the cost of housing, and the Labour Party is trying to put in place measures that are going to address the long-term structural problems around housing supply that are leading to the cost of housing being prohibitive and unaffordable for a lot of people trying to enter the housing market, and that flows through into rents and those costs associated with renting.

**Ethiroli: But in some countries, i.e., Finland, where the council controls the number of vacant properties, It will ensure that the real estate agents and owners can't increase the rent. Why can't we take such measures here? Rentals keep on uprising, and people are moving further away from the city. It's putting a lot of pressure on the common people. How are we going to address this situation?**

D'Adam: I think, obviously, the issues around renting are complex, and there's certainly suggestions about the kinds of measures that might be put in place that might be able to contain rental inflation and the increases in rents. One of the things that, obviously, Labor has been looking at is the question around no-grounds evictions, and that's an area where we can increase, I suppose, the leverage that renters have and curtail the ability of landlords to opportunistically evict tenants to try and capitalize on the ability to reap higher returns from investment properties through raising the rents for new renters that occupy the property after the previous tenants have been evicted. So, that's an intervention that Labor is in the process of considering, and I expect that there'll be legislative change in the pipeline on that front, which should improve the overall situation of renters. But the fundamental issue around the rental market is the question of supply. We are taking real steps to try and address the supply of housing in this state, and the result of that will be a greater housing supply, which should flow through in terms of less pressure in the rental market.

**Ethiroli: You've mentioned that Labor has put a lot of efforts into the education sector, but I know that in several schools, enrolment has increased significantly. The staff is struggling to cope with. There have been reports that significant government funds go to private schools. As a Labor government, how are we trying to mitigate these issues, i.e., ensure that the right funding goes to public schools where the people can afford them? So, what are the measures we have taken to address the situation?**

D'Adam: At this point in time, we're in the middle of a negotiation with the Commonwealth around a national education agreement that we are hoping will deliver the full recommended funding for every public school. So, the school resourcing standard is the mechanism that was developed through the Gonski report and proposals. That idea has never been fully realized in New South Wales. Public schools haven't been fully funded to the standard that has been designated through Gonski as what is required to deliver a quality public education. And New South Wales Labor is committed to ensuring that, through a national agreement, we get fair funding for public schools, whether they're funded to the requisite amount consistent with the Gonski program. So, that's in the pipeline now. Obviously, we're committed to addressing the question of teacher shortages through improved salaries and conditions for teachers—the highest pay increase for public school teachers in decades.

Hopefully that will help us start to turn around the long-term decline in the teaching workforce in the public sector by being able to attract and retain high-quality teachers that can deliver a high-quality education to students in the public system.

**Ethiroli: During the election campaign, Mr. Minns said if Labor gets elected, we will do the poker machine reforms, especially introducing the cashless cards. So, it's been more than a year. I haven't seen any significant updates about the introduction of cashless cards.**

D'Adam: Yeah, so we implemented a trial. Because, obviously, I mean, Labor took a very prudent and cautious approach to this. A cashless gaming card was put forward as a measure that might address problem gambling. But obviously, the hospitality industry is an important industry. It employs a lot of people. We wanted to make sure that if we were going to make an intervention, it was effective. And that's why Labor, rather than just implementing across the board, has taken a prudent approach. We've put in a trial. I understand that that trial's been under way in Newcastle. And my understanding of the results of that is that it's inconclusive that the cashless gaming card has had a material effect on reducing problem gambling. So, I think we're still in the trial phase. And we're considering the implications further. But I think, obviously, you want a government that's guided by the evidence and taking steps that are going to make a real difference as opposed to implementing change without necessarily understanding the full implications or whether it will achieve the goals that we've hoped that the change would make.

**Ethiroli: Thanks. So, if the cashless cards are not going to address the problem of gambling, what are the other measures we must take to address these issues?**

D'Adam: Is there anything that's been discussed on this? I'm not sure this has been published because I couldn't find anything. I mean, this is not really an area where I would have great expertise. I think in any of these complex social problems, we should just be guided by expert advice. And I'm sure that the minister is receiving good advice in this space. It's not a question that the government wants to take real steps to address issues of problem gambling. We are committed to addressing the issues. It's just about finding the appropriate measures.

**Ethiroli: The alarming rate of domestic violence is happening all over the nation. Do we have any plans to address these issues?**

D'Adam: Everyone is horrified by the recent examples of domestic violence and the murder of women in horrible circumstances. And we all want to make sure that women are safe everywhere. I think the government is looking at reviewing the bail laws to see what improvements can be made to avoid the situation that emerged in the central west. So, I think that's certainly one concrete measure. I mean, there's a range of programmes.

I think there's a national cabinet occurring or has occurred this week where the issue will be discussed and considered, and hopefully, we'll get some real change coming out of that process.

**Ethiroli: You are one of the strong voices in the Palestine conflict. But we do not see any ceasefires happening in the near future. I understand that this is not handled by the state government. Being a Labour Party member, are you happy with the actions taken so far on this?**

D'Adam: Yeah, I think at a federal level, the government can do this. I mean, there's very little that the state government has in terms of tools that are available to it to influence what's happening in relation to international affairs. But certainly, the federal government could do more, in my view. Australia has an obligation to ensure adherence to international law and to make sure that we are not supporting genocide. And that means making sure that we're not engaged in supporting the actions of the Israeli government through military cooperation, intelligence cooperation, the supply of weapons, or even just engagement with the Israeli defence industry. Like these, these are areas where Australia could take concrete action. We could apply sanctions. And I think that's appropriate in this circumstance. There should be a more robust diplomatic response from the federal government in relation to our diplomatic relations with Israel. I think these are the kinds of measures that I would be looking for. My view is that the Australian government should be progressing in recognition of Palestinian statehood.

That's certainly something that Labour is committed to as a policy. But progress on that has not been very satisfactory. And Australia needs to elevate that issue. We could take some definitive action in terms of recognising it immediately.

**Ethiroli: But there are incidents in which some Palestinian refugees have been asked to go back. As a humanitarian point of view, we should be open to accepting refugees coming from Palestine.**

D'Adam: Yeah, my view is that we've taken a very open and humanitarian approach to those fleeing conflict in Ukraine. And I think there's no reason, as far as I can see, why we shouldn't apply the same level of support and generosity to those fleeing the conflict in Gaza.

**Ethiroli: I think that's my question as well. We see there are double standards for accepting refugees from Ukraine and Gaza. Shouldn't we follow the same standards?**

D'Adam: we should. Can I emphasise that the situation in Ukraine is horrific? And those fleeing the Ukrainian conflict are worthy of a very open-hearted approach in terms of trying to help them find a safe haven in Australia.

**Ethiroli: I think you are one of the prominent voices on the Tamil genocide that happened in Sri Lanka and asked for Magnitsky legislation to be implemented. But there haven't been any significant movements on that. Do you still see the relevance of Magnitsky's legislation? and the perpetrator should be punished?**

D'Adam: I think Canada has really taken a much stronger position in terms of the Tamil genocide in Sri Lanka. And we should be following Canada's lead in individually sanctioning those who are responsible for horrific crimes against humanity. I'm for Australia being an exemplar of defending human rights, participating in international forums, and being a champion for human rights. We should be. We're. At its core, the underlying principles of Australian democracy are founded on respect for human dignity and human rights. And we should be champions for that in international forums. And we should be consistent. Yeah, I think we should be consistent and transparent.

The approach should be safe for everyone, no matter which part of the world the tragedy happens in.

**Ethiroli: You are a strong believer in nonviolent movements, and you have always supported nonviolent movements. I come from India. Our father of the nation, Mahatma Gandhi, was well known for his nonviolent movement. So, what are your views about Gandhi and his non-violent movements?**

D'Adam: I'm a careful student of the US civil rights movements. It drew its inspiration from the liberation struggle in India and the techniques that were developed by Gandhi in the struggle against British imperialism in India. I think that's a model for how we can achieve social change through nonviolent means through moral power. If we could pursue change across the globe through exclusively nonviolent means, then the world would be a better place.

**Ethiroli: Yeah, definitely. Australia is a multicultural country, and we can see a lot of immigrants coming in. There are second-generation and third-generation immigrants. Have you seen the active participation coming from the immigrants?**

D'Adam: I'm active in the Labour Party in Western Sydney. It's a very multicultural community. And the Labour Party reflects that diversity. It's a multicultural party. And there are many immigrant communities that

(See Page 14 )

# உக்ரேனுக்கு ஒரு நீதி, காஸாவுக்கு இன்னொரு நீதி நாம் இரட்டை நிலைப்பாடுகளுடன் தான் இருக்கிறோம்

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

**டி'ஆடம்:** ஆம், உக்ரைனில் மோதலில் இருந்து தப்பியோடுபவர்களுக்கு நாங்கள் மிகவும் வெளிப்படையான மற்றும் மனிதாபிமான அணுகுமுறையை எடுத்துள்ளோம் என்பதே எனது கருத்து. அதே போன்று காஸா மோதலில் இருந்து தப்பியோடுபவர்களுக்கு நாம் ஏன் அதே அளவிலான ஆதரவையும் தாராள மனப்பான்மையையும் பயன்படுத்தக்கூடாது என்பதற்கு எந்தக் காரணமும் இல்லை என்று நான் நினைக்கிறேன்.

**எதிரொலி: என்னுடைய கேள்வியும் அதுதான். உக்ரைன் மற்றும் காஸாவிலிருந்து அகதிகளை ஏற்றுக்கொள்வதில் இரட்டை நிலைப்பாடுகள் இருப்பதை நாங்கள் வெளிப்படையாக காண்கிறோம். ஏன் ஒரே நிலைப்பாட்டினை பின்பற்றக் கூடாது ?**

**டி'ஆடம்:** ஆம். நாம் ஒரே நிலைப்பாட்டினையே பின்பற்ற வேண்டும். உக்ரைனில் நிலைமை பயங்கரமானது என்பது நாம் அறிந்தது தான் அல்லவா ? உக்ரேனிய மோதலில் இருந்து தப்பியோடியவர்கள் ஆஸ்திரேலியாவில் பாதுகாப்பான புகலிடத்தைக் கண்டறிவதில் நாம் திறந்த மனதுடன் உதவ வேண்டும். அதே போன்று காஸா மோதலில் தப்பித்து வருபவர்களுக்கும் நாம் உதவ வேண்டும்.

**எதிரொலி: இலங்கையில் நடந்த தமிழ் இனப்படுகொலை குறித்து மேக்னிட்ஸ்கி சட்டத்தை அமுல்படுத்தக் கோரியவர்களில் முக்கியமானவர் நீங்கள் .ஆனால் அது தொடர்பாக குறிப்பிடத்தக்க எந்த முன்னேற்றமும் இல்லை. நீங்கள் இன்னும் மேக்னிட்ஸ்கியின் சட்டத்தின் தேவையை எதிர்பார்க்கிறீர்களா? மற்றும் போர்க் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டுமா?**

**டி'ஆடம்:** இலங்கையில் நடந்த தமிழ் இனப்படுகொலையின் குறித்து உண்மையில் கனடா மிகவும் வலுவான நிலைப்பாட்டை எடுத்துள்ளது என்று நான் நினைக்கிறேன். மனிதகுலத்திற்கு எதிரான கொடூரமான குற்றங்களுக்கு காரணமானவர்களை எதிர்கொள்வதில் கனடாவின் வழியை நாம் பின்பற்ற வேண்டும். மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், சர்வதேச மன்றங்களில் பங்கேற்பதற்கும், மனித உரிமைகளின் நாயகனாக இருப்பதற்கும் ஆஸ்திரேலியா ஒரு முன்மாதிரியாக இருக்க வேண்டுமென்று நான் நினைக்கிறேன். ஆஸ்திரேலிய ஜனநாயகத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் மனித கண்ணியம் மற்றும் மனித உரிமைகளுக்கான மரியாதையின் அடிப்படையில் நிறுவப்பட்டுள்ளன. சர்வதேச மன்றங்களில் அதற்கு நாம் முன்னோடியாக இருக்க வேண்டும். மேலும் நாம் சீராகவும் வெளிப்படையாகவும் இருக்க வேண்டுமென நினைக்கிறேன். உலகின் எந்தப் பகுதியில் துயரம் நடந்தாலும், நமது அணுகுமுறையானது அனைவருக்கும் பாதுகாப்பாக இருக்க வேண்டும்.

**எதிரொலி: நீங்கள் அகிம்சை இயக்கங்களில் வலுவான நம்பிக்கை கொண்டவர், எப்போதும் அகிம்சை இயக்கங்களை ஆதரிப்பவர்.**
**எனவே, காந்தி மற்றும் அவரது அகிம்சை இயக்கங்கள் பற்றி உங்கள் கருத்து என்ன?**

**டி'ஆடம்:** நான் அமெரிக்க சிவில் உரிமைகள் இயக்கங்களின் வரலாற்றை கவனமாக படித்த மாணவன். அந்த போராட்டங்கள் இந்தியாவின் விடுதலைப் போராட்டத்திலிருந்தும், காந்தியால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்தில் உருவாக்கப்பட்ட நுட்பங்களிலிருந்தும் உத்வேகத்தைப் பெற்றது. தார்மீக சக்தியின் மூலம் வன்முறையற்ற வழிமுறைகள் மூலம் நாம் எவ்வாறு சமூக மாற்றத்தை அடைய முடியும் என்பதற்கு இது ஒரு முன்மாதிரி என்று நான் நினைக்கிறேன். வன்முறையற்ற வழிமுறைகள் மூலம் உலகம் முழுவதும் மாற்றத்தைத் தொடர முடிந்தால், இந்த உலகம் ஒரு அனைவரும் வாழ்வதற்கு சிறந்த இடமாக என்றும் இருக்கும்.

**எதிரொலி: ஆஸ்திரேலியா ஒரு பன்முக கலாசார நாடு, மேலும் ஏராளமான புலம்பெயர்ந்தோர் இங்கு வருவதை நாம் காணலாம். இரண்டாம் தலைமுறை மற்றும் மூன்றாம் தலைமுறை குடியேறியவர்கள் உள்ளனர். புலம்பெயர்ந்தவர்களிடமிருந்து வரும் அரசியல் சார்பான பங்களிப்பை எப்படி பார்க்கிறீர்கள் ?**

**டி'ஆடம்:** நான் தொழிலாளர் கட்சி சார்பாக மேற்கு சிட்னியில் களப்பணியாற்றுகிறேன். இங்குள்ளது மிகவும் பன்முக கலாசார சமூகம். தொழிலாளர் கட்சியானது அந்த பன்முகத்தன்மையை பிரதிபலிக்கிறது. எங்கள் கட்சி பன்முக கலாசாரக் கட்சி. தொழிலாளர் கட்சியின் உறுப்பினர்களாக பல புலம்பெயர்ந்த சமூகமக்கள் இருக்கின்றனர். நான் புலம்பெயர்ந்த சமூகங்களை அரசியலில் ஈடுபட ஊக்குவிப்பேன். அரசியலில் ஈடுபடுவதே குடிமக்களுக்கும் அரசாங்க இயந்திரத்திற்கும் இடையே ஒரு தொடர்பை ஏற்படுத்துவதற்கு மக்களுக்கு குரல் கொடுப்பதற்கான ஒரு வழியாகும். குடிமக்கள் நமது ஜனநாயகத்தில் பங்கேற்கவும், அவர்களின் குரல்களைக் கேட்கவும், அவர்களின் கவலைகளை அரசாங்கத்தால் அங்கீகரிக்கவும் கிடைக்கக்கூடிய முக்கியமான நடவடிக்கைகள் அல்லது வழிமுறைகளில் இதுவும் ஒன்றாகும். தொழிலாளர் கட்சி போன்ற அரசியல் கட்சிகள் மூலம் அந்த அரசியல் செயல்பாடுகள் அர்த்தமுள்ளதாக இருப்பதற்கும் பயனுள்ளதாக இருப்பதற்கும் அவசியம். மேலும் அரசாங்கம் சமூகத்தின் தேவைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுப்பதற்கும் பல்வேறு இனங்களின் பங்களிப்பு மிக அவசியம். .

**எதிரொலி: தொழிலாளர் கட்சி புலம்பெயர்ந்த சமூகத்திற்கு கணிசமான வாய்ப்புகளை வழங்குவதாக நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா? கடந்த தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கையை பார்க்கும்போது, அந்த சதவீதம் சமூகத்தை பிரதிநிதித்துவப் படுத்துவதாகத் தெரிகிறதா?**

**டி'ஆடம்:** நம்மால் இன்னும் சிறப்பாக செய்ய முடியும். தேர்தலில் போட்டியிடுவதென்பது புலம்பெயர்ந்த சமூகங்கள் ஆஸ்திரேலியாவில் தங்கள் தடங்களை பதிக்கவேண்டிய செயல்முறையின் விளைவாகும். எனது தந்தை இந்த நாட்டிற்கு குடியேறிய இத்தாலியரின் மகன். இரண்டாவது மற்றும் மூன்றாம் தலைமுறையினர் சமூகத்தில் கலந்துறவாடும்பொழுது பிரதிநிதித்துவத்திற்கான பாதை மிகவும் எளிதாகிறது. நமது நாடாளுமன்றங்களில் நமது பன்முகத்தன்மையின் சிறந்த பிரதிநிதித்துவம் இருப்பதை நாம் எல்லோரும் விரும்புகிறோம். அதை அடைய நாம் கடினமாக உழைக்க வேண்டும்.

**எதிரொலி: இன்னும் சவால்கள் இருப்பதாகவே நான் நினைக்கிறேன், இல்லையா? ஐரோப்பிய நாடுகளில் இருந்து வரும் புலம்பெயர்ந்தோர் மற்றும் பிற நாடுகளில் இருந்து வரும் புலம்பெயர்ந்தோர் மைய அரசியலில் நுழைவது இன்னும் சவாலாக உள்ளது, இல்லையா?**

**டி'ஆடம்:** ஆமாம், இது இன்னும் ஒரு சவால் தான்.

**எதிரொலி: நீங்கள் தரப்பட்டியல் (rank-and-file) முறையினை ஆதரிப்பவர், மேலும் கட்சிக்குள்ளேயே ஜனநாயகம் செயற்படுத்தப்பட வேண்டும் என்று நீங்கள் விரும்பினீர்கள். கட்சி அதிகாரமையமாக்கலில் இருந்து விலகி , ஜனநாயகமாகச் செயற்படுகிறது என்று பார்க்கிறீர்களா?**

**டி'ஆடம்:** நான் அப்படித்தான் நினைக்கிறேன். தரப்பட்டியல் முறை முக்கியமானது என்று நான் கருதுவதற்கான காரணங்களில் ஒன்று, நமது நாடாளுமன்றங்களில் அதிக பன்முகத்தன்மையை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான பாதையை அது வழங்குகிறது என்பதேயாகும். ஒரு புலம்பெயர்ந்த சமூகம் உருவாகும்போது, வீட்டு வசதி, கல்வி அல்லது சுகாதாரப் பாதுகாப்பு போன்ற சமூகத் தேவைகள் போன்ற தேவைகள் அரசாங்கத்தால் தீர்க்கப்பட வேண்டிய பல்வேறு தேவைகள் நிறைய இருப்பதை நீங்கள் உணர்வீர்கள். அந்தத் தேவைகளுக்காக மக்கள் வாதிடுவதற்கு பிரதிநிதித்துவம் தேவை, அந்தத் தேவைகளை நிவர்த்தி செய்ய சமூகத்தில் இருந்து ஒரு தலைமை வெளிப்படுகிறது. அது ஒரு அமைப்பை உருவாக்குகிறது, மேலும் அந்த அமைப்பு அரசியல் அமைப்பில் செல்வாக்குச் செலுத்தவும் , அந்த சமூகத்திற்கு அதிகாரத்தை வழங்கவும் முடியும். தரப்பட்டியல் முறையானது புலம்பெயர்ந்த சமூகங்களை ஒழுங்கமைக்கவும் பிரதிநிதித்துவத்தைப் பெறவும் அனுமதிக்கும் வழிமுறையாகும்.

உங்களிடம் அந்த மாதிரியான அமைப்பு இல்லையென்றால், அது ஒரு அதிகார மையப்படுத்தப்பட்ட அமைப்பாகிவிடும். வாக்காளர்களில் சமூகத்தின் பிரதிநிதித்துவம் இல்லாமல் மையத்திலிருந்து வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு அமைப்பாக மாறிவிடும். அவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. அந்தச் சமூகங்கள் அரசியல் பிரதிநிதித்துவம் இல்லாமல் செயல்பாட்டில் அதிகாரத்தையும் செல்வாக்கையும் செலுத்த முடியாது, அதாவது அவர்கள் நமது அரசியலில் குறைந்த செல்வாக்குடன் வலுவற்ற குரலாகவே இருப்பர். எனவே, புலம்பெயர்ந்த சமூகங்கள் நமது அரசியலமைப்பில் ஈடுபடுவதற்கும் பெறுவதற்கும், சில அதிகாரங்களைப் பயன்படுத்துவதற்கும் தரப்பட்டியல் முறையை ஒரு பாதையாகவே நான் பார்க்கிறேன், அது அப்படித்தான் இருக்க வேண்டும். அந்த புலம்பெயர்ந்த மக்களுக்கு அரசு வழங்கும் சேவைகள் தேவை. அவர்களின் குரல்களுக்கு செவி கொடுக்கப்பட வேண்டும். புலம்பெயர்ந்த சமூகங்கள் அனைவரும் ஒழுங்கமைக்கப்பட்டு தொழிலாளர் கட்சி செயல்முறைகளில் கூட்டாகப் பங்கேற்கும்போது தரப்பட்டியல் முறை இல்லையென்றால் அவர்களின் குரல்கள் ஒலிக்க முடியாது. ஒலித்தாலும் அவர்களின் குரலை யாரும் கேட்க மாட்டார்கள்.

**எதிரொலி: நாங்கள் புலம்பெயர்ந்தவர்கள் மற்றும் எண்ணிக்கையில் சிறுபான்மையினர். எங்களுக்குள்ளேயே பல பிரச்சினைகள் உள்ளன. அரசியல் மட்டத்தில் எமக்கான சரியான பிரதிநிதித்துவம் இல்லாததால் எங்களின் பெரும்பாலான பிரச்சினைகள் விவாதிக்கப்படவில்லை. எனவே, புலம்பெயர்ந்த சமூகத்தினருக்கு எங்களின் பிரச்சினைகளை சரியான முறையில் அணுக / தீர்க்க உங்கள் ஆலோசனைகள் என்ன?**

**டி'ஆடம்:** அமைப்புதான் முக்கியம் என்று நினைக்கிறேன். நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் அரசாங்கம் புரிந்துகொள்ளும் மொழியில் பேசக்கூடிய அமைப்புகளைக் கொண்ட சமூகங்கள் முக்கியமானவை. எனவே அந்த அமைப்பானது சுகாதாரச் சேவைகள், கல்வி அல்லது சமூகப் பாதுகாப்பு போன்று எதைச் சார்ந்ததாக இருந்தாலும் சரியாகவே இருக்க முடியும் . ஒரு சமூகமாக ஒழுங்கமைக்கப்பட்டு, அரசாங்கம் என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களோ அதை வெளிப்படுத்துவது பொதுக் கொள்கையில் செல்வாக்கு செலுத்துவதற்கும், தாக்கத்தை ஏற்படுத்துவதற்கும், அரசாங்கத்தின் கவனத்தை ஈர்ப்பதற்கும், சமூகங்கள் செய்யும் சேவைகளுக்கான ஆதாரங்களை வழங்குவதற்கும் அமைப்பினை ஏற்படுத்துவதே நிச்சயமான வழியாகும். அதுவே தேவையாகும்.

■

# We can do Better

(Continued from page 13)

are represented among the members of the Labour Party. And that's how it should be in a democracy. I would encourage migrant communities to get involved in politics. It's a way of giving voice to people so that there's a connection between the citizens and the machinery of government. That's one of the key measures or mechanisms that are available for citizens to participate in our democracy, to have their voices heard, and to have their concerns recognised by the government. And that process of political activity through political parties like the Labour Party is essential to that having meaning and being effective. And for the government to be more effective in representing and taking action to respond to the needs of the community.

**Ethiroli: Do you agree that the Labour Party is giving considerable chances to the immigrant community? Looking at the number of candidates contested in the last election, do you see that percentage represents the community?**

D'Adam: We can do better. Look, I think, to a certain extent, it is a product of the process of immigration and communities finding their feet in Australia. My father is the son of an Italian immigrant to this country. As the second and third generations become more enmeshed in society, the pathway to representation becomes a whole lot easier. It would be desirable for us to have a better representation of our diversity in our parliaments. And we should be working harder to try to achieve that.

**Ethiroli: I think there are still challenges, right? The migrants coming from European countries and the migrants coming from other nations getting into mainstream politics are still a challenge, isn't it?**

D'Adam: Yeah, It's a challenge.

**Ethiroli: You're a strong supporter of the rank-and-file system, and you wanted democracy to be implemented within the party itself. Do you still see that the party has moved away from the power hierarchy concept and is more democratic?**

D'Adam: I think so. One of the reasons why I think the rank-and-file system is important is that it does provide a pathway for greater diversity to be represented in our parliaments. When a migrant community emerges, you will find that there's a whole lot of needs that emerge that need to be addressed by the government, whether it's housing, education, or a range of social needs like health care, and they need advocacy. They need people to be able to advocate for those needs, and leadership emerges from within the community to address those needs.

That gives rise to an organization, and that organisation should be able to give power to that community to influence the political system. In the Labour Party, that's done by engaging communities in our structures. The rank-and-file system is the mechanism that allows migrant communities to get organised and to get representation.

If you don't have that system, if it's a centralised system, if it's a system where candidates are picked from the centre without the input of representation from the community in the electorate, well, then you're not going to be able to address their issues. Those communities aren't going to be able to exercise the same level of power and influence on the process, and that means they've got less voice and less influence in the politics of our society. So, like, I see rank and file as the pathway for migrant communities to be able to have some stake in our political system and exercise some power, and that's the way it should be. They should be able to exercise power.

They're citizens, and they're participants. They need the services that are provided by the government. They need to be able to be given a voice, and organization produces a capacity to influence, and that's what migrant communities can bring to the Labour Party when they all get organised and participate collectively in the Labour Party processes. But without rank-and-file preselection, that voice isn't there. The voice will never be heard.

**Ethiroli: We are immigrants and a minority community. We have many issues within ourselves. Most of our issues have never been discussed because we don't have any proper representation at the political level. So, what is your advice to the migrant community to get our issues addressed properly?**

D'Adam: I think organization is the key. Communities that are well-organised and have advocacy organizations that can speak in the language that the government understands are critical. So, whether it's advocacy around health services, education, or community safety, it doesn't matter what the issue is. Getting organised as a community and being able to articulate what you want the government to do is the surest way to be able to influence public policy, have an impact, get the government to pay attention, and provide the resources for the services that communities need.

**Ethiroli: Thanks, Mr. Anthony for your time.**

■

# இஸ்ரேல்-ஈரான் பதற்றமும் வளைகுடாப் போர்ச் சூழலும்

● சு.ரகுநாத்

**2024** ஏப்ரல் 14 இரவு .

இஸ்ரேல் மீது ஈரானின் ஆளில்லா விமானம் மற்றும் ஏவுகணைத் தாக்குதல் .

ஈரான் இப்படித் தாக்கக்கூடும் என்றும் அதற்கான எல்லாம் நியாயமும் அவர்கள் வசம் இருக்கிறது என்றும் உலகமே இதனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது தான். ஈரானின் நியாயம் தான் என்ன என்கிற கேள்வி உங்கள் மனதில் எழலாம்.

மிகச்சரியாக இரண்டு வாரங்களுக்கு முன்னர் சிரியாவின் டமாஸ்கஸில் உள்ள ஈரான் நாட்டின் தூதரகக் கட்டடங்கள் கொண்டு ஒட்டு மொத்த வளாகத்தின் மீது இஸ்ரேல் குண்டுகளை வீசியது. இஸ்ரேல்-பாலஸ்தீன யுத்தம் கடந்த 2023 ஒக்டோபர் முதல் நடைபெற்று வரும் சூழலில், அதன் தாக்கத்தில் ஒட்டு மொத்த அரபு நாடுகளுமே மெல்ல மெல்ல ஒரு வித பதற்றத்திற்குள் நிம்மதியிழந்து நிற்கும் நேரம் ,இந்த ஈரான் - இஸ்ரேல் தாக்குதல்கள் பதற்றத்தை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் சென்றுள்ளன.

சிரியாவின் டமாஸ்கஸில் உள்ள ஈரான் தூதரகத் தாக்குதல்களில் ஈரான் தனது முக்கிய ராணுவத் தளபதியான முகமது ரெசா சாஹேத்-அய் உள்ளிட்ட பல தளபதிகளை, அதிகாரிகளை இழந்தது.

இந்த சூழலில் தான் ஈரானின் பதிலடியை உலகே எதிர்பார்த்துக் காத்திருந்தது. இஸ்ரேல், அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் ஜோர்டான் ஆகியவற்றின் உதவியுடன் ஈரானிய எறிகணைகள் இடைமறிக்கப்பட்டன . சிரியாவில் நிகழ்ந்த தூதரகத் தாக்குதலுக்கு பதிலடியாக தற்காப்புக்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும், இந்த விவகாரம் தற்போது முடிவுக்கு வந்துள்ளதாகவும் ஈரான் அறிக்கை வெளியிட்டது.

இந்தப் போர்ச் சூழலில் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்குமாறு பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை அமெரிக்கா கடுமையாக வலியுறுத்தியது . 1948 முதல் இஸ்ரேல் தொடர்ந்து சட்ட விரோதமாக பாலஸ்தீனியப் பகுதிகளை முற்றுகையிட்டது அவற்றை ஆக்கிரமித்து தனது நாட்டு எல்லைகளை இடைவிடாது விரிவுபடுத்தியும், அந்த நிலத்தில்



பூர்வகுடிகளான பாலஸ்தீனர்களை இரண்டாம் குடிகளாகவும் பெரும் மதில்சுவர்களுக்கு உட்பட்டு வாழ்பவர்களாகவும் மாற்றியுள்ளது என்பது உலகம் அறிந்ததே.

ஒக்டோபர் 7, 2023 அன்று காசா பகுதியில் இருந்து ஹமாஸ் பெரும் தாக்குதல் ஒன்றை நடத்தியது , அது முதல் ஒரு பெரும் வதந்தியை இஸ்ரேல் மற்றும் உலக ஊடகங்கள் நிகழ்த்தி வருகின்றன , அதுவும் இடைவிடாது 24X7 மணி நேரமும் இந்த ஊடகத் தாக்குதல் உலக மனங்களின் மீது நிகழ்த்தப்படுகிறது , அதாவது இந்த போரை ஹமாஸ் தான் தொடங்கியது அதுவும் ஏதோ 2023 ஒக்டோபர் 7 ஆம் திகதி தான் இந்தப் போர் தொடங்கியது போல் அவர்கள் நித்தமும் பேசி வருகிறார்கள்.

1948 முதல் இஸ்ரேல் இடைவிடாது தொடர்ந்து நிகழ்ந்த போர்களில் தினசரி நடவடிக்கைகளில் கொன்று குவித்த பாலஸ்தீனர்களின் எண்ணிக்கை 50 லட்சங்களை தாண்டும் என்கின்றன ஆய்வுகள்.

ஒக்டோபர் 7,2023 முதல் இன்று வரை இஸ்ரேலிய அரசு புள்ளி விபரங்களின் படியே சுமார் 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள் . இஸ்ரேல் நிகழ்த்துவது போர் அல்ல, ஒரு இனப்படுகொலை என்பதை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

இஸ்ரேலின் மிகவும் செல்வாக்குமிக்க கூட்டாளியான அமெரிக்கா தொடர்ந்தும் இஸ்ரேலுக்கு எல்லா வகையிலும் உதவியே வருகிறது என்பதையும் நாம் இணைத்தே பார்க்க வேண்டும்.டெல் அவிவை கட்டுப்படுத்த அமெரிக்கா தவறிவிட்டது என்பதையும் வரலாறு பார்த்துக் கொண்டு தான் இருக்கிறது.

நெதன்யாகுவின் பாதுகாப்பு மற்றும் போர்க் கொள்கைகள் படுதோல்வி அடைந்துள்ளன. ஒக்டோபர் 7 தாக்குதலை அவரால் தடுக்க முடியவில்லை என்பதும் அவரது பெரும் தோல்வியே. காசா மீதான அவரது போர் அந்த இடத்தை ஒரு கல்லறையாக சுடுகாடாக மாற்றிவிட்டது.

ஹமாஸைத் தோற்கடித்து பணயக்கைதிகளை விடுவிப்பதிலும் நெதன்யாகு அரசாங்கம் தவறிவிட்டது, மேலும் தொடர்ந்த அவரது நடவடிக்கைகளாலும் பேச்சுக்களாலும் ஈரானையும் இஸ்ரேலையும் போரின் விளிம்பிற்கு அவர் அழைத்து வந்துவிட்டார்.

ஈரானின் ஹிஸ்புல்லா, ஹமாஸ் மற்றும் ஹூதிகள் ஆதரவு என்பதுவும் ஒரு வித கட்டுப்பாட்டை இழந்தால் அதுவே ஒரு பெரும் அணுஆயுதப் போருக்கே வழிவகுக்கும் என்று சர்வதேசப் பார்வையாளர்கள் தொடர்ந்து கவலை தெரிவிக்கிறார்கள். மறுபுறம் உலகின் ஆகப்பெரிய உளவு அமைப்பு நாங்கள் தான் என்று சுயதம்பட்டம் அடித்துக் கொண்ட மொஸாட் அமைப்பால் ஹமாஸின் தாக்குதல்களை கணிக்க இயலாதது அதன் தோல்வியே அல்லது அவர்கள் அறிந்தே தான் இந்த தாக்குதல்களை அனுமதித்தார்களா என்பதும் தொடர் விவாதமாக எழுந்துள்ளது. இப்பொழுது ஈரான் நிகழ்த்திய தாக்குதல்களையும் அவர்கள் கணிக்கத் தவறியதும் அவர்களின் ஆற்றல் குறித்த பெரும் சந்தேகத்தையே ஏற்படுத்தியுள்ளது.

ஒரு வெளிப்படையான போர் வெடித்தால், இஸ்ரேல் மற்றும் ஈரான் இரண்டும் ஒன்றுக்கொன்று அழிவை ஏற்படுத்துவதோடு அது நில்லாது மாறாக அது ஒரு உலக யுத்தத்துக்கு நம்மை அழைத்துச் செல்லும் ஆற்றல் படைத்தவை. நெதன்யாகுவின் முட்டாள்தனங்களை இனியும் அனுமதிக்காமல் அவரது அதிகாரங்கள் பறிக்கப்பட்டு ஒரு கூட்டுத் தலைமையை இஸ்ரேல் மக்கள் தேர்ந்தெடுக்காவிட்டால், இந்த மட்டற்ற அதிகாரப் போதை இஸ்ரேலை மட்டும் அல்ல, வளைகுடாப் பகுதியையே மனிதர்கள் வாழலாயக்கற்ற இடமாக மாற்றிவிடும். ■

# பிள்ளைக்கறி கேட்ட இந்தியத் தேர்தல் பத்திரங்கள்

ஒரு மருந்துக் கம்பனியில் மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன, அதை உட்கொண்ட மக்கள் பலர் இறந்து போகிறார்கள். மருந்துகளின் தர நிர்ணயத்தை உறுதி செய்யும் அமைப்புகள் இந்தத் தவறான மருந்துகளைக் கண்டுகொள்ளவில்லை, நூற்றுக்கணக்கில் குழந்தைகள், பெரியவர்கள் இறந்தும் இந்தத் தகவல்கள் ஊடகங்களில் வெளியான பின்னும் இந்திய ஒன்றிய அரசு இதனைக் கண்டுகொள்ளவில்லை என்றால் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள் - இனி சம்பவங்களுள் பயணிப்போம்..

கோவிட் காலத்தில் 'ரெம்டிசிவிர்' எனும் மருந்துக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது, அந்த மருந்தின் விலை லட்சங்கள் வரை உயர்ந்தது. ஒரு மருத்துவமனையில் 'ரெம்டிசிவிர்' மருந்து பலருக்கு கொடுக்கப்படுகிறது, உடன் அந்த நோயாளிகளுக்கு கடும் காய்ச்சல் ஏற்படுகிறது, அவர்களின் ஒட்சிசன் அளவு கடுமையாகக் குறைகிறது, அதிரடியாக அவர்கள் செத்து மடிகிறார்கள். இதனை பார்த்த மருத்துவர்கள் இதே போன்ற விளைவுகளை பல மருத்துவமனைகளில் ஏற்படுவதை பார்த்து அச்சப்படுகிறார்கள். இந்த மருந்தை உடனடியாக நிறுத்துகிறார்கள், அப்படி நிறுத்தியவுடன் பலர் காப்பாற்றப்படுகிறார்கள்.

உத்திரப்பிரதேசம், பிகார், மகாராஷ்டிரம், ராஜஸ்தான் என பல மாநிலங்களின் மருத்துவமனைகளில் ஒரே மாதிரியான சம்பவங்கள் நிகழ்கின்றன. குஜராத்தில் இருந்து இயங்கும் 'சைடஸ் கேடில்லா '(ZYDUS CADILLA) என்கிற நிறுவனம் தயாரித்த மருந்துகளில் இந்தக் கோளாறு உள்ளது கண்டுபிடிக்கப்படுகிறது. பல மாநில அரசுகள் இதனைக் கண்டுகொள்ளாமல் இருக்க பிகார் மட்டுமே இதனை முன்னெடுக்கிறது, முதலில் இந்த மருந்துகளை ஆய்வு செய்து அதில் நஞ்சு இருப்பதை உறுதி செய்கிறார்கள். உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்கிறார்கள்.



அ.முத்துக்கிருஷ்ணன்

பட்னா நீதிமன்றம் குஜராத் அரசுக்கும் அங்குள்ள உணவு மற்றும் மருந்து தரக்கட்டுப்பாட்டு வாரியத்துக்கு இதனை சரிபார்க்க உத்தரவிடுகிறது.

ஆனால் குஜராத் அரசோ அங்குள்ள உணவு மற்றும் மருந்துகள் தரக்கட்டுப்பாட்டு ஆணையமோ இதற்கு எப்பதிலும் அளிக்கவில்லை. இந்த சம்பவம் நிகழ்வதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பு தான் உலக சுகாதார நிறுவனம், ரெம்டிசிவர் தேவையில்லாத மருந்து, கோவிட்டுக்கும் இதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று திரும்ப திரும்ப அறிக்கை வெளியிட்டது .ஆனால் இதனை எல்லாம் பொருட்படுத்தாமல் இந்தியாவில் ஏழு நிறுவனங்கள் இந்த மருந்தை தயாரிக்க உரிமம் பெற்றன.

இத்தனை பெரும் எண்ணிக்கையில் மக்கள் இறந்தும் மோடி அரசும் இதனைக் கண்டுகொள்ளவில்லை. மாறாக இந்தக் கொலைப்பாதக மருந்துகளைத் தயாரித்த நிறுவனங்களிடம் அதே திகதியில் தேர்தல் பத்திரங்களின் வழியே பெரும் பணத்தை பெற்றுள்ளார்கள்.சைடஸ் கேடில்லா நிறுவனம் மட்டும் பா.ஜ.க. விற்கு தேர்தல் பத்திரங்கள் வழியே 18 கோடி ரூபா கொடுத்தது. மோடி ஆட்சிக்கு வந்ததும் FIT INDIA என்கிற முழக்கத்தை முன்வைத்தார், அதாவது இந்தியர்கள் உடல் ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டும் என்பதுவே அந்த முழக்கத்தின் வெளிப்பாடு. நாட்டு மக்கள் ஒரு கொலைபாதக மருந்தால் உயிரிழந்துகொண்டிக்கும் நேரம் அவர்களிடமே கோடிகளில் பணம் பெறுவது தான் உங்கள் FIT INDIAவா?

(17ஆம் பக்கம் பார்க்க)


தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்பேர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
luckysankaran@gmail.com
LuckyJewelleryMelborne
0387121974, 0415233284

# அம்பியுடன் 65 வருடங்கள்

● மாவை நித்தியானந்தன்

**கவிஞர் அம்பி என அன்பாக அழைக்கப்படும் இராமலிங்கம் அம்பிகைபாகன், ஏப்ரல் 27ஆம் திகதி சிட்னியில் தமது 95 ஆவது வயதில் காலமானார்.**



அம்பிகைபாகன் மாஸ்ரர் வந்தாரென்றால், எல்லாக் குழப்படிகளும் அடங்கிவிடும். பயமோ பக்தியோ என்று சொல்ல முடியவில்லை ஆனால் யூனியன் கல்லூரியில் ஒழுக்கத்தை நிலைநாட்டுவதில் பெயர் பெற்றிருந்த ஒருவர் "அம்பிகைபாகன் மாஸ்ரர்". ஒழுக்கத்துக்கும் கட்டுப்பாட்டுக்கும் புகழ் பெற்ற அதிபரான ஐ.பி. துரைரத்தினம், அவரை "Discipline Master" ஆக நியமித்திருந்தார்.

அம்பியின் மேல் மாணவர்கள் மிக்க அன்பு வைத்திருந்தார்கள். எனக்கு விருப்பமான ஆசிரியராக அவர் இருந்தார். மத்தியான உணவு இடைவேளையின்போது வகுப்பில் வைத்து நிறைய எழுதிக் கொண்டிருப்பார். இந்தியாவிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த "கலைக்கதிர்" விஞ்ஞான சஞ்சிகைக்குக் கட்டுரைகள் எழுதுகிறார் என்று கண்டுபிடித்தோம். கவிதைகளும் நிறைய வெளிவந்து கொண்டிருந்தன.

மேல் வகுப்புகளுக்கு வந்த பின் அம்பிக்கும் எனக்குமிடையே நெருக்கமான உறவு வளரலாயிற்று. எனது கவிதைகள் பத்திரிகைகளில் வெளிவந்து கொண்டிருந்ததைத் தெரிந்து கொண்ட அம்பி "என்னை வந்து சந்தியும்" என்றார். புதுக் கொப்பி வாங்கி, பாட நேரத்துக்கு வெளியே யாப்பிலக்கண வகுப்பு ஆரம்பமாயிற்று. கவிதைகளைப் பார்த்து அபிப்பிராயம் சொல்வார். பச்சை மைப் பேனாவினால் குறிப்புகள் எழுதித் தந்தமை கண்முன் இன்றும் நிற்கிறது.

இதன்பின் இன்றுவரை அவர் என்னுடன் ஒரு "ஆசிரியராகவோ" அல்லது "முன்னாள் ஆசிரியராகவோ" அன்றி ஒரு நண்பனாகவே பழகி வந்திருப்பது அவரது குணாம்சத்தின் சிறப்பாகும். தெல்லிப்பழைக் காலம் முடிந்து, பின்னர் கொழும்பிலும், அதன் பின்னர் ஆஸ்திரேலியாவிலும் இந்த உறவு தொடர்ந்தது.

அம்பியின் யூனியன் கல்லூரிக் காலம் 1950 இல் இருந்து 1969 வரையாகும். அறுபதுகளின் ஆரம்பத்தில் பாடசாலைகள் யாவும் அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டபோது, கிறிஸ்தவ பாடசாலையாக இருந்த யூனியன் கல்லூரியிலும் பல மாற்றங்கள் இடம் பெற்றன. புதிதாக வந்த அதிபர் பாடசாலைக் கீதத்தை மாற்ற விரும்பி அந்தப் பொறுப்பை அம்பியிடமும், சங்கீத ஆசிரியராக இருந்த தொம்மைக்குட்டி மாஸ்ரரிடமும் ஒப்படைத்தார். இதன் பெறுபேறே "வாழ்த்தி வணங்கி மகிழ்வோம்" எனத் தொடங்கும் இன்றைய பாடசாலைக் கீதமாகும்.

சிறுகதை எழுத்தாளராக ஆரம்பித்து, கவிஞராகப் பரிணாமம் பெற்ற அம்பி, இடைக்காலத்தில் மாணவர் நலன் கருதி ஈழகேசரி பத்திரிகையில் தொடர்ச்சியாக விஞ்ஞான பாடங்களையும் எழுதினார். தமிழ்க் கலைச் சொல்லாக்கத்தில் ஈடுபாடு காட்டியதோடு, உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளிலும் பங்குபற்றிப் பங்களிப்புச் செய்தார்.

வைத்தியரான சாமுவேல் கிறீனின் மேல் அம்பி பேரபிமானம் கொண்டவர். வைத்தியர் கிறீன், இரு நூற்றாண்டுகளின் முன்னர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து, தமிழ் மொழி மூலம் மருத்துவம் கற்பித்தலில் பெரும் பங்களிப்புச் செய்தவர். முதலாவது ஆங்கில வைத்தியசாலையை நிறுவி, தமிழில் மருத்துவர்களைப் பயிற்றுவித்தார். அம்பி, கிறீன் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டு 1967 ஆம் ஆண்டில் "கிறீனின் அடிச்சுவடு" என்னும் அருமையான புத்தகத்தை வெளியிட்டார். இதன் பெருமையை உணர்ந்த சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் அதிபரான முத்துக்குமாரசாமி அவர்களின் ஊக்குவிப்பினால் இந்நூல் மறுசீரமைக்கப்பட்டு, "மருத்துவத் தமிழ் முன்னோடி" என்ற பெயரில் இந்தியாவில் வெளியிடப்பட்டது.

அம்பியின் கடும் முயற்சியால், இலங்கை அரசாங்கம் வைத்தியர் கிறீனின் படத்துடன் முத்திரையொன்றை 1998 நவம்பர் 11 ஆம் திகதி வெளியிட்டது. இதனால் வைத்தியர் கிறீன் கௌரவிக்கப்பட்டார் என்று சொல்வதைவிட, தமிழ்மொழி மூலம் வைத்தியக் கலையைப் பரப்பிய அவரது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பணியை நாடறிந்து வியந்தது என்பதே பொருத்தமானதாகும்.

1969 ஆம் ஆண்டில் அம்பி யூனியன் கல்லூரியிலிருந்து விலகி, பாடநூல் வெளியீட்டுத் திணைக்களத்தில் இணைந்து கொண்டார். அக் காலப்பகுதியில் நான் மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்ததால் அம்பியுடன் மீண்டும் நெருக்கமான உறவைப் பேணும் வாய்ப்புக் கிட்டியது. முருகையன், சிவானந்தன், சுந்தரலிங்கம், தாசீசியஸ், கந்தசாமி போன்றவர்களும் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் பணி புரிந்ததால், அது எழுத்தாளர்களையும் கலைஞர்களையும் சந்திக்க வசதியான ஒரு இடமாகவும் இருந்தது.

அக்காலம் கொழும்பில் கவியரங்கங்கள் கொடிகட்டிப் பறந்த காலம். மகாகவி, முருகையன், சில்லையூர் செல்வராசன், அம்பி, நுஃமான் முதலான மூத்த கவிஞர்கள் முதல், அப்பொழுது மாணவர்களாக இருந்த என்னைப் போன்ற இளையவர்கள் வரை பங்கு கொண்ட மரபுக் கவியரங்கங்கள் அடிக்கடி நடந்ததோடு, பிரபல்யமும் பெற்றிருந்தன. இதன் பிரதிபலிப்பாக, இலங்கை வானொலியிலும் மாதமொரு கவியரங்கம், பொங்கல், புத்தாண்டு, தீபாவளி போன்ற பண்டிகைக் காலக் கவியரங்கங்கள் என அடிக்கடி கவி-மழை பொழிந்து கொண்டிருந்தது. இவை எல்லாவற்றிலும் அம்பி வகித்து வந்த பங்கு முக்கியமானது. இலங்கை வானொலியில் "கலைக் கோலம்", "அறிவியல் அரங்கம்" போன்ற வாராந்த நிகழ்ச்சிகளையும் அம்பி சிறப்பாக நடாத்தி வந்தார்.

அம்பியின் கவித்துவம், மேடை நாடகங்களாகவும் பரிணமித்தது. வேதாளம் சொன்ன கதை, யாழ்பாடி ஆகியன அவரது குறிப்பிடத்தக்க கவிதை நாடகங்களாகும்.

பல்கலைக்கழக வாழ்க்கை முடிந்து தொழில் தொடங்கியபோது, நான் கொழும்பை விட்டு வெளியேற வேண்டியதாயிற்று. 1981 இல் அம்பியும் இலங்கையை விட்டு பப்புவா நியூகினி சென்றார். மீண்டும் அவரது தொடர்பு ஒஸ்ரேலியாவில் கிடைத்தது.

ஒஸ்ரேலியாவுக்கு வந்த பின்னரும், அதற்கு முன்னரும் இளைய தலைமுறையினருக்காக அம்பி ஆற்றிய பங்களிப்புகள் மிக முக்கியமானவை. சிறுவர்களுக்காக அருமையான கவிதைகளை அவர் படைத்திருக்கிறார். அவரது "கொஞ்சும் தமிழ்" என்னும் சிறுவர் பாடல்களின் தொகுப்பு, அழகான படங்களுடன் வண்ணப் பதிப்பாக, உயர்ந்த தரத்தில் தமிழ்நாட்டில் வெளியாகியிருக்கிறது. நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் வெளியிட்ட தமிழ்மொழிப் பாட நூல்களின் உருவாக்கத்திற்கு அம்பி ஆற்றிய பங்களிப்பு மிகப் பெரியது. மற்றொரு சந்தர்ப்பத்தில், மெல்பேர்ன் உதயம் பத்திரிகையில், வீசீஈ பரீட்சை வினாத்தாள்களின் தரத்தை முன்னேற்றுவதற்கான நல்ல ஆலோசனைகளை வழங்கித் தொடர்ச்சியாக அவர் பல கட்டுரைகளை எழுதினார். இவை அப்போதைய அரச பரீட்சைச் சபையின் கவனத்தை ஈர்க்கவும் தவறவில்லை.

இறுதியாக நான் குறிப்பிட விரும்புவது அம்பியின் நட்புப் பேணும் குணாம்சம் பற்றியாகும். அம்பியுடன் நட்பை வளர்த்துக் கொண்ட எவரும் இதை உணர்வர். மென்மையும், இனிமையும் கொண்ட பேச்சினாலும், தொடர்புகளைப் பேணிக்கொள்ளும் வல்லமையினாலும், அன்புடன் பழகும் பண்பினாலும், அவர் ஏராளமான உள்ளங்களில் நிரந்தர இடத்தைப் பிடித்துக் கொண்டிருந்தார் என்றால் மிகையல்ல. ■

---

# பிள்ளைக்கறி கேட்ட இந்தியத் தேர்தல் பத்திரங்கள்

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதே நேரத்தில் இன்னொரு ஒரு பெரிய சம்பவம் நடைபெற்றது. இந்தியாவில் 2018 இல் சிப்லா நிறுவனம் தயாரித்த இருமல் மருந்துகள் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தின. AMBRONOL, DOK 1 MAX ஆகிய இந்த இரண்டு இருமல் மருந்துகளை உட்கொண்ட உஸ்பேகிஸ்தானை சேர்ந்த 18 குழந்தைகள் இறந்து போனார்கள். அந்த நாட்டு அரசு உடனடியாக விசாரணைக்கு உத்தரவிட்டது.

இதே நேரத்தில் இந்திய இருமல் மருந்தை உட்கொண்டதால் காம்பியா மற்றும் கமரூன் நாடுகளில் 141 குழந்தைகள் இறந்து போனார்கள். இப்படி மூன்று நாடுகளில் இந்திய மருத்துவத் தயாரிப்புகளுக்கு குழந்தைகள் செத்து மடிந்த வண்ணம் இருந்தர்கள். ஒரு பொறுப்பான அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்??? உங்கள் மனதுக்குள் ஒரு ஆலோசனை நடத்திப்பாருங்கள், இந்த நிறுவனம் பயன்படுத்திய வேதிப்பொருட்களில் நஞ்சு உள்ளது என்பது கண்டறியப்பட்டது. இவை மனிதர்கள் உட்கொள்வதற்கான தகுதியுடையவை அல்ல மாறாக தொழிற்சாலைகளில் பயன்படுத்தும் வேதிப்பொருட்கள். பெயிண்ட் கம்பனிகளில் தான் இந்த வேதிப்பொருட்கள் பயன்படுத்தப்படும். 'இவர்கள் எங்களிடம் வாங்கும் போது எதற்கு வாங்குகிறார்கள் என்று எங்களுக்கு தெரியாது 'என்று அவர்களுக்கு கச்சா பொருட்களை விற்பனை செய்யும் நிறுவனமும் அறிவித்தது. ஆனால் இங்கே இந்தியாவில் 'இந்த ஒரு மருந்தை வேண்டுமானால் தடை செய்வோம் .ஆனால் அந்த நிறுவனத்தை தடை செய்ய முடியாது' என்று இந்திய அரசு முடிவெடுத்தது. ஒரு குற்றப்பத்திரிகை கூட தாக்கல் செய்யப்படவில்லை என்பது நம் காலத்தில் பெரும் அவலம் தானே.

Torrent Pharma நிறுவனத்தின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் அவர்களிடம் 77.5 கோடி ரூபாவுக்கு தேர்தல் பத்திரம் மூலம் பணம் பெற்றுள்ளது மோடியின் பா.ஜ.க. கட்சி. உஸ்பேகிஸ்தான் அரசு இந்த மருந்தை தடை செய்தது, தீவிர விசாரணை நடத்தியது. இது தொடர்பான 20 பேருக்கு 20 ஆண்டுகள் சிறை தண்டனைத் தீர்ப்பளித்தது. இந்தியாவில் தயாரிக்கப்படும் 54 மருந்து நிறுவனங்களில் இருமல் மருந்துகள் தரமானவையாக இல்லை என்று ஆய்வறிக்கை வெளிவந்தது. கடந்த நாற்பது ஆண்டுகளாக மூன்றாம் உலக நாடுகள் முழுவதற்கும் மிகத்தரமான மருந்துகளை மலிவான விலையில் வழங்கும் நாடாக இந்தியா பெற்ற பெயர் கடந்த ஐந்து ஆண்டுகளில் குழிதோண்டிப் புதைக்கப்பட்டது. இந்தச் சூழலில் மோடி- பா.ஜ.க. அரசு, 2023 ஒகஸ்டில் ஒரு முக்கியமான சட்டத்தை இயற்றியது, மருந்துகள் தயாரிக்கும் நிறுவனங்கள் இனி இது போன்ற விடயங்களுக்காக தண்டிக்கப்பட வேண்டியதில்லை என்றது அந்தச் சட்டம், எத்தனை மனிதர்கள் இறந்தாலும் இனி அவர்கள் பெரிதாகத் தண்டிக்கப்படவேண்டியதில்லை, இனி இவை கிரிமினல் குற்றங்கள் அல்ல என்றும் பிரகடனப்படுத்தியது. 'தேர்தல் பத்திரங்கள் வாங்குங்கள், பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வாருங்கள். கதை முடிந்தது வீட்டுக்கு கிளம்புங்கள். 'தேர்தல் பத்திரங்கள் தொடர்பான முழுமையான விபரங்கள் வெளிவந்த போது அதில் 945 கோடி ரூபா பணத்தை இந்திய மருத்துவ நிறுவனங்கள் பா.ஜ.க. உள்ளிட்ட கட்சிகளுக்கு வாங்கியுள்ளது அப்பட்டமாகத் தெரியவந்தது.

ப்ரீபெய்ட், போஸ்ட்பெய்ட் மற்றும் ரெய்டுக்குப் பிந்தைய லஞ்சம் உள்ளிட்ட நான்கு 'ஊழல் வடிவங்களில்' தேர்தல் பத்திரங்களை பா.ஜ.க. பயன்படுத்தியுள்ளது.

'ப்ரீபெய்ட் திட்டத்தின்' கீழ், 551 கோடி நன்கொடையாக பி.ஜே.பி-க்கு வழங்கப்பட்டது. மூன்று மாதங்களுக்குள், மத்திய அரசு மற்றும் பா.ஜ.க. ஆளும் மாநில அரசுகளால் ₹ 1.32 லட்சம் கோடி மதிப்பிலான ஒப்பந்தங்கள் மற்றும் திட்டங்கள் நன்கொடையாளர்களுக்கு வழங்கப்பட்டன.

போஸ்ட்-பெய்ட்' பிரிவின் கீழ், ₹62,000 கோடி மதிப்பிலான திட்டங்கள் மத்திய அரசு அல்லது பா.ஜ.க. மாநில அரசுகளால் வழங்கப்பட்டன் ஒப்புதல்கள் அல்லது ஒப்பந்தங்கள் கையெழுத்தான மூன்று மாதங்களுக்குள், இந்த நிறுவனங்களிடமிருந்து ₹580 கோடி தேர்தல் பத்திரங்கள் மூலம் பெறப்பட்டது.

41 கார்ப்பரேட் குழுக்கள் அமுலாக்க இயக்குநரகம், சிபிஐ அல்லது வருமான வரித் துறையால் மொத்தம் 56 சோதனைகளை எதிர்கொண்டன. இந்தக் கார்ப்பரேட் குழுக்கள் ₹2,592 கோடியை பா.ஜ.க.வுக்கு வழங்கியுள்ளன, அதில் ₹1,853 கோடி அவர்களுக்கு எதிரான ரெய்டுகளுக்குப் பிறகு வழங்கப்பட்டது. ஷெல்நிறுவனங்கள் மொத்தமாக வழங்கிய ₹543 கோடியில், ₹419 கோடி பா.ஜ.க.வுக்கு மட்டுமே நன்கொடையாக அளிக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் இறப்பில் கூட அந்த பிஞ்சு முகங்களை பார்த்து எவ்வித இரக்கமும் இல்லாமல் தேர்தல் பத்திரங்களின் மூலம் பணம் ஈட்டிய கதையை ஒரு தொன்மக் கதையாக நாம் தலைமுறைகள் தாண்டியும் சொல்லி வைக்க வேண்டும், மனிதர்கள் இப்படியும் வாழ்ந்தார்கள் என்கிற செய்தியை வருங்காலத் தலைமுறைக்கு சொல்லி வைப்போமே!! ■

# மாறாதா எங்கள் அரசியல் போக்கு?

● கருணாகரன்

தமிழ் அரசியல் எனவும் தமிழ்த்தேசிய அரசியல் என்றும் சொல்லப்படும் ஈழத்தமிழர்களுடைய அரசியலானது, பெரும்பாலும் சிறுவர்களுடைய மணல் விளையாட்டைப் போன்றே உள்ளது. கற்பனை அதிகம். முயற்சிகளும் அதிகம். நல் விளைவுகள் எதுவுமில்லாதவை. அதேவேளை இதில் ஒரு சிறு திருத்தமுண்டு. சிறுபிள்ளை மணல் விளையாட்டில் பிள்ளைகளுடைய மகிழ்ச்சியாவது இருக்கும். வெளியே பாதிப்பிருக்காது. இங்கே முன்னெடுக்கப்படும் தமிழ் அரசியலில் எதிர்விளைவுகளே அதிகம். குருதியும் கண்ணீருமே அதனுடைய விளைவு மொழி.

இதைப் பற்றிப் பொருட்படுத்தாமல் தொடர்ந்தும் விளையாடிக் கொண்டிருக்கின்றனர் ஒரு தரப்பினர். இது வன்மையாகக் கண்டிக்க வேண்டியது. ஏனெனில் இவர்கள் யதார்த்தத்துக்கும் நடைமுறைச் சாத்தியத்துக்கும் அப்பாலான தமது கற்பனைகளையும் விருப்பங்களையும் பொதுச் சமூக விருப்பமாக மாற்றிவிடுகின்றனர். தமது அரசியலில் வெற்றி கிட்டாது என்று தெரிந்தாலும் ஏன் இதைத் தொடர்ந்தும் செய்கிறார்கள் என்றால், இதில்தான் அவர்களுடைய அடையாளமும் இருப்பும் தங்கியுள்ளது. மட்டுமல்ல, அதிகமாகப் பாடுபடாமலே, சமூக நன்மகளை உருவாக்காமலே சுலபமாகச் சமூகத்தின் அங்கீகாரத்தைப் பெற்று விடலாம் என்ற சிற்றாசையே இதற்குக் காரணம். நிலவுகின்ற இனவாதத்தின் மீது தேசியப் புனுகைப் பூசும் பணியைச் செய்தாற்போதும். லாபமும் கொழிக்கும். புகழும் செழிக்கும். தேசியத் தியாகப் பட்டமும் கிடைத்து விடும்.

காலம் வலியுறுத்துகின்ற புதிய - சாத்தியமான அரசியலை முன்னெடுப்பதற்குக் கடினமாகப் பாடுபட வேண்டும். நிறையச் சவால்களையும் நெருக்கடிகளையும் ஏன் உடனடி அவதூறுகளையும் சந்திக்க வேண்டியிருக்கும். புதிய பாதையை அமைக்கும்போது எப்படிக் கடுமையாகக் கஸ்ரப்பட வேண்டியிருக்குமோ அப்படிச் சிரமமான விசயம் இது. எனவேதான் அதை விட்டு விட்டு, பழைய முறையிலேயே இனரீதியாக (தேசிய முலாம் பூசிய) அரசியலை முன்னெடுக்க விரும்புகின்றனர். அதற்குரிய நியாயப்படுத்தல்களைத் தந்திரோபாயமாகச் செய்கின்றனர். அதற்கு வாய்ப்பாக சிங்களத் தரப்பிலும் அரசிடமும் உள்ள தீவிர இனவாத நடவடிக்கைகள் உள்ளன. இனவாத அரசு, புதிது புதிதாக இனரீதியான வேறுபாட்டுப் பிரச்சினைகளை உருவாக்கிக் கொண்டேயிருக்கிறது. தற்போது மயிலம்பாவெளி மேய்ச்சற்தரைப் பிரச்சினை, தொல்பொருட் திணைக்களத்தின் பௌத்த விகாரைகள் அமைத்தல் என இது நடக்கிறது. இப்படி ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொன்றாக அரசு புதிய பிரச்சினைகளை உருவாக்கி, அதற்குப் பின்னே தமிழ்ச்சமூகத்தை அலைய விடுகிறது.

இந்தச் சூதைப் புரிந்து கொள்ளத் தவறும் இவர்களுடைய கற்பனைகளும் விருப்பங்களும் திரள்சமூகத்தின் விருப்பமாக மாறும்போது அல்லது அப்படி மாற்றிக் காட்டப்படும் விடயங்கள், பொது நிலைப்பாடாகும்போது அதனால் உண்டாகும் எதிர்விளைவுகளை மக்களே எதிர்கொள்கின்றனர். வர்க்க நிலையிலும் பதவி, அதிகாரம், வாழ்க்கைச் சூழல் போன்றவற்றினாலும் இவர்கள் அதிலிருந்து எப்போதும் தப்பி விடுகின்றனர். மக்களுக்கு எவ்வளவு பாதிப்பு வந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் மறுபடியும் மறுபடியும் இந்தச் சூதில் போதைத்தனமாகத் தொடர்ந்தும் ஈடுபடுகின்றனர்.

இதில் முதன்மைக் குற்றவாளிகள், போராட்ட அரசியலில் மாபெரும் தவறுகளை விட்ட தலைவர்களாவர். முன்னர் விடுதலை இயக்கங்களில் விட்ட தவறைத் திருத்திக் கொள்வதை விட இப்போது ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்தும் யோசனையை முன்வைத்தது வரையில் தொடர்ந்து தவறுகளை இழைத்துக் கொண்டிருக்கின்றனர். தங்கள் கடந்த கால, நிகழ்காலத் தவறுகளைக் குறித்து எந்த விதமான குற்றவுணர்ச்சியோ, சுய விமர்சனமோ, பொறுப்புணர்வோ இல்லாமல் தம்மைதாமே வெள்ளையடித்துக் காண்பிக்கும் தீய நாடகத்தை அரங்கேற்றுகின்றனர். அத்துடன் தொடர்ந்தும் சுய புத்தியிற் சிந்திக்காமல், சொந்த மக்களுக்கு நேர்மையாக இருக்காமல் பிற சக்திகளின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக மக்கள் விரோதச் சிந்தனையோடு செயற்படுகின்றனர்.

இதில் ஒரு தரப்பினர் முன்பு புலிகளைக் குற்றம்சாட்டித் தவறிழைத்தனர். பின்னர் புலிகளை ஆதரவாக வைத்துத் தவறிழைக்கின்றனர். இன்னொரு தரப்பினர் புலிகள் இல்லாத சூழலிலும் புலிகளைத் தவறாகச் சொல்லிச் சொல்லியே தமது தவறுகளைத் தொடருகின்றனர். தமது இயலாமையை மறைக்கின்றனர்.

புலிகள் இல்லாமற் போனதன் பின்னான 15 ஆண்டுகால அரசியல் அரங்கில் இவர்கள் அனைவரும் இயலாமையில் தடுமாறிச் சரிந்து கொண்டிருப்பதே வெளிப்படையான உண்மை. தங்களுடைய ஆளுமையையும் ஆற்றலையும் வெளிப்படுத்தி எவரும் தனிப் பெரும் சக்தியாக - ஆளுமையாக மேலெழவில்லை. எல்லோரும் சில்லறைகளாகவே சிதறிக்கிடக்கின்றனர். ஒன்றுமே - ஒருவருமே உருப்படியில்லை என்பதே இவர்களைக் குறித்த இன்றைய மக்களின் கணிப்பாகும்.

ஒட்டு மொத்தத்தில் இதுவரையான தமிழ்த்தேசிய அரசியல் அப்படித்தான் உள்ளது. ஈழப்போராட்டத் தவறுகள், முள்ளிவாய்க்கால் முடிவாக அமைந்த பிறகும் அதிலிருந்து எதையும் கற்றுக் கொள்ளாமல், கற்றுக் கொள்ள முயற்சிக்காமல் பழைய பாதையில் ,பகை முரண் அரசியலாகத் தொடர்வது இதற்கு ஒரு உதாரணம். அதாவது இவர்களுடைய அரசியலானது யதார்த்தத்துக்கும் நடைமுறைக்கும் அப்பால், சர்வதேச அபிப்பிராயத்துக்கு மாறாகத் தொடர்ந்தும் தவறாகவே முன்னெடுக்கப்படுகிறது.

இதை எளிமையாகச் சொன்னால், போருக்குப் பிறகான அரசியலை - (Post – War politics) இணக்கத்துக்கும் நிரந்தரத் தீர்வுக்கும் உரிய அரசியலை - இவர்கள் முன்னெடுக்காமல் தவிர்த்து வருகின்றனர். காலப் பொருத்தமற்ற முரண் அரசியலை முன்னெடுக்கின்றனர். ஆனால், காலமும் சூழலும் நிலைமைகளும் மாறி விட்டன. நம்முடைய கையில் வைத்திருக்கும் செல்போன்கள்கூட பல Version களைக் கண்டு வருகின்றன. நம்முடைய திருமணங்கள், அதிலே பரிமாறும் உணவுகள், நம்முடைய உடைகள், பழக்க வழக்கங்கள், நம் பிள்ளைகளின் சிந்தனை, அவர்களுடைய தேவைகள், நடை, உடை, பாவனை, நமது வீடுகள், வீட்டுப் பொருட்கள் என அனைத்தும் மாறி விட்டன. ஏன், நம்முடைய கோவணம் என்ற உள்ளாடை கூட மாறி விட்டது. ஆனால், அரசியலில் மட்டும் நாம் மாறவே மாற மாட்டோம் என்று பிடிவாதமாக நிற்கிறோம். அதுவும் ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னே சென்று பழைய இடத்தில் சௌகரியமாக நின்று விடுகிறோம். இது எவ்வளவு முரணானது! இதையிட்டு ஏன் நாம் சிந்திக்க மறுக்கிறோம்?

தமிழ் அரசியக் கட்சிகளும் அவற்றின் தலைவர்களும் தமிழ் ஊடகர்களும் ஆய்வாளர்கள் என்று தம்மைக் கருதிக் கொள்வோரும் மிகப் பின்னகர்ந்து 1960, 1970 களில் தமிழர்களால் முன்னெடுத்த பகைமுரணை வளர்ப்பதிலேயே தொடர்ந்தும் குறியாக இருக்கின்றனர். அதாவது பதிலுக்குப் பதில். ஏட்டிக்குப் போட்டி என சிங்கள இனவாதத்துக்குப் பதிலாகத் தமிழ் இனவாதத்தை வளர்ப்பதிலேயே குறியாக இருக்கின்றனர்.





இப்படி இன அரசியலை வளர்த்தால் அதனால் தமிழ்ச் சமூகத்துக்கு தொடர்ந்தும் பாதிப்பே நேரும் என்பதே கசப்பான நிஜம். கசப்பான அனுபவம். இதனை ஓரளவுக்குத் தெளிவாக உணர்ந்திருப்பவர் மூத்த அரசியல்வாதியான சம்பந்தன். ஆயிரமாயிரம் விமர்சனங்கள், குறைபாடுகள் இருந்தாலும் இன்றைய தலைவர் அவரே. சர்வதேச அளவிலும் உள்நாட்டிலும் முக்கியமான ஒரு அரசியற் தலைவராக சம்பந்தனே உள்ளார். அதற்குக் காரணம், அவருடைய அரசியற் தொடர்ச்சியும் அதில் பெற்றுக் கொண்ட அனுபவங்களும் அவர் மேற்கொள்ளும் சில அணுகுமுறைகளுமாகும்.

குறிப்பாக போருக்குப் பிந்திய சூழலில் “ஐக்கிய இலங்கைக்குள் நாம் தீர்வைக் காணத் தயார்” என்று இலங்கையின் தேசியக் கொடியை ஒரு அடையாளமாக அவர் ஏந்தி நின்றார். ஆனால் அது தமிழ் அரசியற் தரப்பினரால் கேலிப்படுத்தப்பட்டது. பதற்றத்துடன் மறுதலிக்கப்பட்டது. இருந்தாலும் சம்பந்தன் தன்னுடைய நிலைப்பாட்டிலிருந்து பின்னகரவில்லை. இப்போதும் அவர் ஐக்கிய இலங்கைக்குள் தீர்வைக் காணும் நிலைப்பாட்டுடன்தான் உள்ளார். எவர் மறுதலித்தாலும் சம்பந்தனுடைய தெரிவு அதுதான். அவர் பகைமுரணை வளர்க்க விரும்பவில்லை. அப்படிப் பகை முரணை வளர்த்தால், அது பாரிய எதிர்விளைவை தமிழ்ச்சமூகத்துக்கு உண்டாக்கும் என்பதைத் தன்னுடைய நீண்ட அரசியல் அனுபவத்தின் வழியாகப் புரிந்திருக்கிறார். பிராந்திய - சர்வதேச சக்திகள் இலங்கையின் இனமுரணைத் தீர்ப்பதில் ஆர்வம் கொள்ளாமல், அதை மேலும் வளர்த்தெடுப்பதிலேயே கரிசனையோடுள்ளன. தமது நலனுக்காக அவை ஒவ்வொரு சமூகத்தையும் கட்சிகளையும் பயன்படுத்த விளைகின்றன என்பதைச் சம்மபந்தன் சரியாகவே கணித்துள்ளார்.

இதனால்தான் ஜனாதிபதித் தேர்தலிலும் பொது வேட்பாளர் என்ற தெரிவைச் சம்பந்தன் மறுக்கிறார். சம்பந்தனுடைய அணுகுமுறைகள் அனைத்தும் பெருந்திரள் தமிழ்ச்சமூகத்தினால் துயரமான முறையில் மறுதலிக்கப்படுகிறது. ஆனாலும் இதிலே ஒரு கவனிக்கத்தக்க முரணம்சம் ஒன்றுண்டு. சம்பந்தனுடைய அரசியல் நிலைப்பாட்டையும் தெரிவுகளையும் நிராகரித்தாலும் அவர்தான் இன்று தமிழர்களின் தலைவர். அதேவேளை தமது தலைவரின் நிலைப்பாட்டையும் தெரிவையும் மறுக்கிறது தமிழ்த்தரப்பு. தன்னுடைய தலைவராக ஒருவரை ஏற்றுக் கொள்ளும் சமூகம், அவருடைய அரசியலை, அவருடைய அணுகுமுறைகளை மறுக்கிறது. இதனை எப்படிப் புரிந்து கொள்வது?

இருந்தாலும் அதற்குரிய வரலாற்றுப்பெறுமதி ஒருபோது சம்பந்தனுக்குக் கிடைக்கும். அவரில்லாத காலத்தில் அது வரலாற்றுத் துயரத்தோடு பெரிதாகப் பேசப்படும். ஏனென்றால் என்றாவது ஒருநாள் பகை மறப்புக்குத் தமிழ் மக்கள் சென்றே ஆகவேண்டும். இல்லையென்றால் பிரிவினைக்குச் செல்ல வேண்டும்.

பிரிவினைக்குச் செல்வதாக இருந்தால், அதற்கு மீண்டும் இன்னொரு ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். அல்லது பிராந்திய சக்தியான இந்தியாவோ சர்வதேசத் தரப்புகளோ வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ உதவ வேண்டும். அண்மைய சூழலில் அப்படிப் பிரிவினைக்கான சாத்தியங்கள் எதுவுமே தெரியவில்லை. இதைக் கடந்து ஆச்சரியமாக, அபூர்வமாக ஏதாவது நிகழ வேண்டும் என்றால் அது சர்வதேச அரசியற் பரப்பில் அசாத்தியமான மாற்றங்கள் நிகழ்ந்தாலே நிகழும். ஆனால் அது முயற்கொம்பு

இப்படியெல்லாமிருக்கும்போது மேலும் பிடிவாதமாக இனவாதத்திலேயே பிடித்துத் தொங்குவது, அதை அரசியல் முதலீடாக்கி, தமது கதிரையைப் பிடித்துக் கொள்வதற்கான எத்தனமின்றி வேறென்ன?

மேலோட்டமாகப் பார்க்கும்போது தொல்பொருட் திணைக்களத்தின் மூலம் பௌத்த புனித இடங்கள் என அரசு காணிகளை அபகரிக்கிறது. படைகளை வலுவாக்கம் செய்கிறது. பௌத்த விகாரைகளைத் தமிழர் பகுதிகளில் கட்டுகிறது. மாகாண சபையின் மிஞ்சிய அதிகாரங்களைக் குறைக்கப்பார்க்கிறது. தீர்வை வழங்காமல் பின்னடிக்கிறது - ஏமாற்றுகிறது என்பதெல்லாம் நம்முடைய ரத்தத்தைச் சூடாக்கும் விடயங்களே. அத்தனையும் எதிர்ப்பரசியலுக்கு (வாய்ப்பேச்சுக்கு) மட்டுமல்ல, ஆயுதப்போராட்டத்துக்கே உரிய காரணங்கள்தான்.

அப்படியென்றால் மீண்டும் ஆயுதப் போராட்டத்தையே நாம் ஆரம்பித்து விடலாமே. அதற்கான பயிற்சி பெற்றவர்கள் கூடத் தாராளமாக உள்ளனர் அல்லவா. விடுதலை இயக்கங்களில் இருந்தவர்களில் பலர் கட்சித் தலைவர்களாகக் கூட உள்ளனர். இப்படித் தெருத்தெருவாகச் சுலோக அட்டையை ஏந்திக் கொண்டு அகிம்சைக் குரல் எழுப்பிக் கொண்டு நிற்பதை விட, பொலிசாரே மக்கள் பிரதிநிதிகளை கழுத்தில் பிடித்து இழுத்துக் கொண்டுபோய் சிறையிடுவதை விட ஆயுதப்போராட்டத்தை ஆரம்பித்து, பழைய மாதிரி இதையெல்லாம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாமே!

அதற்கு யாரும் தயாரில்லை. அதிகம் ஏன், வடக்கு-கிழக்கு இணைப்பைப் பற்றிப் பேசுவோரில் 90 வீதமானோர் கிழக்கு மாகாணத்தையே கண்ணாற் காணாதவர்கள். அங்கே சென்று தங்கி, அந்த மக்களுடைய பிரச்சினை என்ன? வாழ்க்கைச் சவால்கள் எப்படியானவை? ஏன் வன்னியின் ஆழ் கிராமங்களிலுள்ள மக்களின் வாழ்க்கை எப்படி உள்ளது என்பதையெல்லாம் அறியாதவர்களாகவே உள்ளனர். அப்படிச் செய்வதற்கு தயராக இல்லாதவர்கள்.

ஆனால், அனைவரும் போர் வீரர்களைப் போலவே பேசுகிறார்கள். பத்திரிகைகளுக்குப் பிரகடன - அறைகூவல் அறிக்கைகளை விடுக்கிறார்கள். வரலாற்றில் தோல்வியே காணாத, தவறே இழைக்காத பெருந்தலைவர்களைப்போல பாவனை செய்கிறார்கள். இந்தப்போக்கினால் தமிழ்ச் சமூகத்துக்கு முன்னுள்ள எந்தப் பிரச்சினையும் தீரவில்லை. தீரப்போவதுமில்லை.

சர்வதேச சமூகத்தினரை இவர்கள் எத்தனையோ தடவை சந்தித்திருக்கிறார்கள். உலகம் முழுவதும் அரசியற் பயணங்களைச் செய்துள்ளனர். அப்படியென்றால், இவர்கள் இதுவரையில் திரட்டிய அரசியல் ஆதரவு என்ன? தமிழ்த் தேசத்துக்கான, தமிழர்களுடைய விடுதலைக்கான நம்பிக்கையும் உத்தரவாதமும் என்ன? அது எந்தளவானது? குறைந்த பட்சம் தமிழ் மக்களுடைய நெருக்கடிகளை விளக்கி, அவற்றைத் தீர்ப்பதற்கான சிறிய - மில்லி மீற்றர் அளவு அழுத்தத்தையாவது இதுவரையில் எங்காவது பிரயோகத்திருக்கின்றனரா?

இல்லவே இல்லை.

காரணம், சர்வதேச சமூகத்தின் தேவைகளும் நோக்கமும் வேறு. அதற்கு அப்பால் இலங்கையின் இனப்பிரச்சினைத்தீர்வுக்கு அது வேறொரு மார்க்கத்தைச் சொல்கிறது. அதனுடைய எதிர்பார்ப்பும் வலியுறுத்தலும் வேறு. அது என்ன வகைப்பட்டும் இணக்கத்துக்கும் தீர்வுக்கும் செல்லுங்கள். அது கடினமானது. நீண்டகால அடிப்படையிலானது. ஆனாலும் அதைச்செய்துதான் ஆகவேண்டும் என்கிறது. பதிலாக இவர்கள் செய்து கொண்டிருப்பது வேறு. இந்த இடைவெளியை எப்படி நிரப்புவது?

(19ஆம் பக்கம் பார்க்க)

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

# மாறாதா எங்கள் அரசியல் போக்கு?

எனவேதான் போருக்குப் பிறகான அரசியலும் ஊடகச் செயற்பாடுகளும் மாற்றமடைய வேண்டும். அது மீளிணக்கத்தையும் பகைமறப்பையும் அடிப்படையாகக் கொள்ள வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தப்படுகிறது. சர்வதேச சமூகம் போருக்கு மறைமுகமாகப் பங்களிப்புச் செய்திருக்கலாம். ஆனால், நல்லிணக்கத்துக்கும் பகை மறப்புக்கும் அமைதித் தீர்வுக்குமாக அது வெளிப்படையாகப் பங்களிக்கிறது. அதற்கான நிதி, ஆலோசனைகள், வழிமுறைகள், செயற்பாட்டுக்கான உந்துதல்கள் எனப் பலதையும் செய்கிறது. அதாவது சமாதானத்துக்கும் தீர்வுக்குமான சூழலை உருவாக்கும் வகையில் இலங்கையின் அரசியல் செயற்பாடுகள் அமைய வேண்டும் என. இதை இன்னும் அழுத்தமாகவும் நேரடியாகவும் சொன்னால், சமாதானத்துக்கான அரசியலை முன்னெடுக்க வேண்டும் என்பதாகும்.

ஆனால், நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம்?

சமாதானத்துக்கான எந்த வேலைத்திட்டமும் கட்டமைப்பும் எந்தத் தரப்பினாலும் முன்னெடுக்கப்படவில்லை. அரசும் செய்யவில்லை. எதிர்த்தரப்பான தமிழ்பேசும் தரப்பினரும் செய்யவில்லை. தொடர்ந்து பல்வேறு வகையிலும் ஒடுக்குதலுக்குள்ளாகும் தமிழ்பேசும் சமூகங்களும் இதில் ஆர்வம் கொள்ளவில்லை.

எது நமக்குத் தேவையோ அதற்காக, அதைப் பெறுவதற்காக நாம் முயற்சிப்போம், பாடுபடுவோம் அல்லவா. அதற்கான வழிமுறைகளைக் காண்போம் அல்லவா. ஆனால், சமாதானத்துக்காக அப்படி நாம் எதைச் செய்திருக்கிறோம். நம்முடைய முயற்சிகளும் பயிற்சிகளும் எப்படி உள்ளன? உண்மையில் ஒரு பத்துப் பேர் கூட சமாதானத்துக்காக அர்ப்பணித்து வேலை செய்வதற்குச் சேரவில்லை. இதன் மூலம் நாம் சமாதானத்தில் இன்னும் பற்றுக் கொள்ளவில்லை என்பது உறுதியாகிறது.

ஆனால் போருக்கான படையணிகள் பல உற்சாகமாக உருவாக்கப்பட்டன. பல்லாயிரம்பேர் போரில் ஈடுபடுத்தப்பட்டனர். முப்பது ஆண்டுக்கு மேலான காலம் செலவிடப்பட்டது. பல கோடி பணம் செலவழிக்கப்பட்டது. பல்லாயிரக்கணக்கான உயிர்கள் பலியிடப்பட்டன. பல ஆயிரக்கணக்கானோரின் உடல் உறுப்புகள் இழக்கப்பட்டன. கணக்கிட முடியாத அளவுக்கான இயற்கை வளச் சேதம் நிகழ்ந்தது. ஊர்கள் பல அழிந்தன. அந்தளவுக்கு யுத்தத்தைப் படு சீரியஸாக நடத்தினோம். அதில் தான் நம்முடைய அதீத விருப்பம் இருந்தது. அதற்குக் காரணம், ஒவ்வொரு தரப்பிற்குள்ளும் வளர்ந்திருந்த பகையுணர்ச்சியே. அந்தப் பகை உணர்ச்சியை உருவாக்கிய இனவாதமே.

ஆனால், சமாதானத்தை முன்னெடுப்பதற்கு ஒரு சிறிய அணி கூட விசுவாசமானதாக - அர்ப்பணிப்போடு இல்லை. அதில் யாருக்கும் சீரியஸான நாட்டமில்லை. இதுதான் உண்மை. எழுந்தமானமாக ஒருவரையொருவர் குற்றம் சாட்டுகிறோம்.

சமாதானத்துக்கான முன்நிபந்தனை, இனவாதத்தை முற்றாகக் கைவிட வேண்டும் என்பதாகும். அகத்திலும் புறத்திலும் அதை விலக்கிக் கொள்ள வேண்டும்.

இது எளிதல்ல. மிகக் கடினமானது. அதற்கான பயிற்சி வேண்டும். நிதானம் வேண்டும். எந்த நிலை வந்தாலும் அதை ஏற்றுத் தாங்கிக் கொண்டு உறுதியாக நிற்கும் ஆற்றல் வேண்டும். இதற்கான பேராளுமை இல்லை என்றால் இது சாத்தியப்படாது. அது பெருந்தலைவர்களால்தான் முடியும். அந்தப் பெருந்தலைவர்கள் தங்களுடைய நிதானத்தினாலும் விரிந்த இதயத்தினாலும் பெருந்தலைவர்களாக வரலாற்றில் திரண்டு எழுகின்றவர்கள். சூழலின் கைதியாகக் கட்டுப்படாமல், சூழலைத் தமது ஆளுமையினால் கைக்கொண்டு வெற்றியைக் காண்பவர்கள். அவர்களுடைய வெற்றியே மக்களின் வெற்றியாக, வரலாற்றின் வெற்றியாக அமைவதுண்டு. இதைப் புரிந்து கொள்வதற்கும் ஏற்றுக் கொள்வதற்கும் நுட்பமான உலக அறிவும் பொறுமையும் அவசியம். பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற திடசித்தமும் நேர்மையும் முக்கியம்.

எதிர்த்தரப்புத் தொடர்ந்தும் சீண்டிக் கொண்டிருக்கும் போதும் எல்லை மீறிக் கொண்டிருக்கும்போதும் எப்படி சமாதானத்தில் பற்று வைக்க முடியும்? எப்படி அமைதியாக இருக்க முடியும்? இதையிட்டெல்லாம் மீளிணக்கத்தை வலியுறுத்துகின்ற சர்வதேச சமூகமும் கண்டு கொள்வதில்லை. ஆகவே நாம் தவிர்க்க முடியாமல் எம்மீது திணிக்கப்படும் இனவாதத்தை எதிர்த்துத்தானே ஆக வேண்டும் என்று கொதித்தெழுவதற்கே பலரும் முன்நிற்பர். இதுதான் இப்போதும் நடக்கிறது. முன்பும் நடந்தது.

இப்படிக் கொதித்துக் கொண்டு குதிப்பதாலும் நாடாளுமன்றத்திலும் வெளியிலும் நாம் உச்சக் குரலில் கர்ஜிப்பதாலும் எந்த மாற்றமும் நிகழ்ந்து விடாது. இதுதான் வரலாற்றுப் படிப்பினை. மிகப் பெரிய அர்ப்பணிப்போடும் மிகப் பெரிய இழப்புகள், சேதங்களோடும் நடத்தப்பட்ட ஆயுதப்போராட்டப் படிப்பினைகளும் இதையே நமக்குரைக்கின்றன.

என்பதால்தான் போரையும் பகைமுரணையும் தவிர்க்குமாறு திரும்பத்திரும்ப உலகம் வலியுறுத்துகிறது. வரலாறு அழுத்தமாகக் கட்டளையிடுகிறது. நம்முடைய சொந்த அனுபவங்கள் வலியுறுத்துகின்றன. நமது மக்களின் நிலையும் எதிர்காலமும் இதையே கோருகிறது. தயவு செய்து சமாதானத்தில் பற்றுறுதி வையுங்கள். அதற்கான கட்டமைப்புகளை உருவாக்குங்கள். சமாதானத்தின் மீதான நம்பிக்கையை பல தரப்புக்கும் ஏற்படுத்துங்கள். அதன் மீது மக்களை ஈடுபடுத்துங்கள் என்று. இந்த வலியுறுத்தல் இலங்கைச் சமூகங்கள் அனைத்துக்கும் பொதுவானதாகும். அரசுக்கும்தான். ஆனால் அரசு அதைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்தும் இனவாதமாகச் செயற்படுகிறது என்பது மறுதலிக்க முடியாத உண்மையே. அரசு மட்டுமல்ல, சிங்களக் கட்சிகளும் தலைவர்களும்தான்.

இதை எதிர்கொள்ளும் நெருக்கடி தமிழ் மக்களுக்கும் ஏனைய தமிழ்பேசும் மக்கள் அனைவருக்கும் உள்ள பொதுப் பிரச்சினையாகும். இதற்கான பொறிமுறையையும் அணுகுமுறையையும் தமிழ்ச் சமூகமும் ஒட்டு மொத்தத் தமிழ்பேசும் சமூகத்தினரும் இணைந்து வகுக்க வேண்டும். அரசற்ற - அதிகாரமற்ற மக்கள் கூட்டமாக தமிழ்பேசும் சமூகத்தினர் இருப்பதால் சிறுபான்மை மக்கள் என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்படும் ஒடுக்குமுறையை ஒருங்கிணைந்தே எதிர்கொள்ள வேண்டும். இதற்கு குறித்த சமூகங்களைச் சேர்ந்த அல்லது அவர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் தலைவர்களும் அரசியற் கட்சிகளும் பிற அமைப்புகளும் முன்வந்து செயற்பட வேண்டும். அப்படிச் செய்யும்போதுதான் சர்வதேச சமூகத்தின் கவனத்தையும் ஆதரவையும் பெற முடியும்.

சர்வதேச சமூகம் தொடர்ந்தும் வலியுறுத்தும் (மீளிணக்கம், பகைமறப்பு, அமைதித்தீர்வு போன்ற) தொடர் செயற்பாட்டைச் செய்து கொண்டே அதனுடைய ஆதரவைக் கோர முடியும். அதாவது சமாதானத்துக்கான கட்டமைப்பையும் உறுதியான செயற்பாட்டையுமாகும். அதை நாம் செய்யாமல் பகைவளர்ப்பைத் தொடர்ந்தும் செய்து கொண்டு "தீர்வுக்கு ஆதரவு தாருங்கள், எங்களுடைய போராட்டத்துக்கு துணையிருங்கள்" என்று கேட்க முடியாது. கேட்டாலும் அதனால் பயன் ஏதும் ஏற்படப்போவதில்லை.

அரசும் சிங்களத் தரப்பும் இனவாத நடவடிக்கையைத் தீவிரமாக தொடர்ந்து செயற்படுத்தி, சமாதானத்தின் பக்கமாக தமிழ்ச்சமூகமோ தமிழ் பேசும் தரப்பினரோ சென்று விடாமல் தடுத்துக் கொண்டிருக்கின்றன. அவை அதை ஒரு பொறியாகவே பயன்படுத்திக் கொண்டிருக்கின்றன. இதில் அவற்றுக்கு எப்போதும் நிரந்தர வெற்றி உண்டு, அதற்குரிய அதிகார வாய்ப்பு அவற்றுக்குள்ளது.


ஆனால், தமிழ் பேசும் மக்களுக்கு சமாதானத்தை விட்டால், அமைதித் தீர்வை விட்டால் வேறு வழியில்லை. எதிர்ப்பு அரசியலும் போர் அரசியலும் நம்மை மேலும் பலவீனப்படுத்தும் நிலையே உள்ளது.

ஆகவே அரசினதும் சிங்கள அதிகாரத் தரப்பினதும் இனவாதத்திற்குள் தொடர்ந்தும் நாமும் மூழ்கிக் கிடக்காமல், அந்தப் பொறிக்குள் சிக்கி விடாமல் நிதானமாகவும் உறுதிப்பாட்டுடனும் சமாதானத்துக்கான முன்னெடுப்பைச் செய்ய வேண்டும். எந்த நிலையிலும் நாம் சமாதானத்தைத் தவிர வேறொன்றைப் பெற மாட்டோம் என. கடவுளிடம் பிடிவாதமாகப் பிரார்த்தனை செய்வதைப்போல. கல்லையும் கனிய வைக்கும் பற்றும் உறுதிப்பாடும் அது.

அப்படி உறுதிப்பாட்டுடன் நிற்கும்போதே நம்மை உலகம் திரும்பிப் பார்க்கும். எந்த நிலையிலும் சமாதானத்தின் பக்கமாக, அமைதித்தீர்வின் பக்கமாக பற்றுக் கொண்டு நிற்கும் மக்கள் என்ற மதிப்பு நமக்கு ஏற்படும்.



# அகம், புறம், சங்க(ம)ம்
# முல்லையும் பூத்தியோ



ஆனந்தன் வசந்தா
கிருஷ்ணமூர்த்தி

மாக்கடல் யாவும் பாலை ஆயின
இமையம் சரிந்து சரளையாய்க் குவிந்தது
கங்கை முதலாம் நதிகள் வறண்டன
காயல் ஏரி கிணறெலாம் தூர்ந்தன
தமிழ்த்தாய் ஆனவள்
முழங்கால் மடக்கி மண்டியிட்டமர்ந்து
கொடுவாள் செருகித் தற்கொலைப் பட்டாள்
தமிழினப் பெண்டிரின் தாலிகள் பெருகின
பாரகம் அடங்கலும் பரிபவம் அடர்ந்தது
இல்லை இனிமேல் எவர்க்கும் விடியல்
இருந்தென்ன போயென்ன இனி நாம் ஈண்டு

**நாஞ்சில் நாடன்**

இனப்படுகொலைகள் முடிந்து 15 வருடங்கள் கழிந்து விட்டன. காலத்தைப் போல ரணங்களை மழுங்கடிக்கும் மருந்து வேறு இருக்க முடியாது. இன்னும் எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. 2009 ஆம் வருடம் மே மாதம் மாபெரும் படுகொலை நடந்த பொழுது நான் பெங்களூரில் வேலை செய்துகொண்டிருந்தேன். அங்கே என்னுடன் பணிபுரிந்த அண்டை மாநிலத்தை சேர்ந்த நண்பர் ஒருவர், "என்னப்பா உங்கள் ஆளை போட்டு தள்ளிவிட்டார்களாமே?, இனி என்ன போர் முடிந்தது தானே "என்று கேலியாக சொன்னார். அப்பொழுது இப்போது இருப்பதைப் போன்று சமூக ஊடகங்கள் எல்லாம் கிடையாது. அலுவலகத்தில் உடனடியாக செய்திகளைப் பார்த்தேன். ஆம் எது நடக்கக் கூடாது என்று நாங்களெல்லாம் எதிர்பார்த்தோமோ அது நடந்தே விட்டது. அந்தக் கணத்தில் திசையெங்கும் இருள் எங்கும் வெறுமை. அப்படி ஒன்று ஒருவேளை நடக்குமானால் பூமித்தாய் தன்னைத்தானே அழித்துக்கொள்வாள் என்றும் ,அநீதிக்கு எதிராக உலகமெங்கும் கண்டனக்குரல்கள் சதிகாரர்களின் குரல்வளையை நெரிக்கும் என்றெல்லாம் நினைத்திருந்தேன். ஆனால் அப்படி ஒன்றும் நடக்கவில்லை. உலகம் எப்பொழுதும் போல் எந்த ஒரு ஆரவாரமின்றி இயங்கத் தொடங்கியது. எனக்குத்தான் என்ன செய்வதென்று தெரியவில்லை. இந்த இயலாமையின் கையறு நிலையை எப்படிக் கடந்து செல்வது. எப்போதும் போல இந்த முறையும் இலக்கியமே உதவி செய்தது. புறநானூற்றினை புரட்டிய போது , தலைவன் இறந்தவுடன் கையறு நிலையை எடுத்துச் சொல்லும் இந்த பாடலை படித்த ஞாபகம் இன்னும் நெஞ்சிலிருக்கிறது.

புறநானூறு, 242. (முல்லையும் பூத்தியோ?)
பாடியவர்: குடவாயில் கீரத்தனார்.
பாடல் தலைவன்: ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன்.
திணை: பொதுவியல்.
துறை: கையறு நிலை.

**பொதுவியல் திணை :** வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண் என்ற ஒன்பது புறத்திணைகளிலும் கூறப்படாமல் எஞ்சி இருக்கும் பிற விடயங்களை விடயங்களை தொகுத்துக் கூறுவது பொதுவியல் திணையாகும்.

**கையறு நிலை துறை :** தம் மன்னன் மறைவிற்காகக் குடிமக்களும், சான்றோரும், வீரர்களும் வருந்திப் பாடுவது கையறுநிலை என்னும் துறை ஆகும்

**பாடலின் பின்னணி:-** ஒல்லையூர்க் கிழான் மகனான மன்னன் பெருஞ்சாத்தன் போரில் இறந்ததைக் கண்ட புலவர் குடவாயில் கீரத்தனார் மிகவும் வருத்தப்பட்டார். தன் கையறு நிலையின் வருத்தத்தை வெளிப்படுத்தும் வகையில் இந்தப் பாடலை இயற்றினார். தன் கொடியில் பூத்துக்கிடந்த ஒரு முல்லைக் கொடியைப் பார்த்து, "ஒல்லையூர்க் கிழான் மகன் என் அரசன் பெருஞ்சாத்தன் இறந்த இந்நேரத்தில் நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் பெருந்துயரத்தில் உள்ளனர். எங்கள் துயரத்தையெல்லாம் அறியாமல் நீ பூத்திருக்கிறாயே? துயரத்தில் தோய்ந்திருக்கும் இவ்வேளையில் யார் உன் பூக்களைச் சூடப் போகிறார்கள்?" என்று தனது கையறு நிலையை இப்பாடலில் புலவர் குடவாயில் கீரத்தனார் கூறுகிறார்.

இளையோர் சூடார் வளையோர் கொய்யார்
நல்யாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்
பாணன் சூடான் பாடினி அணியாள்
ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த
வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ, ஒல்லையூர் நாட்டே?

**பொருள்:-**

இளைஞர் அணிய மாட்டார் கன்னியர் பறிக்க மாட்டார்
நல்ல யாழை வாசிக்கும் பாணனும் தண்டினை
பறித்து சூட மாட்டான் பாணர் குல மகளிரும் அணிய மாட்டாள்
ஆண்மையுடன் போரிலே பகைவர்களைக் கொன்ற
வலிமையான வேலினைக் கொண்ட ஒல்லையூர்கிழான்
மகன் பெருஞ்சாத்தன் இறந்த பிறகு
முல்லையே நீ பூத்திருக்கிறாயா , இந்த ஒல்லையூர் நாட்டில் ?

ஒல்லையூர் நாட்டிற்கு பதிலாக ஈழத்தையும், மாவீரன் சாத்தன் இடத்தில் பிரபாகரனையும் இந்த பாடலில் நிரப்பி படித்தோமானால் கையறு நிலையை அறிந்துகொள்ள முடியும். முள்ளிவாய்க்கால் நிலத்தில் ஆயிரமாயிரம் அப்பாவி மக்கள் கொன்றழிக்கப்பட்டனர். இந்த நூற்றாண்டின் மாபெரும் இன அழிவிற்கு பின்னே உலக நாடுகள் அனைவரின் கைகளிலும் ரத்தம். அசோகமித்திரனின் பதினெட்டாவது அட்சரக்கோடு நாவலின் சாராம்சமென ஜெயமோகன் சொல்லுவார் "இந்த பாதகங்கள் எதையும் நான் செய்யவில்லை. ஆனால் இவை எல்லாவற்றுக்கும் நானும் கூட்டுப்பொறுப்புள்ளவன்". ஆம் நமக்கும் இந்தக்கொடுமையில் பங்குண்டு.



# ஆஸ்திரேலிய தொழிலாளர் கட்சியின் (ALP) அரசாங்கத்தின் இரண்டு வருட நிர்வாகம்: ஒரு பிரதிபலிப்பு

● கோகுலன், சிட்னி

ஆஸ்திரேலிய தொழிலாளர் கட்சி (ALP) அரசாங்கத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவைக் குறிப்பிடும் போது, அவர்களின்நிர்வாகத் திறன், சாதனைகள், சவால்கள் மற்றும் சொதப்பல்களை மதிப்பீடு செய்வது அவசியம்.

**ஒரு முக்கிய நிகழ்வு:**

2022 ஆஸ்திரேலிய பொதுத் தேர்தலின் மூலமாக, ஏறக்குறைய ஒரு தசாப்த கால எதிர்ப்பிற்குப் பிறகு ALP கட்சியை, ஆஸ்திரேலிய மக்கள் அரசாங்க அதிகாரத்திற்குகொண்டு வந்தது முக்கியமான நிகழ்வு மட்டுமல்லாமல், ஆஸ்திரேலியாவின் எதிர்காலத்தை மேம்படுத்த மக்கள்வழங்கிய ஓர் அரிய வாய்ப்பு எனலாம். கட்சியின் தலைவரானஅந்தோனி அல்பானீஸ், ஒரு லேபர் கட்சி பிரதமராக, 2013-க்குப் பிறகு, அரசாங்கத்தை இப்போது மேற்பார்வைசெய்கிறார்.

**கொள்கை முன்னுரிமைகள்:**

அல்பானீஸ் தலைமையிலான அரசாங்கத்தின் இரண்டாவது ஆண்டில், ALP பல முக்கியமான பகுதிகளில் கவனம் செலுத்தியது குறிப்பிடத்தக்கது.

**1. காலநிலை மாற்றம் பற்றிய நடவடிக்கை:**

புதுப்பிக்கத்தக்க ஆற்றல், கார்பன் உமிழ்வு குறைப்பு (Net Zero by 2050) மற்றும் சர்வதேச ஒப்பந்தங்கள் வலியுறுத்தும்லட்சிய காலநிலை மாற்ற இலக்குகளுக்கு கட்சியின்கொள்கைகள் வாயிலாக உறுதிபூண்டுள்ளமை பாராட்டத்தக்கது.

ஆரம்ப முயற்சிகளில் - சுத்தமான புதப்பிக்கத்தக்க எரிசக்திஉட்கட்டமைப்பில் முதலீடு செய்தல், மின்சார வாகனங்களைஏற்றுக்கொள்வதை ஆதரித்தல் மற்றும் தொழில் துறைகளில்புதுப்பிக்கத்தக்க ஆற்றல் கொள்முதல் நடைமுறைகளைஊக்குவித்தல் ஆகியவை அடங்கும்.

**2. சமூக நீதி:**

உடல்நலம் மற்றும் மருத்துவக் கட்டமைப்பு சீர்திருத்தங்கள், கல்விக்கு அதிக நிதி ஒதுக்கீடு மற்றும் மலிவு விலையில்வீடுகள் உள்ளிட்ட சமூக நீதிக்கான திட்டங்களை ALP முன்னெடுத்தது. சமத்துவமின்மையைக் குறைக்கவும், அன்றாட ஆஸ்திரேலியர்களின் வாழ்க்கையைமேம்படுத்தவும் முயற்சிகள் செய்யப்பட்டன.

மருத்துவமனைகளுக்கான நிதி அதிகரிப்பு, நோயாளிகளின் காத்திருப்பு நேரம் குறைப்பு மற்றும் அத்தியாவசிய மருத்துவ சேவைகள் விரிவாக்கம் போன்றவை குறிப்பிடத்தக்கமுயற்சிகள் எனலாம்.

பதிவுசெய்யப்பட்ட செவிலியர்கள் எல்லா நேரங்களிலும் தளத்தில் இருப்பதை உறுதி செய்வதன் மூலமும், பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலமும் முதியோர் பராமரிப்பை மேம்படுத்த ALP உறுதியளித்தது.

**3. பொருளாதார மீட்பு:**

கோவிட் தொற்றுநோய் காலத்திற்குப் பிறகு பொருளாதாரமீட்பு ஒரு முதன்மையான பணியாக இருந்தது.

வணிகங்கள், தொழிலாளர்கள் மற்றும் பாதிக்கப்படக் கூடியசமூகங்களை ஆதரிப்பதற்கான நடவடிக்கைகளை ALP செயல்படுத்தியது. வேலை வாய்ப்பு உருவாக்கம் மற்றும் பொருளாதாரஸ்திரத்தன்மைக்கு அவர்கள் கொடுத்த முக்கியத்துவம் வாக்காளர்களிடம் எதிரொலித்தது.

**4. கல்வி நிதி ஒதுக்கீடு:**

பள்ளிகளை மேம்படுத்தவும், ஆசிரியர் பயிற்சியை மேம்படுத்தவும், மாணவர்களுக்கு சமமான வாய்ப்புகளை வழங்கவும் நிதி ஒதுக்கீடு செய்தது.கல்வி கிடைப்பதில் ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதிலும், அனைத்து ஆஸ்திரேலியர்களுக்கும் தரமான கல்வியைஉறுதி செய்வதிலும் கவனம் செலுத்தப்பட்டமை பாராட்டத்தக்கது.

**5. ஊழல் எதிர்ப்பு ஆணையம்:**

அரசியல்வாதிகள் மற்றும் அரசு ஊழியர்களின் ஊழலைத் தீர்ப்பதற்காக தேசிய ஊழல் தடுப்பு ஆணையத்தை நிறுவுவதற்கு லேபர் அரசாங்கம் உறுதியளித்துசெயல்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

**6. சர்வதேச உறவுகள்:**

சீனா, அமெரிக்கா மற்றும் அண்டை நாடுகளுடன் ஏற்பட்டிருந்த சிக்கலான உறவுகள் மேம்படுவதற்கான அணுகுமுறை மற்றும் ஒத்துழைப்பு தொடர்பான நன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

**சவால்கள் மற்றும் விமர்சனங்கள்:**

எந்த அரசாங்கமும் சவால்கள் இல்லாமல் இல்லை என்பதுஆஸ்திரேலிய லேபர் கட்சிக்கும் பொருந்தும்.




**1. பூர்வீகக்குடிமக்களின் குரல் வாக்கெடுப்புத் தோல்வி:**

பூர்வீகக் குரல் வாக்கெடுப்பின் தோல்வியின் ஒட்டு மொத்தச்சுமையையும் ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள் சுமந்துசெல்ல வேண்டிய சூழ்நிலையில் உள்ளனர். பொது வாக்கெடுப்பு அரசியலமைப்பை மாற்றியமைக்கவும், பழங்குடியின சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்றத்திற்கு குரல் கொடுக்கவும் முயன்றது. துரதிர்ஷ்டவசமாக, 60% க்கும் அதிகமான ஆஸ்திரேலியர்கள் இல்லை என்று வாக்களித்தனர்.

ஆஸ்திரேலிய பொதுச் சமூகம் இன்றளவும் இன-நிறவாதத்தில் உழல்வதும், அரசாங்கம் பொதுமக்களுக்குதெளிவான விவரங்களை அளிக்க இயலாததும், எதிர்க்கட்சியினரின் படுமோசமான பிரச்சாரங்களை எதிர்கொள்ள முடியாத நிலையும் ஒரு பெரும் பின்னடைவு.

**2. விலைவாசி நெருக்கடி:**

அதிகரித்து வரும் பணவீக்கம், வீட்டு விலைகள் மற்றும் எகிறிப்பாயும் தினசரிச் செலவுகள் ஆஸ்திரேலியர்களைப் பாதித்துள்ளன. இந்த சிக்கல்களைத் திறம்பட தீர்க்க ALP இடம் இருந்து திட்டங்கள் எதுவும் செயல்பாட்டில் இருப்பதாகத் தெரியவில்லை.

**3. காலநிலைக் கொள்கை தெளிவின்மை:**

காலநிலை நடவடிக்கைக்கு அர்ப்பணிப்புடன் இருந்த போதிலும், சில விமர்சகர்கள் ALP இன்கொள்கைகளை தெளிவற்றதாகக் கருதுகின்றனர். பொருளாதார வளர்ச்சியுடன், சுற்றுச்சூழல் கவலைகளைசமநிலைப்படுத்துவது ஒரு சவாலாகவே உள்ளது.

நாட்டின் காலநிலை இலக்குகளை அடைவதற்கு தெளிவான பாதைகளை வகுப்பதற்கான போக்கும், ஊக்கமும், அழுத்தமும் அரசாங்கத்திடம் இல்லை எனலாம்.

**4. ஊடக மற்றும் பொதுமக்கள் கருத்து:**

ALP தீவிர ஊடக விமர்சனத்தை எதிர்கொள்கிறது. ஊடகக் கதைகளின் அடிப்படையில் பொதுமக்களின் கருத்துமாறலாம். தவறான தகவல்கள் பரவுவதை கட்சி தீவிரமாக எதிர்க்க வேண்டும் என்று விமர்சகர்கள் வாதிடுகின்றனர்.

**5. சிக்கலான வெளிநாட்டு உறவுகள் மற்றும் பாலஸ்தீனத்தின் மீதான இஸ்ரேல் தாக்குதல்:**

காஸாவில் முழு போர்நிறுத்தத்தை ஆதரிக்க ALP கட்சியின் உள்ளிருந்து கோரிக்கைகளையும், அழுத்தங்களையும் எதிர் கொண்டுள்ளது.

நியூ சவுத் வேல்ஸில் உள்ள ஏறக்குறைய 40 தொழிற்கட்சி கிளைகளும், தொழிற்கட்சியின் இளைஞர் கிளைகளும் ஒருமனதாக காஸாவில் நிரந்தர போர்நிறுத்தத்தை ஆதரிக்க மத்திய அரசுக்கு அழைப்பு விடுத்தனர். இந்தத் தீர்மானம்அடித்தட்டு மக்களின் கவலையை பிரதிபலிக்கின்றது என்பதே உண்மை.

ஆஸ்திரேலிய அரசாங்கம்,நியூசிலாந்து மற்றும் கனேடிய அரசாங்கங்களுடன் காஸாவில் ஒரு நிலையான போர்நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்தபோது, தொடக்கத்தில் இஸ்ரேலை ஆதரித்த ALP யின் கொள்கையில் மாற்றம் ஏற்பட்டது தெளிவாகத் தெரிந்தது.

**முன்னோக்கிச் செல்லும் பாதை:**

ALP தனது மூன்றாவது ஆண்டில் நுழையும்போது, அவர்கள் தங்கள் வாக்குறுதிகளுக்கு உண்மையாகஇருக்க வேண்டும் என்கிற நிர்ப்பந்தம் முன்னிட்டு நிற்கிறது.

ஆஸ்திரேலிய மக்கள் வெளிப்படைத்தன்மை மற்றும் முற்போக்கான திட்டங்கள், அர்ப்பணிப்பு ஆகியவற்றை எதிர்பார்க்கிறார்கள். ALP இன் எதிர்காலம், வரும் ஆண்டில் அவர்களின் செயல்களால் வடிவமைக்கப்படும்.

கடந்த தேர்தலில் ALP பெரும்பான்மை அரசாங்கத்தைப் பெற்ற போதிலும், தொழிற்கட்சி மற்றும் லிபரல்-தேசியகூட்டணி ஆகிய இரண்டும் முதன்மை வாக்குகளில் சரிவைச்சந்தித்தன. ஆஸ்திரேலியர்களில் மூன்றில் ஒருவர் சிறுகட்சிகள் அல்லது சுயேச்சைகளுக்கு வாக்களித்துள்ளனர். இது வாக்காளர்களின் மனமாற்றத்தை காட்டுகின்றது.

இரண்டாண்டு முடிவில் அரசாங்கத்தின் மாறுபட்ட கருத்துக்களை மக்கள் கொண்டுள்ளனர். முக்கியமான பகுதிகளில் முன்னேற்றம் அடைந்த போதிலும், ஆஸ்திரேலிய தொழிலாளர் கட்சியின் நிர்வாகத்தின் மீதுதொடர்ந்து சவால்களும், விமர்சனங்களும் முன்வைக்கப்படுகின்றன. முடிவில், ஆஸ்திரேலிய பிரதமர் தலைமையிலான அரசாங்கத்தை, லேபர் கட்சியின் நிர்வாகத்தை மக்கள் மிக உன்னிப்பாகக் கவனித்துவருகின்றனர்.

# குருப் பெயர்ச்சி பலன்கள்

## மேடம்

குருப்பெயர்ச்சி மூலம் உங்களின் பொருளாதாரம் அடியோடு மாறப்போகிறது. கடனை எல்லாம் அடைக்க போகிறீர்கள். சுப செலவுகளைச் செய்யப் போகிறீர்கள். சொந்த நிலம், வீடு என்று வாங்கப் போகிறீர்கள். நல்லதே நடக்கும். அடுத்த 18 மாதங்கள் உங்களின் வாழ்க்கை புதிய உச்சத்தில் இருக்க போகிறது. மே 13, 2025 வரை நீங்கள் சாதனைகளைக் குவிக்கப் போகிறீர்கள். குருவின் பார்வை உங்கள் ராசிக்கு 6, 8, 11வது வீட்டில் இருப்பதால் அதிர்ஷ்டம் அடிக்கப் போகிறது. போக்குவரத்து, பயணங்களில் மட்டும் கொஞ்சம் கவனமாக இருந்தால் போதும்.

## இடபம்

ரிஷப ராசிக்கு இத்தனை காலம் 12ஆம் இடத்தில், அதாவது மேஷ ராசியில் இருந்தார் குரு. இப்போது ஜென்ம இடத்தில் குருவாக மாறி உள்ளது. அவர் 5, 7, 9 இடங்களைப் பார்க்கிறார். இந்த குரு உங்கள் வீட்டிற்கு வருவதால் நீங்கள் இனி செய்வதில் எல்லாம் கொஞ்சம் இடர்பாடுகள் வரும். எதாவது ஒரு விஷயத்தைச் செய்ய நினைத்தால் அது தடங்கலாக மாறும். தொட்டதெல்லாம் தடங்கல் இருக்கும், கொஞ்சம் கஷ்டப்பட்டு முயற்சி செய்தால் கண்டிப்பாக அந்தக் காரியம் நடக்கும். தடங்கல்கள் மட்டுமே வருமா என்று கேட்க வேண்டாம். சில நல்ல விஷயங்களும் நடக்க போகின்றது.

## மிதுனம்

உங்களுக்கு 12 ஆம் வீட்டில் குரு பெயர்ச்சி ஆகிறார். இதனால் கண்டிப்பாக உங்களுக்கு நிறைய பண வரவு இருக்கும். நீங்கள் எதிர்பார்த்து இருந்த இடங்களில் இருந்து எல்லாம் பணம் வரும். நீண்ட நாட்களாக நீங்கள் கடன் கொடுத்து திரும்பி கொடுக்காதவர்கள் கூட இப்போது நீங்கள் கேட்காமல் பணம் கொடுப்பார்கள். இவ்வாறு காசு எவ்வளவு வந்தாலும் பணம் கையில் இருக்காது. வருகின்ற பணம் எல்லாம் செலவிற்கே போதுமானதாக இருக்கும். இதை சமாளிக்க நீங்கள் சுப செலவுகளை செய்யலாம். ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியம். ஒருமுறைக்கு இருமுறை யோசித்து எந்தவிதமான முதலீடுகளையும் செய்வது நல்லது. பணத்தைச் சேமிக்க முயற்சி செய்யுங்கள்.

## கடகம்

சந்திரனை ராசி அதிபதியாகக் கொண்டவர் கடக்க ராசிக்காரராகில், அதன் காரணமாகவே உங்களுக்கு இந்த குருப்பெயர்ச்சி பல விதமான நல்ல மாற்றங்களை ஏற்படுத்தும். முக்கியமாக பொருளாதார ரீதியாக நீங்கள் புதிய உயரத்தை தொடப்போகும் காலம் வரும். இத்தனை காலம் பணம் இல்லை, வேலை இல்லை, பார்க்கிற வேலையில் போதிய வருமானம் இல்லை என்று புலம்பிக்கொண்டு இருந்து இருப்பீர்கள். இனி அப்படி புலம்ப வேண்டாம். உங்களுக்கு இந்தக் குருப் பெயர்ச்சி மூலம் வாழ்க்கை மாறப்போகிறது. குருப்பெயர்ச்சி உங்களுக்கு ஆரோக்கியத்தில் நல்ல முன்னேற்றத்தை கொடுக்கும்.

## சிம்மம்

உங்கள் ராசிக்கு 10ம் இடத்தில் குரு வருகிறார். இதனால் உங்களுக்கு பண மழை கொட்டும் என்பார்களே அது இப்போது வரப்போகிறது. உங்களிடம் இதுவரை கடன் வாங்கி கொடுக்காதவர்கள் உடனே கொடுத்துவிடுவார்கள். மாத ஊதியம் பெறும் நபர்களுக்கு திடீரென 2- 3 மடங்கு சம்பளம் உயரும் வாய்ப்புகளும் கூட உண்டு. இந்த குருப்பெயர்ச்சி காரணமாக உங்களுக்கு குடும்பத்தில் இருந்த மனஸ்தாபங்கள் தீரும். கணவன் -மனைவி பிரச்சினை தீரும். ஆரோக்கியத்தில் இருந்த பிரச்சினைகள் சரியாகும். அரசியலில் இருப்பவர்கள் கவனமாக இருக்கவும்.

## கன்னி

இதுவரை 8இல் இருந்த குரு உங்களை போட்டு தாக்கிக்கொண்டு இருந்தார். இனிமேல் அவர் உங்கள் ராசிக்கு 9 இல் இருக்க போகிறார். அத்தோடு உங்கள் ராசியைப் பார்க்க போகிறார். இனி உங்களுக்கு பொருளாதாரம் உயரும். பணம் கொட்டும். வியாபாரம் தொடங்கினால் வெற்றி நிச்சயம், வீடு, நிலம் கிடைக்கும் வாய்ப்பு வரும். பெரிய மனிதர்கள் ஆசிர்வாதம் உறவு கிடைக்கும், இதுவரை வெளியே தெரியாமல் வாழ்ந்து கொண்டு இருந்த நீங்கள் இனிமேல் உலகிற்கே தெரியும் அளவிற்கு நீங்கள் பெரிய ஆளாக மாறும் காலம் வந்துவிட்டது. ரிஷப ராசி உங்களுக்கு எதிரி ராசி. அங்கே குரு இருப்பதால் கோபம் அதிகரிக்கும்.

## துலாம்

குரு உங்கள் ராசிக்கு 8 ஆம் இடத்தில் வருகிறார். குரு உங்களை பார்க்காமல் மறைகிறார் என்பதால் ஒரு சில நல்ல விஷ்யங்கள் நடக்கும். அதாவது வெளிநாடு போகும் வாய்ப்பு கிடைக்கும். ஆரோக்கியம் நன்றாக இருக்கும். குடும்பத்தில் நிலவி வந்த பிரச்சினைகள் குறையும். கணவன்- மனைவி அந்யோனியம் அதிகரிக்கும். திருமணம் கைகூடும். போக்குவரத்தில் கவனமாக இருங்கள். விபத்து ஏற்படும் வாய்ப்புகள் கூட உள்ளதால் கவனமாக இருக்கவும். பங்காளிகள் உறவில் சிக்கல்கள் ஏற்படலாம். பணத் தேவை அதிகம் இருக்கும். கையில் காசு நிற்காது. பணம் செலவாகிக்கொண்டு இருக்கும்.

## விருச்சிகம்

பொருளாதார ரீதியாக நிலவிய கடன்கள் சரியாகும். அடுத்த 18 மாதங்கள் உங்களின் வாழ்க்கை புதிய உச்சத்தில் இருக்க போகிறது. மே 13, 2025 வரை நீங்கள் சாதனைகளை குவிக்க போகிறீர்கள். வியாபாரம், தொழிலில் நல்ல முன்னேற்றம் கிடைக்கும். வெளிநாடு செல்லும் வாய்ப்பு உண்டாகும். குடும்ப உறவில் சிக்கல்கள் ஏற்படலாம். உங்கள் பேச்சில் கவனம் செலுத்துங்கள். அவசரப்பட வேண்டாம். போக்குவரத்து, பயணங்களில் மட்டும் கொஞ்சம் கவனமாக இருந்தால் போதும்.

## தனுசு

குருப்பெயர்ச்சியால் தனுசு ராசிக்காரர்களுக்கு செலவு அதிகரிக்கும். அதை சுப செல்வாக மாற்றுவது உங்கள் சாதுர்யம். எவ்வளவு பணம் வந்தாலும் நிம்மதி இல்லாத நிலை இருக்கலாம். தூக்கத்தில் பிரச்சினை இருக்கலாம். வீடு கட்ட வாய்ப்பு இருக்கிறது. ஆனால் நிலத்தகராறு ஏற்படும். கடந்த ஒரு வருடம் உங்களுக்கு சிறப்பாக இருந்தது. அந்த அளவிற்கு சிறப்பாக இல்லை என்றாலும் இந்த வருடம் பிரச்சினை இல்லாமல் செல்லும். பணத்தை சேமிக்க முயற்சி செய்யுங்கள் இல்லையென்றால் சுபச்செலவாக மாற்றுங்கள். நீங்கள் பேசும்போது கவனமாகப் பேச வேண்டும். யாருக்கும் எந்த வாக்குறுதியும் கொடுக்க வேண்டாம் உங்களுக்கே எதிராகச் செல்லலாம். கோபம் அதிகரிக்கும்.

## மகரம்

மிக மோசமான பொருளாதாரச் சூழ்நிலை, கழுத்தை நெரிக்கும் கடன், குழந்தைகள் வாழ்க்கையில் பிரச்சினை என்று பல பிரச்சினைகளில் இருந்த உங்களுக்கு பிரச்சினைகள் தீரப் போகின்றன. உங்களுக்கு குழந்தை பாக்கியம் ஏற்படும். திருமணம் கைகூடும். புதிய வீடு கட்டும் வாய்ப்பு வரும். நிலம் வாங்கும் யோகம் அடிக்கும். சொத்துக்களுக்கு அதிபதி ஆகும் வாய்ப்பு தேடி வரும். எதிர்காலத்தை புரட்டி போடும் அந்த ஒரு சம்பவம் கண்டிப்பாக நடக்கும். அதாவது திருமணத்திலோ, வேலையிலோ நீங்கள் எதிர்பார்க்காத பெரிய மாற்றம் நடந்து உங்கள் எதிர்காலத்தையே புரட்டிப் போடும்.

## கும்பம்

கும்ப ராசிக்கு கடந்த 7 வருடமாக கடுமையான கஷ்டம் நிலவி வந்தது. உறுதியாக ஒரு வேலை பார்க்க முடியாத நிலை இருந்தது. வருமானம் உயராமல் ஒரே வருமானத்தில் பல வருடம் வேலை பார்த்த நிலை இருந்தது. அதீத கடன் இருந்தது. குடும்பத்தில் கஷ்டம் இருந்தது. திருமண உறவில், காதல் உறவில் சிக்கல் இருந்தது. ஆரோக்கியத்தில் பிரச்சினை இல்லை என்றாலும் பயம் அதிகம் இருந்தது. எந்த விஷயத்திலும் முடிவு எடுக்க முடியாத மோசமான சூழல் நிலவியது. இதெல்லாம் இந்தக் குருப்பெயர்ச்சியோடு மாற போகிறது. உங்களுக்கு புதிய வேலைவாய்ப்பு கிடைக்கும். பதவி உயர்வு கிடைக்கும்.

## மீனம்

இனி எல்லாம் மாறும், திருமண வாழ்க்கையில் நிலவிய பிரச்சினைகள் சரியாகும். இத்தனை காலம் மன வாழ்க்கையில் நிலவிய மோதல்கள் முடிவிற்கு வரும். மீண்டும் கணவன் மனைவி ஒன்றாக வாழும் வாய்ப்பு கிடைக்கும். படிப்பில் நிலவிய பிரச்சினைகள் சரியாகும். வியாபாரம், தொழிலில் நல்ல முன்னேற்றம் கிடைக்கும். பதவி உயர்வு கிடைக்கும். கேட்ட இடத்திற்கு இடமாற்றம் கிடைக்கும். வெளிநாடு செல்லும் வாய்ப்பு உண்டாகும். குடும்பத்தில் இருந்த மனஸ்தாபங்கள் தீரும். உடல் ஆரோக்கியத்தில் பிரச்சினைகள் ஏற்படலாம். அரசியலில் இருப்பவர்கள் கவனமாக இருக்கவும்.

KALI MATHA ASTROLOGY CENTRE
MASTER KALIDAS
• Husband & Wife
• Children Education
• Overseas Travel
• Love Problem
• Property & Court Matters • Job Problems
• Health Problems
• Jealousy • Business
• Bad Luck • Evil Affection
• Enemy Problem
• Marriage Problem
AN EXPERT ASTROLOGER FROM INDIA HAS SERVICED MANY COUNTRIES
100% RESULT
SPECIALISED IN GIVING PROTECTION
OPEN 7 DAYS 9am-7pm
• FACE READING
• HAND READING
• DATE OF BIRTH
ALL RELIGIONS ARE WELCOME
IF YOU HAVE PROBLEMS, I HAVE 100% GUARANTEED SOLUTIONS
Meet one time & see your future changing 100%
Meet the master to find all your answers and get solutions for your life
WORLD FAMOUS ASTROLOGERS FROM INDIAN 9GENERATIONS & INTERNATIONAL SPIRITUAL HEALERS
WHO INHERITED ASTROLOGIST PRACTICE PASSED DOWN FROM GENERATIONS. HE WILL HELP IN ALL PROBLEMS AND WORKS WITH GODS AND GODDESS.
MASTER IS AN EXPERT IN:
Palm Reading, Face Reading, Photo Numerology, Name, Date of Birth Reading, Horoscope, 100 Years Shatabdi Panchangam, Lucky Stones & Vastu Shastra
He is specialized in giving protection by performing Poojas and Devi upasane. He performs all types of poojas for all problems
Call for 100% Confidential Appointment
0415 327 306 / 0415 599 857






Best Start
Best Life

## இலவச பாலர் பள்ளி: 2024 க்கு உங்களின் பிள்ளையைப் பள்ளியில்சேருங்கள்

விக்டோரியாவில் மூன்று, நான்கு வயதுடைய எல்லாப் பிள்ளைகளுக்கும் இலவச பாலர்பள்ளி கிடைக்கும். இதனால், ஒரு பிள்ளைக்கு ஆண்டொன்றிற்கு ஒருமுறை $2500 வரை குடும்பங்களுக்குச் சேமிப்பாகும்.

இரண்டு ஆண்டுகள் பாலர்பள்ளியில் கற்பது உங்கள் பிள்ளையின் திறன்களை மேம்படுத்த உதவுவதால் அந்தப்பிள்ளை பாடசாலையிலும், வாழ்க்கையிலும் திறமையாகச் செயற்படும்.

பாலர்பள்ளி அனைவருக்கும் இலவசமாகும். 'ஹெல்த் கெயர் காட்' (Health Care Card) அல்லது ஆஸ்திரேலிய குடியுரிமை (அல்லது இதைப்போன்றது) உங்களுக்குத் தேவையில்லை

**vic.gov.au/kinder/tamil** இல் அதிக தகவல்களைப் தேடிப்பார்க்கவும்.

THE EDUCATION STATE | VICTORIA State Government | Department of Education | KINDERGARTEN Victorian Government Approved

# CEYLON EXPRESS

## MONEY TRANSFER



- Best Rates Guarantee
- Same Day Bank Transfer
- Responsible Customer Support
- Easy, Quick Internet Money Transfer

127, Walker st, Dandenong | CONTACT : OSMAN 0402 396 052


Transco™
CARGO
=
#1
FREIGHT
FORWARDER
FROM AUSTRALIA TO SOUTH ASIA
ஒவ்வொரு வாரமும் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யும் ஒரே நிறுவனம்
ONLINE TRACKING
SMS & EMAIL ARRIVAL NOTICE NOTIFICATION
LIVE CHAT ON WEBSITE
TRANSCO APP
We love to deliver
IF YOU MISS THE CUT-OFF THIS WEEK
YOU CAN SEND IT NEXT WEEK
IT'S AS EASY AS THAT
Weekly shipments exclusive to Transco warehouses in Dandenong South and Campbellfield
206-208 Discovery Road
Dandenong South
(03) 9703 2255
45 Adrian Rd
Campbellfield
(03) 9357 7228
SYDNEY - 02 9897 0004
PERTH - 08 9452 7707
BRISBANE - 07 3219 0203
CANBERRA - 02 62821905
TASMANIA - 03 90174167
ADELAIDE - 08 8322 8825
DARWIN - 08 79790002
1300 1 TRANSCO (1300 187 267)
WWW.TRANSCOCARGO.COM.AU